விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 11 செவ்வாய்க்கிழமை (26.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 007

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே




# தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் ஆதரவு


## டி.டி.வி.தினகரன் தெரிவிப்பு



(சென்னை) ஈழத்தமிழர்களுக்கு தமிழக மக்களின் ஆதரவும் அரவணைப்பும் தொடர்ந்தும் இருக்கும் என டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார். மேலும் தமிழ் மக்களின் எதிர்கால அபிலாஷைகளுக்காக இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் அவர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(23-ம் பக்.)

நல்லூருக்கு முன்பாக

## பேருந்து - ஹயஸ் மோதி விபத்து



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோவிலுக்கு முன்பாக உள்ள வீதிவளைவில் அநுராதபுரத்திலிருந்து சுற்றுலா 24

2018ஆம் ஆண்டிலிருந்து

## வடக்கு மாகாண பாடசாலைகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்!

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இயங்கும் அனைத்து அரச பாடசாலைகளையும் எதிர்வரும் 2018ஆம் ஆண்டிலிருந்து காலை 8 மணிக்கு ஆரம்பிப்பது தொடர்பில் வடமாகாண சபை அவதானம் செலுத்தியுள்ளது.

வடமாகாண சபை உறுப்பினர்கள் பலர் வடமாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் கந்தையாவை சந்தித்து இதுதொடர்பில் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

தற்போது வடமாகாண பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாவதால் மாணவர்களும் ஆசிரியர்களும் பல பிரச் 24

யாழ். கச்சேரியடியில்

## மோட்டார் சைக்கிள்-பேருந்து விபத்து; ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரியடியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று இரவு 10 மணியளவில் யாழ்ப்பாணம் கச்சேரியடிப் 23

## தீர்வின்றி இன்றுவரை தொடர்கின்றது இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை

அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை இந்த வருடமும் தீர்வின்றி தொடர்கின்றது.

இந்தப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வினை காண்பதற்காக இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக அமைச்சர் மகிந்த 23

## உள்ளூராட்சி தேர்தல் வரை கூட்டணி அரசு தொடரும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டணி அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் அங்கம் வகிப்பதா இல்லையா என்று உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் தீர்மானிக்கப்படும் என அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் 23

## இலங்கைக்கு 66-வது இடம்

(கொழும்பு)

உலக உணவுப் பாதுகாப்பு சுட்டெண் பட்டியலில் இலங்கை 66-ம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது என ஏ.என்.ஐ ஊடகம் இதனைத் தெரிவித்துள்ளது.

உலகின் 113 நாடுகளுக்கு இடையில் பல்வேறு கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த சுட்டெண் உருவாக்கப்பட்டு தரப்படுத் 24

## உள்ளூர் பேருந்து சேவைகள் பழைய பேருந்து நிலையத்தில்

முதலமைச்சர் விக்னேஸ்வரன் உத்தரவு

(குருமன்காடு)

வவுனியாவின், உள்ளூர் பேருந்து சேவைகளை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து இரு வாரங்களுக்கு செயற்படுத்துவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் திருமதி விஜயலட்சுமி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 24

2018 ஜனவரி மாதம் முதல்


## அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் சம்பளம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு மேலும் ஒரு சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது. அரசாங்கம் பெற்றுக்கொடுத்த 23

## ஜோசப் பரராஜசிங்கத்தின் 12-ம் ஆண்டு நினைவேந்தல்

யாழில் நேற்று அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

வடகிழக்கில் மாமனிதர் ஜோசப பரராஜசிங்கத்தின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றுள்ளன.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்து நடத் 24

## தமிழ் - முஸ்லிம் உறவினை கட்டியெழுப்ப நாங்கள் தொடர்ந்து செயற்படுவோம்

த.தே.ம முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம், தமிழ்-முஸ்லிம் உறவினை கட்டியெழுப்ப செயற்பட்டமையால் தான் சுட்டுக்கொல்லப்பட்டார் என தெரிவித்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் - முஸ்லிம் உறவை கட்டியெழுப்ப நாங்கள் தொடர்ந்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 24

# போலி ஆவணங்களை தயாரித்தவர் கைது

(களுத்துறை)

பாணந்துறை-குணதிலக மாவத்தை பகுதியில் போலி ஆவணங்கள் தயாரிக்கும் நிலையம் ஒன்றை நடத்திச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை மாவட்ட குற்ற பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர் வசம் இருந்து போலி ஒப்பந்த பத்திரங்கள் எட்டு, போலி இறப்பர் முத்திரைகள் 13 உள்ளிட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர் பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 59 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

இவரை பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



விற்பனைக்கு
ஊர்க் கோழி (சேவல்)
விற்பனைக்கு உண்டு. விலை
உயிருடன் கிலோ 750/=
தொடர்பு:
0777278630
(1909)


## 13ஆம் ஆண்டு நினைவுநாள்



### நந்தகோபால் நவநீதன்

தோற்றம் 25.10.1993 மறைவு 26.12.2004

ஆசை முகமே நாம்
அரவணைத்த செல்வமே
தேடக் கிடைக்காத
தேனமுத திரவியமே
பால்வடியும் முகத்துடனே
செல்லமாய் சிரித்து நிற்பாய்
நீ சென்று பதின்மூன்று
ஆண்டுகள் ஆனதடா
ஆறாது உன் நினைவு எம் நினைவில்...


செபெஸ்ரியர் வீதி,
கற்கோவளம்,
பருத்தித்துறை

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
0776693531
(சி-937)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை புவனேந்திரன் (சின்னராசா)

(இளைப்பாறிய களஞ்சிய பொறுப்பாளர் நல்லூர் ப.நோ.கூ. சங்கம்)



சைவப்பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சின்னத்துரை புவனேந்திரன் (சின்னராசா) 23.12.2017 சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், மகேந்திரன் (கனடா), காலஞ்சென்றவர்களான இராசேந்திரன் (கொழும்பு), புவனராணி (கோண்டாவில்) மற்றும் குலேந்திரன் (மட்டக்களப்பு), செல்வராணி (கொழும்பு), தருமராணி (கொழும்பு), ஜெயராணி (சுவிற்சலாந்து), தவனேந்திரன் (பிரான்ஸ்), ஞானேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனலெட்சுமி (கனடா), தங்கவதி (கனடா), பத்மேஸ்வரன் (லண்டன்), பொன்னம்பலம் (கொழும்பு), தருமலிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற இராஜேஸ்வரி (பிரான்ஸ்) Conny (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், ரஜனி-சுரேந்திரன் (அமெரிக்கா), ரஞ்சன்-யசோதா (சுவிற்சலாந்து), சுபனா-சோதிலிங்கம் (அவுஸ்திரேலியா), சுலோச்சனா-ரவிச்சந்திரன் (கனடா), சுஜந்தன்-மயூரகா (கொழும்பு) ஆகியோரின் சித்தப்பாவும், டொரின், சன்றின் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும், மீரா-மதிதரன் (லண்டன்), இராஜு-காந்திகா (லண்டன்), வினிதா- மயூரதன் (சிங்கப்பூர்), யாதவன்-வித்தியா (நியூசிலாந்து), கிரிதரன்-தேனுகா (லண்டன்), டர்ஷிக்கா-கோகுலன் (சிங்கப்பூர்), சுவஸ்திக்கா-ஐங்கரன் (அமெரிக்கா) ஆகியோரின் மாமனாரும், ஹரிணி, கபின், யதுஷா, ரஷிக்கா, பிரதிஷா, பிரகதீஷ், சாத்விகன், சுருதி, ஷைலன், ரக்ஷன், துவாரகன், சௌமியன், ரூபிஅம்பிகா, மனஸ்வினி, மதுரன், யஷ்வின், கீதன், கவின், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.12.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


37, சைவப் பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:-குடும்பத்தினர்
0212227837, 0773253831,
0777308354
(1947)

## 13ஆம் ஆண்டு நினைவினில்...



மலர்வு 26.09.1998 உதிர்வு 26.12.2004
துா.துவாரகா



பொ.தேவராசா



மலர்வு 05.02.1995 உதிர்வு 26.12.2004
துா.துஷாந்தினி

ஆழியவளை என்னும் கிராமத்தில் கடற்கரை ஓரத்தில்
கல கல என்னும் கொலுசு சத்தத்துடன் ஆடிப்பாடிய
எம் மழலை முத்துக்களே!
உம் அன்னையவளை விட்டு அள்ளிச் சென்றதோ ஆழிப்பேரலை.
ஆலமரம் போல் வளர்ந்து வாழ்ந்த உம் குடும்பம்
அடி வேரோடு சாய்ந்ததும் ஏன்?
உங்கள் அன்பும் பாசமும் எம்மை விட்டு போய்
ஆழ்கடலில் கலந்ததும் ஏன்?
எம் இனிய மழலை சொத்துக்களே! மீண்டும் எப்போது
கிடைக்கும் உங்கள் அன்பு.
உம் அன்னையை தவிக்க விட்டு சென்றீர்களே
ஆழகடலில் இருந்து வந்த கலங்கிய நீர் போல்
உங்கள் அன்னையின் குருதியோ கண்ணில் வரும்
கண்ணீராய் பாய்கின்றது.
தங்களை பிரிந்து பதின்மூன்று ஆண்டு காலம்
சென்றும் உங்கள் மாதுளை முத்துப்
போன்ற முகத்தை மறக்க முடியாமல்
தவியாய் தவிக்கின்றார்கள் உங்கள் உறவுகள்.
சுனாமி என்னும் பேரில் வந்து பறித்து பறந்ததோ
எம் சுதந்திரத்தை பிரித்து விட்டதோ எங்கள் வாழ்க்கையை
உங்களை பிரிந்து வாழ்வதற்கு தகுதியற்ற உங்கள்
அன்னையை உம்மிடம் சேர்த்துக்கொள்ள மாட்டீர்களா
என் அன்பு செல்வங்களே!
(சி-936)

அச்சுவேலி,
கதிரிப்பாய்.

குடும்பத்தினர்
0763443410

## ஓ தெய்வமே! ஆழிப்பேரலை காவு கொண்டு என் மகனின் 13ஆம் ஆண்டு இன்று



### இராசரத்தினம் சகிதன்

பிறப்பு 28.03.2004

இறப்பு 26.12.2004

இருண்ட எம் வாழ்வில் ஒளியேற்றிய
எம் தெய்வமே சகிக்குட்டி
தேவைகளின் காரணத்தை வார்த்தைகளால்
மொழி பெயர்க்கத் தெரியாத
குழந்தை பருவத்திலே உனைப் பிரிந்து
இன்று பதின்மூன்று ஆண்டுகள்
சென்று விட்டதே. புன்முறுவல் அள்ளித் தெறிக்கும்
உன் குழந்தை முகம் காணுகையில்
தெய்வமே நேரில் வந்து தரிசனம்
தருவதாய் உணர்ந்தோம். எம் செல்வமே-உம்
முகம் காண தவியாய் தவிக்கின்றோம்.



செ.செல்வன்
செல்லையா பல்பொருள் வாணிபம்
கடற்கரை வீதி, முல்லைத்தீவு.
0779459941


உம்பிரிவில் ஏங்கித் தவிக்கும்
அப்பா, அம்மா, தம்பிமார்
(சி-939)

# இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை தோல்வி

## மோடி மீது காங்கிரஸ் குற்றச்சாட்டு

(டில்லி)

**இலங்கை தொடர்பான வெளிவிவகாரக் கொள்கையில், நரேந்திர மோடி அரசாங்கம் தோல்வியடைந்து விட்டதாக இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.**



காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் மனிஷ் திவாரி, இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

" நேபாளத்தின் புதிய அரசாங்கம் இந்தியாவைச் சார்ந்ததாக இல்லை.

இலங்கையில் சீனாவின் தலையீடுகள் இந்தியாவுக்கு கவலையளிக்கின்ற விடயமாக உள்ளது.

இந்தியாவுக்குத் தெரியாமல், சீனாவுடன் மாலைதீவு சுதந்திர வர்த்தக உடன்பாடு செய்து கொண்டுள்ளது.

டோக்லாமில், சீனா நிரந்தரமான கட்டமைப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

நரேந்திர மோடி அரசாங்கத்தின் தவறான வெளிவிவகாரக் கொள்கையினால், இந்தியா தனிமைப்படுத்தப்பட்டு வருகிறது" என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

## செல்வந்த சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஆசியாவின் முதலாவது சுற்றுலாத் திட்டம்!

### அமைச்சர் கயந்த தகவல்

(கொழும்பு)

உலகில் உள்ள செல்வந்த சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில், ஆசியாவின் முதலாவது சுற்றுலாத் திட்டமாக, பெந்தர - தேத்துவ சுற்றுலாத் திட்டத்தினை, 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சர் கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.

உலகில் உள்ள செல்வந்த சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில், பெந்தர -தேத்துவ வலயத்தை தரமுயர்த்துவதனை நோக்கமாகக் கொண்ட இத்திட்டத்திற்கு,1800 ஏக்கர் காணி அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. காணி உரிமையாளர்களுக்கு நட்டஈட்டை வழங்கும் பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



தற்போது, சர்வதேச முதலீட்டாளர்களிடம் இருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான ஆடம்பர சுற்றுலா ஹோட்டல்கள், தங்குமிடங்கள், கொல்வி விளையாட்டு மைதானம், குதிரைப்பந்தயத்திடல் உள்ளிட்ட பொழுதுபோக்கிற்குத் தேவை யான பல பிரிவுகளையும் கொண்டதாக இந்த வலயம் அமையவுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் நேரடியாக பல தொழில் வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பங்களும் கிட்டும் என்றும் அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அதிகரித்துச் செல்லும் தேர்தல் முறைப்பாடுகள் 26 பதிவு; 25 பேர் கைது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டதிட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் 26 சம்பவங்கள் பதி வாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் நேற்று அதிகாலை 6 மணிவரை இவ்வாறான 26 சம்பவங்கள் பதிவாகியிருப்பதுடன், இதற்கமைவாக 25 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ)

## தபால் மூல வாக்களிப்பு 25,26 ஆம் திகதிகளில்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பை ஜனவரி 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் நடத்தவுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் நேரடியாக தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள அரச ஊழியர்களுக்கான தபால் மூல வாக்களிப்பு 22 ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளதாக, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுகளுக்கான மேலதிக ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## புலிகளின் முகாமில் நகைகள் புதைப்பு! தோண்டியெடுக்க முற்பட்ட 11 பேர் கைது


### நள்ளிரவு வேளை புதுக்குடியிருப்பில் சம்பவம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பகுதியில் விடுதலைப்புலிகள் புதைத்து வைத்திருப்பதாக நம்பப்படும் தங்க நகைகளைத் தோண்டிய 11 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

12 மணியளவில் 11 பேர் கொண்ட குழுவினர் இரண்டு ஊர்திகளில் புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியிலுள்ள முன்னர் விடுதலைப் புலிகளின் முகாம் அமைந்துள்ள காட்டுப்பகுதியில் தங்கம் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாத்தறை, கொழும்பு, கண்டி, கொட்டாவ, கடவத்த, கொட்டாஞ்சேனை, கிரான்பாஸ், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த 11 பேரை கைது செய்துள்ளதுடன் இவர்கள் வந்த பாட்டா கப் வாகனம் மற்றும் தோண்டும் நடவடிக்கைக்கு பயன்படுத் திய உபகரணங்களையும் பறிமுதல் செய்தனர்.இவர்களை இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-281)

## சம்பந்தனிடம் நலம் விசாரித்த மகிந்த



(கொழும்பு)

சுகயீனம் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அவரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் நேற்றுக் காலை வைத்தியசாலைக்குச் சென்று நலம் விசாரித்தனர்.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த எதிர்க்கட்சித் தலைவர் நேற்று வீடு திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எரிபொருள் பற்றாக்குறையால் உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானம் கட்டுநாயக்கவில் அவசர தரையிறக்கம்

(கொழும்பு)

நியூசிலாந்தின் ஒக்லாந்து நகரிலிருந்து டுபாய் நோக்கி பயணித்த உலகின் மிகப் பெரிய பயணிகள் விமானமானது, எரிபொருள் பற்றாக் குறை காரணமாக கட்டுநாயக்கவில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை தரையிறக்கப்பட்ட விமான மானது, 430 பேருடன் பயணித்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

டுபாய் நோக்கி பயணித்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் நடுவானில் வைத்து விமானத்தில் எரிபொருள் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாக விமானி அறிந்து கொண்டுள்ளார். அதற்கமைய கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளிடம் அறிவித்து விமானத்தை கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரான்சில் தயாரிக்கப்பட்ட A - 380 ரக குறித்த எயார் பஸ் விமானமானது, உலகில் இதுவரை தயாரிக்கப்பட்ட மிகப்பெரிய பயணிகள் விமானமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7)

# ‘பொக்சிங் டே’ டெஸ்ட் இன்று ஆரம்பம்

## அவுஸ்திரேலியாவின் வெற்றி நடை தொடருமா?

அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் மோதும், ஆஷஸ் தொடருக்கான 4 ஆவது டெஸ்ட், மெல்போர்னில் இன்று ஆரம்பமாகிறது.

இதில் அவுஸ்திரேலிய அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, அங்கு வரலாற்று சிறப்புமிக்க ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

பிரிஸ்பேன், அடிலெய்ட், பேர்த்தில் நடந்த முதல் மூன்று போட்டிகளில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா 3-0 என ஏற்கெனவே ஆஷஸ் தொடரை தன்வசப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் நான்காவது டெஸ்ட் (‘பொக்சிங் டே’ டெஸ்ட்) மெல்போர்னில் இன்று ஆரம்பமாகிறது.

**ஸ்மித் நம்பிக்கை**

அவுஸ்திரேலிய அணிக்கு பான்கிராப்ட், டேவிட் வோர்னர் ஜோடி சிறப்பான ஆரம்பம் அளிக்க வேண்டும். உஸ்மான் கவாஜா, எழுச்சி கண்டால் நல்லது. அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் நம்பிக்கை அளிக்கிறார். கடந்த மூன்று டெஸ்டில் 2 சதம் உட்பட 426 ஓட்டங்கள் எடுத்துள்ள இவரது அபார ஆட்டம் மெல்போர்னிலும் தொடரலாம். பயிற்சியின்போது கையில் லேசான காயமடைந்த இவர விளையாடுவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. நடுத்தர வரிசையில் ஷோன் மார்ஷ், மிட்சல் மார்ஷ், பீற்றர் ஹேண்ட்ஸ்கோம்ப், விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் ரிம் பெய்ன் கைகொடுக்கலாம்.

**ஸ்ரார்க் இல்லை**

இத்தொடரில் 19 விக்கெட் வீழ்த்தியுள்ள அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் மிட்சல் ஸ்ரார்க், குதிக்கால் காயம் காரணமாக விலகியது பின்னடைவு. இவருக்கு பதிலாக மற்றொரு வேகப் பந்துவீச்சாளர் ஜக்சன் பேர்ட், தேர்வு செய்யப்பட் டுள்ளார். ‘வேகத்தில்’ ஹேசிலவுட் (15 விக்கெட்), கம்மின்ஸ் (11) நம்பிக்கை அளிக்கின்றனர். ‘சுழலில்’ நேதன் லயன் (14 விக்கெட்) க்கைகொடுக்கிறார்.

**கைகொடுப்பாரா குக்**

தொடரை இழந்த சோகத்தில் உள்ள இங்கிலாந்து அணிக்கு ‘சீனியர்’ வீரர் அலஸ்ரைர் குக், கைகொடுக்க வேண்டும். கடந்த மூன்று டெஸ்டில் 83 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ள இவர், இப்போட்டியில் எழுச்சி கண்டால் நல்லது. இவருக்கு ஸ்டோன்மேன் (193 ஓட்.) ஒத்துழைப்பு தந்தால், நல்ல ஆரம்பம் கிடைக்கும். ‘துடுப்பாட்டத்தில்’ மலான் (302 ஓட்.), பேர்ஸ்டோவ் (241) ஆறுதல் தருகின்றனர். அணித் தலைவர் ஜோ ரூட் (176 ஓட்., மொயீன் அலி (116 ஓட்.) பொறுப்பாக விளையாடினால் நல்ல ஓட்ட எண்ணிக்கையைப் பெறலாம்.

வேகப்பந்துவீச்சில் ஜேம்ஸ் அண்டர்சன் (12 விக்கெட்), கிறிஸ் வோக்ஸ் (7) ஓரளவு கைகொடுக்கின்றனர். இத்தொடரில் பெரிய அளவில் சோபிக்காத மற்றொரு வேகப் பந்துவீச்சாளர் ஸ்ருவேர்ட் பிரோட், விக்கெட் வீழ்த்த முயற்சிக்க வேண்டும். காயத்தால் விலகிய கிரெய்க் ஓவர்டனுக்கு பதிலாக டொம் குர்ரன் களமிறக்கப்படலாம். ‘சுழலில்’ மொயீன் அலி (3 விக்கெட்), எழுச்சி காண வேண்டும்.

**‘பொக்சிங் டே’**

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து உள்ளிட்ட மேலை நாடுகளில் கிறிஸ்துமஸ் பண்டிகை (டிச. 25) அன்று, கிறிஸ்தவ தேவாலயங்களில் ‘பொக்ஸ்’ (பெட்டி) ஒன்று வைக்கப்படும். அங்கு வருபவர்கள், பெட்டியில் நிறைய பணம், பரிசுப் பொருட்களை நன்கொடையாக வழங்குவர். இப்பெட்டி, கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு மறுநாள் திறக்கப்படும். அதில் உள்ள பணம், பரிசுப் பொருட்கள், ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படும். பெட்டியை திறக்கும் நாள் (டிச. 26), ‘பொக்சிங் டே’ என்று அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் டிச. 26இல் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் டெஸ்ட் போட்டி தொடங்கும். இதனையடுத்து இப்போட்டிக்கு, ‘பொக்சிங் டே’ டெஸ்ட் என்ற பெயர் வந்தது. கடந்த 1950ல் முதன் முறையாக அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணி கள் ‘பொக்சிங் டே’ டெஸ்டில் மோதின. கடந்த 1980ல் இருந்து ஒவ்வொரு ஆண்டும் இப்போட்டி தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது.



டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக

# 4 நாட்களைக் கொண்ட டெஸ்ட்

## இன்று போர்ட் எலிசபெத்தில் ஆரம்பம்

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக நான்கு நாட்களைக் கொண்ட டெஸ்ட் பகலிரவு டெஸ்ட் போட்டியொன்று இன்று தென்னாபிரிக்காவின் போர்ட் எலிசபெத் நகரில், அரங்கேறுகிறது.

zimbabwe cricket

CRICKET SOUTH AFRICA

இதில் தென்னாபிரிக்கா, சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன. இப்போட்டிக்கான விதிமுறைகள், வழக்கமான டெஸ்ட் போட்டியில் (5 நாள்) இருந்து மாறுபடுகிறது. இதன்படி, நாள் ஒன்றுக்கு 98 ஓவர்கள் பந்துவீச வேண்டும். ஒரு நாளில் முதலிரண்டு ‘செசன்’ 2 மணி நேரம் 15 நிமிடங்களுக்கு நடக்கும். இதில் 20 நிமிடம் தேநீர் இடைவேளை அளிக்கப்படும். இரவு உணவு இடைவேளை 40 நிமிடம் வழங்கப்படும். ‘பொலோ-ஒன்’ வழங்க, இரு அணிகளின முதல் இன்னிங்ஸ் ஓட்ட வித்தியாசம் 150 ஓட்டங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

**டு பிளசி காயம்**

இப்போட்டிக்கான தென்னாபிரிக்க அணியில் அணித தலைவர் டுபிளசி, முதுகுப் பகுதியில் ஏற்பட்டுள்ள காயத்தால் விளை யாடுவது சந்தேகமாக உள்ளது. அடுத்து இந்தியா, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் நடக்க இருப்பதால் இப்போட்டியில் டு பிளசி பங்கேற்பது சந்தேகம்தான். இவர் விலகினால், தலைவராக டி வில்லியர்ஸ் அல்லது டீன் எல்கர் நியமிக்கப்படலாம்.

**வருகிறார் ஸ்ரெய்ன்**

தென்னாபிரிக்க அணியில் காயத்தில் இருந்து மீண்ட ஸ்ரெய்ன், விளையாட இருப்பது வேகப்பந்து வீச்சின் பலத்தை அதிகரிக்கச் செய்துள்ளது. மோர்னே மோரகல், பிலாண்டர், ரபாடா உள்ளிட்ட வேகங்கள் சாதிக்க காத்திருக்கின்றனர். ‘சுழலில்’ கேஷவ் மகராஜ், எய்டன் மார்க்ராம் கைகொடுக்கலாம். துடுப்பாட்டத்தில் டி வில்லியர்ஸ், அம்லா, குயின்டன் டி கொக், டீன் எல்கர், பவுமா நம்பிக்கை தருகின்றனர்.

சிம்பாப்வே அணியை பொறுத்தவரை சமீபத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியை சமனிலை செய்து உற்சாகத்தில் களமிறங்குகிறது. அணித் தலைவர் கிரீமர், கிரெய்க் ஏர்வின், ஹமில்டன் மசகட்சா, பீற்றர் மூர், ரெஜிஸ் சகப்வா, சிக்கந்தர் ராசா, கிறிஸ் மபோபு உள்ளிட்டோர் சிறப்பாக விளையாடினால் குறைந்தபட்சம் ‘சமன்’ செய்யலாம்.

**8**

தென்னாபிரிக்கா, சிம்பாப்வே அணிகள் இதுவரை 8 டெஸ்டில் மோதியுள்ளன. இதில் தென்னாபிரிக்கா 7 ல் வெற்றி பெற்றது. ஒரு போட்டி சமனிலையானது.

இவ்விரு அணிகள் 5 முறை டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளன. இதில் அனைத்திலும் தென்னாபிரிக்கா தொடரை கைப்பற்றி கிண்ணத்தை வென்றது.

# தல தோனியை வேகத்தில் விஞ்ச ஆளில்லை

## வாத்தியார் சாஸ்திரி புகழாரம்

இந்தியாவின் சீனியர் கிரிக்கெட் வீரர் தோனி, 26 வயது இளம் வீரரை விட உடற்தகுதியிலும் வேகத்திலும் சிறந்தவர் என்று பயிற்சியாளர் ரவி சாஸ்திரி கூறியுள்ளார்.



இந்திய கிரிக்கெட் அணியின் சாதனைத் தலைவராக திகழ்ந்தவர் மகேந்திர சிங் தோனி. டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வுபெற்ற இவர், ஒருநாள் மற்றும் ரி20 கிரிக்கெட் போட்டியில் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரராக திகழ்ந்து வருகிறார்.

36 வயதாகும் தோனி சில போட்டிகளில் மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்துகிறார். இதனால் அவருக்கு எதிராக விமர்சனம் வந்த வண்ணம் உள்ளது. முன்னாள் வீரர்கள் சில தோனி போட்டியில் இருந்த விலகி இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கூறி வருகிறார்கள்.

இந்நிலையில் தோனி 26 வயது இளம் வீரரை விட வேகமாக ஓடக்கூடியவர் என்று இந்திய அணியின் தலைமை பயிற்சியாளரான ரவி சாஸ்திரி கூறியுள்ளார்.

இதுகுறித்து ரவிசாஸ்திரி கூறுகையில், “நாங்கள் முட்டாள்கள் அல்ல. நான் கடந்த 30 முதல் 40 ஆண்டுகள் கிரிக்கெட்டை பார்த்துக் கொண்டு வருகிறேன். இன்னும் 10 ஆண்டுகள் விராட் கோஹ்லி இந்திய அணியின் ஒரு அங்கமாக இருப்பார். 36 வயதிலும் 26 வயதான இளம் வீரரை தோனியால் வெல்ல முடியும் என்பது எங்களுக்குத் தெரியும். அவரைப் பற்றி பேசும் முன்னாள் வீரர்கள், அவர்கள் விளையாடியதை மறந்து விட்டு பேசுகிறார்கள்.

நாம் 36 வயதில் நம்மால் செய்ய முடியும். கண்ணாடி முன் நின்று வேகமாக இரண்டு ஓட்டங்கள் ஓட முடியுமா? என்று அவர்கள் கேட்க வேண்டும். ஆனால், இரண்டு ஓட்டங்கள் ஓடுவதற்குள். தோனி மூன்று ஓட்டங்கள் ஓடிவிடுவார். தோனி மட்டும்தான் இரண்டு உலகக்கிண்ணம் வாங்கி கொடுத்துள்ளார். சராசரி 51 ஓட்டங்களுக்கு மேல் வைத்துள்ளார். தற்போதைய நிலையில் ஒருநாள் அணியில் விக்கெட் காப்பாளரை மாற்ற வேண்டிய தேவையில்லை” என்றார்.


O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

Professional IT Courses

Diploma in Information Technology
Diploma in PC Application
Diploma in Office Automation
Dip. in Computerized Accounting
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip.in Video Production & Multimedia
Diploma in Hardware Engineering
Tally Accounting ,AutoCAD
Programming - JAVA, C, C++,

DMI COMPUTER EDUCATION

IT & English Diploma

75%


புதிய பிரிவு ஆரம்பம்

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

(C-941)

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
கிளிநொச்சி Tel.: 021-228 5655


பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நத்தார் தின சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் குறித்து ஜனாதிபதி தலைமையில் கூட்டங்கள்

(கொழும்பு)


உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் களம் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில் நாளை மறுதினம் 28 ஆம் திகதி மற்றும் 29ஆம் திகதிகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இருவேறு முக்கிய கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

28ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்கும் விசேட கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது. இதன்போது உள்ளூராட்சி மன்றங்களை வெற்றி கொள்வதற்காக பங்காளிக்கட்சிகளுடன் கூட்டாக சுதந்திரக் கட்சி முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதோடு திட்டமிடல்கள் சிலவும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை 29 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர்கள் அனைவரும் பங்கேற்கும் விசேட கருத்தரங்கொன்றும் நடைபெறவுள்ளது.

சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ள இந்த கருத்தரங்கிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை தாங்கவுள்ளார். இதன்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை சிறப்பாக முகங்கொடுப்பது தொடர்பாகவும், கட்சியின் கொள்கை விடயங்களையும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான பிரதான தொனிப்பொருள் மற்றும் பரப்புரைகள் தொடர்பாகவும் கவனம்செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராட்சத சுறா சிக்கியது



(யாழ்ப்பாணம்)

யாழ்.பாசையூர் மீனவர் ஒருவரின் வலையில் இராட்சத சுறா ஒன்று இறந்த நிலையில் சிக்கியுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாசையூர் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த வேளையில் இறந்த நிலையில் மீட்கப்பட்ட இந்த இராட்சத சுறா சந்தைப் படுத்தலுக்காக கொண்டு சென்று வெட்டிய போது அதன் வயிற்றுக்குள் 14 சுறாக் குட்டிகள் காணப்பட்டதுடன் அவை அனைத்தும் 60ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. (இ-7-10-107)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
'மதசார்பற்றது' 'ரகசியமானது' * இலவச சேவை'
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
1956 - 06 - 21

அறியாய அழிப்பில்
2010 - 12 - 26



அமரர்.
## மார்க்கண்டு சிவலிங்கம்
(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்-மருதனார்மடம்)

தலைமுறையின் தலைமகனே
தவமாய் தரணியில்
வந்துதித்த கல்விச் சுடரே
தயைவிலாமல் உமை கொன்றார்கள்!
தவிக்கின்றோம் உமையிழந்து...

இதயங்கள் நொருங்க...
இமைகளெல்லாம் நனைய...
நீங்கள் எமைவிட்டு
பிரிந்த துயரம்
நீங்காது எம்முயிர் உள்ளவரை...

அன்னை மடியில்
1937 - 03 - 20

ஆண்டவன் அடியில்
2011 - 08 - 20



## மார்க்கண்டு பரிமளம்

குடும்பத்தினர்,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(1940)

# இராசி பலன்

26.12.2017
(மார்கழி 11, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
அட்டமி முன்னிரவு 9.38 மணிவரை
உத்திரட்டாதி முன்னிரவு 9.23 மணிவரை
சுபநேரம் 10.57-12.27 மணிவரை
இராகுகாலம் 3.27-4.57 மணிவரை
அட்டமி- நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந். | | | |
| - | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரம், உத்தரம் | | ராகு |
| கேது | | | |
| சூரி சுக் சனி | புத | செவ் குரு | |

**மேடம்:** குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**இடபம்:** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், ஆரோக்கியமான நாள்.

**கடகம்:** உடல் நலம் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்கவேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**கன்னி:** பொறுமையால் பெருமை சேரும் நாள், பெண்களின் சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன நன்மையுண்டு.

**துலாம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உடல் நலன் சீராகும், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** ஒளிமயமான எதிர்காலத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், உறவினர்களிடையே கருத்து முரண்பாடுகள் அகலும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு, குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கிடைக்கும்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும், குடும்பத்தார் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறும்.

**மீனம்:** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், பொருளாதார நலன் கருதிய பயணமொன்று இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

# நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் எதிர்காலத்தை எதிர்கொள்வோம்

## வலி.வடக்கு மக்கள் மத்தியில் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கையுடன் எதிர்காலத்தை எதிர்கொள்ளுங்கள். அந்த நம்பிக்கைக்கு ஏற்றவகையில் எமது கட்சி சார்ந்த பணிகளும் நிச்சயம் முன்னெடுக்கப்படும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.


காங்கேசன்துறை மாம்பிராய் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்த டக்ளஸ் தேவானந்தா எம்.பி.அங்கு மக்களை சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவுக்கு வந்து ஏழு ஆண்டுகள் நிறைவு பெற்ற போதிலும் எமது மக்களின் காணிகள் இன்றும் விடுவிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

தமது சொந்த இருப்பிடத்தை விட்டு வெளியேறி வெவ்வேறு இடங்களில்வாழும்மக்கள் படுகின்ற துன்ப துயரங்களை நான் நன்கறிவேன். நாம் எப்போதும் மக்களுடன்இருக்கின்ற காரணத்தால் மக்களின் அவலங்களையும் அவர்களுடைய ஏக்கங்களையும் நான் அனுபவ ரீதியாக கண்டுணர்ந்துள்ளேன்.

அந்தவகையில் கடந்த காலங்களில் போலித்தேசிய வாதம் பேசி காணிகளை விடுவிப்போம், அரசியல் கைதிகளை விடுவிப்போம், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உரிய தீர்வுகளை பெற்றுத்தருவோம் மற்றும் அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுத் தருவோம் எனக் கூறி ஆட்சி மாற்றத்திற்கு முண்டு கொடுத்தவர்கள் எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஒன்றுக்காவது இதுவரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்களா? என கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.



அவர்களால் கடந்த காலங்களில் மட்டுமல்ல எதிர் காலங்களிலும் மக்களுக்கான சேவைகளை செய்வதற்கு திராணியோ அக்கறையோ அவர்களிடம்இல்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே எமக்கு மக்கள் அரசியல் பலத்தை தரும் பட்சத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளுக்கு கடந்த காலங்களில் எவ்வாறு தீர்வுகளை பெற்றுக்கொடுத்தோமோ அதே போன்று வருங்காலத்திலும் எம்மால் தொடரமுடியும் என நான் உறுதிபடத் தெரிவிக்கின்றேன். அந்த வகையில் நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கையுடன் எதிர்காலத்தை எதிர்கொள்ளுங்கள். அந்த நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் எமது கட்சி சார்ந்த பணிகளும் நிச்சயம் முன்னெடுக்கப்படும் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்

இந்த மக்கள் சந்திப் பின்போது தம்மில் பலருக்கு நிரந்தர காணிகள் இன்மையாலும் தமது பகுதிகளில் தமது காணிகள் இதுவரையில் கையளிக்கப்படாத நிலையில் தாம் நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் பல்வேறுபட்ட அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

இந்நிலையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஈழமக்கள் ஜன நாயக கட்சியினருக்கு வாக்களித்து அக்கட்சியின் வெற்றியில் தாமும்பங்கெடுக்க விரும்புவதாகவும் அந்த மக்கள் சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வலம்புரிக்கு வாழ்த்து


சமகாலத்தில் ஊடகத்துறையில் தனக்கென தன்னிகரில்லா தடம் பதித்த பத்திரிகை வலம்புரி. யாழ். மாவட்டத்தில் யான் கல்விப் பணிப்பாளராக பதவியேற்ற காலம். 1998 ஆம் ஆண்டு போர்க்காலச் சூழல். படைகளின் கெடுபிடி ஒருபக்கம். புலிகளின் பார்வை ஒரு பக்கம். இந்தச் சூழலில் அரச நிறுவனத்தை தலைமைத்துவம் கொண்டு நடத்துதல் பெரிய சவாலாக அமைந்தது.

எவ்வளவோ திரிப்புகள், சமாதானப் பேச்சுக்கள், குறைகள், குற்றங்கள். எமது செயற்பாட்டை நியாயப்படுத்தி நேராக நின்று பக்கச்சார்பின்றி செய்தியைக் கூற பத்திரிகை ஒன்று தோற்றம் பெற்றது. அதுதான் வலம்புரி. ஆரம்பித்த பொழுது நாம் எல்லோரும் அழைக்கப்பட்டு ஊக்குவித்தோம். பத்திரிகையை நிதானமாக நடத்த அதன் ஆசிரியர் விஜயசுந்தரம் பொறுப்பெடுத்தமை பத்திரிகையின் சமகால வளர்ச்சிக்கு காலாக அமைந்தது. இன்று வலம்புரி எடுத்ததும் பார்ப்பது ஆசிரியர் தலையங்கம்.

அரசியல் நோக்கமின்றி, கட்சியாளர்களை உருவாக்காமல், பிரசாரமின்றி செய்திகளை பத்திரிகை தர்மத்திற்கு உட்படுத்தி வெளியிடுவதில் வலம்புரி சாதனையாளன்.

ஆலடி மாநாடு நல்ல பாடம் புகட்டும் ஆசிரியன். வளர்க வலம்புரி. தொடர்ந்து பத்திரிகை தர்மத்திற்குட்பட்டு வளம் பெற வாழ்த்துக்கள்.

ஆர். எஸ். என். தணிகாசலம்பிள்ளை.



கிராமத்தினை பசுமையாக்குதல் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் செயற்றிட்டத்தின் கீழ் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதான வீதி யான வல்லை அராலி வீதியில் மரங்கள் நடும் நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி காலை 9 மணியளவில் பிரதேச செயலர். சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்றது.

## கடற்றொழிலாளர்களுக்கு ஆயுள் காப்புறுதித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்களில் இதுவரை தமக்கான ஆயுள் காப்புறுதி கணக்கை ஆரம்பிக்கத் தவறிய கடற்றொழிலாளர்களை தத்தமது கடற்றொழில் சங்கத்தினருடன் தொடர்பு கொண்டு தமக்கான ஆயுள் காப்புறுதி கணக்கை ஆரம்பிக்குமாறு கடற்றொழில் சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-10-106)

## 10 வருடங்களுக்கு மேலாக உடைந்த நிலையில் மதகு



(மந்துவில்)

தென்மராட்சி மந்துவில் மத்தி குழுக்களை குளச் சந்தியிலுள்ள மதகு கடந்த 10 வருடங்களுக்கு மேலாக உடைந்த நிலையிலிருப்பதால் குறித்த வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் விபத்து ஏற்படும் என்ற அச்சத்துடன் பயணிப்பதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு விரைவில் புனரமைத்துத் தர நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-101)

## இருமுடி கட்டும் விழா.

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் கரண்டக்குளம் சபரிகிரி ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலய இருமுடி கட்டுவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆலயத்தின் பிரதான குருசாமி சிவஸ்ரீ சிவ. அருணாசலக் குருக்களின் புலவனார் வீதி கல்வியங்காட்டு வாசஸ் தலத்தில் இடம்பெற்று மறுநாள் ஜனவரி முதலாம் திகதி மகர ஜோதி விழா அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெறும்.

இதேவேளை இருமுடிதாங்கிய யாத்திரை புலவனார் வீதியூடாக ஆரம்பமாகி கட்டுவன் வீதியூடாக ஆலயத்தை வந்தடைந்து ஐயப்ப சுவாமிக்கு விசேட பூஜைகள் இடம்பெறும். தொடர்ந்து மகரஜோதி தரிசனம் எதிர்வரும் ஜனவரி 14 ஆம் திகதி இடம்பெறும். (இ-10)

## அழகே அழகே!

பார் போற்றும் வலம்புரியே
ஏர் போற்றும் உழவரும்
தேவையறிந்து சேவை செய்யும்
தொழிலாளர் வர்க்கத்தினரும்
நோய் போக்கும் வைத்தியர்களும்
உந்தன் அகவை நாளை
வாழ்த்துரைத்து புன்னகையால்
பூச்சொரிந்து மகிழ்கிறார்கள்

மாசுகளை சுட்டெரித்து
நன்மைக்கு வாழ்த்துரைத்து
தேவையறிந்து இலகு தமிழால்
செய்தி சொல்லும்
ஆசிரியர் தலையங்கமும்
கலங்கரை விளக்காய் கல்வித் தரிசனமும்
கலைகள் வளர்க்கும் கலைத் தரிசனமும்
அறிவொலி எழுப்பும் சங்குநாதமும்
சிரிப்பூட்டும் கதையால் சிறுவர் அரங்கமும்
மிட்டுக்கான வினாவுக்கும்
துடிப்பாய் பதில் சொல்லும்
வியாசர் பதிலும்
விளம்பரத்தில் அவையடக்கமும்
உள்நாட்டு வெளிநாட்டு செய்தி
சொல்லும் உந்தன் அமுதம் கொள்
உணர்வுத் தமிழும்
மருத்துவ அம்மையாயும்
விளையாட்டு வீரனாயும்
எழுத்துப் பிழையற்ற
உந்தன் எழுத்தாணியும்
அழகோ அழகு


நம் வரலாறு சொல்ல
எங்கள் துயரத்தை அகற்ற
எழுத்தாணி கொண்டு
போரிடும் போராளியே

நம் உயிர் உள்ள வரை மட்டும் அல்ல
வரையறாது ஆண்டுகள் பல வாழ்ந்து
ஆண்டவன் அருள் கொண்டு
நீதி சொல்வாய் நீ வாழ்க

நி. கவியழகன்.
நாவடியூர்.



பருத்தித்துறை கலாசார அதிகார சபையால் நடத்தப்பட்ட மாபெரும் கலையிலக்கியப் பெருவிழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடத்தப்படும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன்ள ஆன்மீக மலர் நூல் வெளியீடு செய்யப்படுவதையும் கலை நிகழ்களையும் படத்தில் காணலாம்.



நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீகைலாசநாத சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் மாதம் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் 3ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# தமிழ் வேட்பாளர் மீது தாக்குதல்

(கொழும்பு)

பொலநறுவை - மனம்பிடிய பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான சசிகுமாரன் என்பவர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரே குறித்த தாக்குதலை நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் காயமடைந்த ஒருவர் மனம்பிடிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் குறித்து இதுவரை தேர்தல் ஆணைய காரியாலயத்திற்கு 60இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன், தேர்தல் தொடர்பில் இதுவரை 20 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ்துறை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேர்தல் தொடர்பில் விளக்கம் தேவையா? தொடர்பு கொள்ளவும்

(கொழும்பு)

இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொகுதி ரீதியில் நடைபெறவுள்ளது.

இதனால் இது குறித்து வேட்பாளர்களுக்கோ வாக்காளர்களுக்கோ விளக்கம் அவசியம் தேவையெனில் அவர்கள் மாவட்டங்களிலுள்ள தெரிவத்தாட்சி அலுவலரையோ உதவித் தேர்தல் ஆணையாளரையோ தொடர்புகொள்ள முடியும் என தேர்தல்கள் பிரதி ஆணையாளர் எம்.எம்.மொகமட் தெரிவித்துள்ளார்

47 ஆண்டுகளுக்குப் பின்னர் தொகுதி வாரியாக நடைபெறும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில், வாக்காளர்களுக்கு தேவையான விளக்கங்களை வழங்க தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

புதிய முறை தேர்தல் குறித்து உள்ளூராட்சி மன்றங்களுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கே சரியான தெளிவு இல்லாததால், அவர்களுக் குத் தெளிவுபடுத்த மாவட்ட ரீதியில் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கல்வி அமைச்சரின் நடவடிக்கை பாராட்டத்தக்கது

## ஏனைய விடயங்கள் குறித்தும் அவதானமெடுக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் வெளியிடப்படுகின்ற அனைத்து சுற்றறிக்கைகளையும் தமிழ் மொழியிலும் வெளியிட நடவடிக்கை எடுத்திருப்பது தொடர்பில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களுக்கு எமது மக்கள் சார்பில் எனது நன்றியினையும், பாராட்டினையும் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, தமிழ் பாடநூல்கள் தொடர்பில் நான் ஏற்கனவே எடுத்துக்காட்டியுள்ள விடயங்கள் குறித்தும் கல்வி அமைச்சர் அவதானமெடுத்து, உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் உட்பட அனைத்துக் கடிதங்கள், ஆவணங்கள் என்பன இதுவரையில் தனிச் சிங்கள மொழியிலேயே தமிழ் பாடசாலைகள் மற்றும் கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பப்பட்டு வந்துள்ளதால், தமிழ் மொழி மூலப் பரிச்சயம் கொண்ட அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பெரும் சிரமங்களையும், பாதிப்புகளையும் எதிர்நோக்கி வருவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நான் தொடர்ந்தும் அவதானத்திற்குக் கொண்டு வந்துள்ளதோடு, கல்வி அமைச்சிலும் இது தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அந்த வகையில், தற்போது இவ்விடயம் தொடர்பில் கல்வி அமைச்சர் உரிய நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகும்.

அதேபோன்று, நான் ஏற்கனவே நாடாளுமன்றத்திலும், கல்வி அமைச்சிலும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ள தமிழ் மொழி மூலமான வரலாறு மற்றும் இந்து சமயம் தொடர்பிலான பாடசாலை நூல்களிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ்மொழி மூல பாடசாலை வரலாற்றுப் பாட நூல்களில் இந்த நாட்டு தமிழ் மக்களது வரலாறு குறித்து மறைக்கப்பட்டதும், திரிபுபடுத்தப்பட்டதும், தவிர்க்கப்பட்டதுமான நிலைமைகளே காணப்படுகின்றன. அதேபோன்று இந்து சமய பாடநூல்களிலும் குறைகள் மற்றும் தவறுகள் காணப்படுகின்றன.

இவ்விடயங்கள் தொடர்பில் நான் முழு விபரங்களுடன் வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் சுட்டிக் காட்டியுள்ளேன்.

எனவே, இவ்விடயங்கள் குறித்தும் கல்வி அமைச்சர் அவதானத்தில் கொண்டு, விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு முன்வர வேண்டும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன் எனத் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, அண்மையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை தமிழ் பாட வினாத்தாளில் ஏற்பட்டிருந்த தவறு குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளதுடன், இத்தகைய விடயங்களில் தெளிவற்றவர்களைக்கொண்டு, தமிழ்மொழி மூல மாணவர்களது கல்வியில் பாதிப்பினை உண்டு பண்ணும் செயற்பாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விசேட விலையில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள்

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்களை நிலையான மற்றும் நிவாரண விலையில் நுகர்வோருக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

புத்தாண்டுக் காலத்திற்கு மாத்திரம் இதனை வரையறுக்காமல் தொடர்ந்தும் முன்னெடுப்பதே இதன் நோக்கமாகும் என்று கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் தலைவரும் சதொச நிறுவனத்தின் பதில் தலைவருமான மொஹமட் றிஸ்வான் ஹமீன் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் 500இற்கு மேற்பட்ட பொருட்களின் விலைகள் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரிசி, சீனி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய 7 உணவுப் பொருட்கள் விசேட விலையின் கீழ் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பொருட்களை உரிய விலைக்கு விற்கத் தவறும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட குழுக்கள் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்பன்பொல, அத்திட்டிய, அம்பலாந்தொட்ட, ஹல்லால்ல, ஆலவத்த, பனாகல, சித்தமுல்ல மற்றும் ஊராபொல ஆகிய இடங்களில் நேற்று புதிதாக 10 விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் சதொச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை 300 ஆக அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (இ-7)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 31 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Diploma/ அரசதொழில்<br>தொ.இ: B/7280 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 62 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/ அரசதொழில்<br>தொ.இ: G/5885 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BBA/தனியார் தொழில்<br>தொ.இ: B/7281 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 12 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5887 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA/அரச தொழில்<br>தொ.இ: B/7283 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 30<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/5893 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7285 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 26 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: BBA/ கணக்காளர்<br>தொ.இ: G/5895 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# முதலமைச்சரின் உத்தரவை உதாசீனம் செய்த பொலிஸார்! பழைய பேருந்து நிலையத்திலிருந்து சேவைகள் முன்னெடுப்பு

(வவுனியா)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இருந்து நேற்று முதல் பேருந்துகள் சேவையில் ஈடுபட வசதியாக பழைய பேருந்து நிலையத்தினை மூடிவிடுமாறு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட உத்தரவு உதாசீனப்படுத்தப்பட்டுள்ளதாக பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வவுனியாவில் கடந்த ஒரு வருட காலமாக பயன்பாடின்றிக் காணப்படும் புதிய பேருந்து நிலையத்தினை மீள இயக்கும் நோக்கோடு வட மாகாண முதலமைச்சரினால் நேற்று 25 ஆம் திகதியில் இருந்து தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் சேவையில் ஈடுபட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.


இந் நிலையில் இதுவரை காலமும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டு வந்த நகரசபைக்கு சொந்தமான பகுதியை தனியார் வாகனங்கள் சென்று வருவதற்கு மாத்திரம் அனுமதி வழங்கும் வகையில் பேருந்துகள் உட்செல்லாத வகையில் நேற்று முன்தினம் 24 ஆம் திகதி நள்ளிரவு .12 மணி முதல் மூடுமாறு வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு முதலமைச்சர் கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.


இந் நிலையில் பழைய பேருந்து நிலையம் மூடப்படாமல் காணப்பட்டதுடன் பொலிஸார் மற்றும் வவுனியா நகர சபை செயலாளர் உட்பட்ட உத்தியோகத்தர்கள் அவ்விடத்திற்கு பிரசன்னமாகியிருந்தனர். எனினும் பொலிஸார் தமக்கு பேருந்து நிலையத்தினை மூடுமாறு உத்தரவு வரவில்லை எனவும் நகர சபையினரே மூட வேண்டும் என தெரிவித்ததுடன் அவ்வாறு மூடும் பட்சத்தில் தாம் பாதுகாப்பு தருவதாகவும் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான சூழலில் பழைய பேருந்து நிலையப் பகுதிக்கு வருகை தந்த வவுனியா தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி வவுனியா நகரசபை செயலாளரிடம் நகரசபையினால் பேருந்து நிலையத்தினை மூடுங்கள் என தெரிவிக்கப்பட்டபோதிலும் அவ்வாறான உத்தரவு தமக்கு கிடைக்கவில்லை எனவும் முதலமைச்சர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கே உத்தரவு இட்டுள்ளதாகவும் நகரசபை செயலாளர் தெரிவித்தார்.

இந் நிலையில் முதலமைச்சரின் உத்தரவை பொலிஸார் கடைப்பிடிக்காமையினால் வழமைபோன்றே இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து சேவைகளை முன்னெடுத்திருந்தன. (இ-250)

# முல்லைத்தீவில் நத்தார் வழிபாடு





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாலன்பிறப்பு நத்தார் தின விசேட பூசை வழிபாடுகள் நேற்று நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு கிறிஸ்தவ ஆலயங்களிலும் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (இ-281)

# எம்.ஜி.ஆரின் நினைவு தினம்



(முல்லைத்தீவு)

புரட்சித்தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரனின் 30 ஆவது நினைவு தினம் முல்லைத்தீவு கள்ளப்பாடு மக்களால் நேற்று முன்தினம் மாலை நினைவுகூரப்பட்டது.

எம்.ஜி. ஆரின் திருவுருவப் படத்தினை ஊர்தியில் வைத்து பவனியாக வந்து கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டபத்தில் நிகழ்வுகள் ச.குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் கிராம தலைவர்கள் ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தினர்.


இதன்போது சிறுமிகளின் கலை நிகழ்வு இடம்பெற்று நினைவுரையை வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்டவர்கள் நிகழ்த்த. இறுதியாக எம்.ஜி.ஆரின் நினைவாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டி நிகழ்வுகளும் இடம் பெற்றன. (இ-281)




# 15 மணித்தியாலங்களுக்குள் 4 குற்றச் செயல்கள்

## தடயப்பொருட்களை மீட்ட தருமபுரம் பொலிஸார்





(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் பிரிவில் 15 மணித்தியாலங்களில் 4 வெவ்வேறு குற்றச் சம்பவங்களின் போது ஒரு சந்தேக நபரைக் கைது செய்ததுடன் தடயப் பொருட்களையும் கைப்பற்றியுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நேற்றுக் காலை 07 மணி வரையான காலப் பகுதியில் இந்த நான்கு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் உழவனூர் கிராமத்தில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த டிப்பர் வாகனத்தை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வேளை வட்டக்கச்சி இராமநாதபுரம் காட்டுப் பகுதியில் கறவைப் பசு மாட்டை கடத்திச் சென்று அதனை கொன்று இறைச்சிக்காக வெட்ட முற்பட்ட நிலையில் பொலிஸார் தம்மை சுற்றி வளைப்பதை கண்டு திருடர்கள் தப்பிச் சென்ற நிலையில் கொல்லப்பட்ட பசுமாட்டை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதேபோன்று. நேற்று திங்கட்கிழமை அதிகாலை வேளையில் புளியம் பொக்கணைக் காட்டுப் பகுதியிலும் மற்றும் கல்லாறுக் காட்டுப் பகுதியிலும் தலா ஒரு மாடு வீதம் கொல்லப்பட்டு இறைச்சியாக்கிய போது, பொலிஸார் தம்மை சுற்றி வளைப்பதை அறிந்து சந்தேக நபர்கள் தப்பிச் சென்ற நிலையில் மாட்டின் உடலை கைப்பற்றியுள்ளதுடன் தப்பிச் சென்றுள்ள சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சம்பவங்களின் போது, கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் சம்பவ இடங்களில் இருந்து தப்பிச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த டிப்பர் வாகனத்தின் சாரதியிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவரைப் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளதுடன் மீண்டும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ-15)

# கிளிநொச்சிக்கு கடத்தி வரப்பட்ட பாலை மரக்குற்றிகள் பறிமுதல்



(கொழும்பு)

அக்கராயன்குளம் பிரதேசத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி பெறுமதியான பாலை மரக்குற்றிகளுடன் சென்ற இரண்டு வாகனங்களை கிளிநொச்சி பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

நேற்றுக் காலை அம்பாள்குளம் பிரதேசத்தில் வைத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் விசேட மது ஒழிப்பு பிரிவினரால் பாலை மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

12 பாலை மரக்குற்றிகள் கடத்தி வரப்பட்ட போதே கைப்பற்றப்பட்டுள்ளன.

உதவி பொலிஸ் பரிசோதகர் பிரதீபன் மற்றும் பொலிஸ் அதிகாரிகளான திசாநாயக்க, அதிகாரி, கணேஸ்குமார், ரஞ்சீப்ராஜ், அலகேசன் ஆகியோரேயே இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (இ-312)

## யானைகள் அச்சுறுத்தல்; 8 வாக்கெண்ணும் நிலையங்களை மாற்றுமாறு கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளின் அச்சுறுத்தலுள்ள 8 வாக்கெண்ணும் நிலையங்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியை கோரியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆர்.சசீலன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை பிரதேசத்திலுள்ள 8 வாக்கெண்ணும் நிலையங்கள் யானைகளின் அச்சுறுத்தலுள்ள நிலையங்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் மாலை 6 மணிக்கு பின்னர் வாக்கெண்ணுவதற்கு அச்சுறுத்தல் ஏற்படலாம். இதனால் நாம் அந்த வாக்கெண்ணும் நிலையங்களை வேறிடத்திற்கு மாற்றுவதற்கு. தேர்தல் ஆணைக்குழுவிடம் அனுமதியை கோரியுள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 389.582 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 144 வட்டாரங்கள் உள்ளன. அத்தோடு கோறளைப்பற்று வடக்கிலும், களுவாஞ்சிக்குடியிலும் இரட்டை வட்டாரங்கள் உள்ளன. இதனையும் சேர்த்து வட்டாரங்களில் இருந்து 146 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் விகிதாசாரத்தையும் சேர்த்து மொத்தமாக 238 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த தேர்தலை சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு ஊடகவியலாளர்களின் ஒத்துழைப்பும் முக்கியமானதாகும். தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஊடகவியலாளர்களின் ஒத்துழைப்பையும் கோரியுள்ளார் எனவும் தெரிவித்தார்.(இ-7)

## திருட்டுடன் தொடர்புடைய நபர் ஜனவரி 4 வரை விளக்கமறியலில்

(கரணவாய்)

மந்திகைப் பகுதியில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை எதிர்வரும் 4 ஆம் திகதி விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இளவாலைப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரிடமிருந்து ஒரு சோடி தோடு மற்றும் பணம் என்பன மீட்கப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த வியாழக்கிழமை மீண்டும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது நீதிமன்றில் முன்னிலையான பொலிஸ் பொறுப்பதிகாரி மேற்படி சந்தேக. நபர் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டு பல வழக்குகள் உள்ளமையால் அவரை விளக்கமறியலில் வைத்து விசாரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரினார். அதற்கு நீதவான் அனுமதி வழங்கினார். (இ-60)

# யானையிடம் மரத்தை அடகு வைக்கவில்லை

## ஹக்கீம் கூறுகிறார்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தனித்தும், ஐக்கிய தேசியக்கட்சியோடு இணைந்தும், முஸ்லிம் தேசிய கூட்டமைப்பிலும் மற்றும் ஜனநாயக ஐக்கிய முன்னணியிலும் இணைந்து நாடு முழுவதிலும் நான்கு விதமாக முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுகின்றது என. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும். அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மேலும், "அதிகமாக ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும், பல உள்ளூராட்சிமன்றங்களின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கிலுமே, முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து போட்டியிடுகின்றதே தவிர, எமது கட்சியை ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் நாம் அடகு வைக்கவில்லை" எனவும் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச சபைக்கான தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து போட்டியிட வேண்டுமென்ற முடிவானது, மிகவும் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு எல்லோராலும் எடுக்கப்பட்ட முடிவாகும். இந்த இணைப்பின் மூலம் எமது கட்சிக்கு கிடைக்கின்ற வாக்குகளைக் கூட்டிக் கொள்வதற்காக தேவையான வியூகங்களை வகுப்பதற்காகவே தவிர ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாம் எதனையும் அடகு வைக்கவில்லை என்பதை நான் மிகவும் தெளிவாகவும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

"அம்பாறை மாவட்டத்தின் முக்கியமான இடங்களில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுகிறோம். அங்கு யானையில் போட்டியிடும் வேட்பாளர்களை நாங்கள்தான் தெரிவுசெய்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதை நாங்கள்தான் தீர்மானிப்போம். அந்தளவு அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி அம்பாறை மாவட்டத்தில் எங்களுக்கு தந்துள்ளது. அந்த உரிமையுடன்தான் நாங்கள் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுகிறோம்.

"அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள அனைத்து சபைகளுக்கான ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் பட்டியலை நாங்கள்தான் தயாரித்திருக்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் முகவர்களாக எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

"ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நான்கு விதமான முறைகளில் எதிர்வருகின்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றது. பல இடங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து யானை சின்னத்திலும், சிங்கள பிரதேசங்களில் எங்களுடைய ஜனநாயக ஐக்கிய முன்னணி கட்சியில் இரட்டை இலை சின்னத்திலும், சில இடங்களில் எங்களது முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் தராசு சின்னத்திலும், அதிகமான இடங்களில் முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்திலும் போட்டியிடுகிறது" என்றார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1287

### சலோமி



வெறுப்பது யாராக
இருந்தாலும்
நேசிப்பது
நீங்களாக
இருங்கள்...!

அன்னை தெரேசா

### சாலினி

உலகில் தேடி தேடி அலைந்தாலும் மீண்டும்
அமர முடியாத சிம்மாசனம் "தாயின் கருவறை"



### சாந்தினி



ஒருநாள்
நீ
நானாக
வேண்டும்...!
நான்
நீயாக
வேண்டும்...!
அன்று உனக்குப்
புரியும் நான் படும்
வேதனை...

### ராகுலன்

ஒரு பெண் ஒரு மணி நேரத்தில 25 தோசை சுட்டா
இரண்டு பெண்கள் ஒரு மணி நேரத்தில் எத்தனை
தோசைகள் சுடுவாங்க சொல்லு...



இரண்டு பெண்கள் சேர்ந்தா அவங்க பேசுங்கவே
நேரம் பத்தாது... அப்போ எப்படி சேர் தோசை
சுடுவாங்க...

### ரவி

கண்ணே நான் தூண்டில் போட்டால்
விண்மீனும் தப்பாதே!




### வெனிசி



வலிக்காமல்
குட்டுவது எப்படி
என்று
தங்கைகளுக்கு
மட்டுமே தெரியும்...
அதுபோல
வலிக்காமல்
வலித்ததுபோல
நடிக்க
அண்ணன்களால்
மட்டுமே
முடியும்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நுளம்பினால் பரவும் நோய்கள்



எமது சூழலிலுள்ள சிறு பூச்சிகள் பலவிதமான நோய்க் கிருமிகளை காவி நோயைப் பரப்புவதை அறிவீர்கள். இவற்றில் நுளம்பு, ஈ என்பன முக்கியமானவை. ஈ யினால் நெருப்புக்காய்ச்சல்(Typhoid), மூளைக்காய்ச்சல்( Encephalitis), வயிற்றோட்டம், கொலரா, செங்கமாரி என்பன பரப்பப்படுகின்றன. நுளம்பினால் பரவும் நோய்களில் மலேரியா, சிக்கன் குனியா, யானைக்கால், டெங்கு என்பன முக்கியமானவை. முதல் மூன்று நோய்களும் எமது நாட்டில் கட்டுப்பாடுக்குள் இருக்கின்றன. எனினும் டெங்கு நோய் தீவிரமாக பரவி அச்சுறுத்தலாக உள்ளது. தற்போதைய டெங்கு நோயை விட அதிகமாக பரவி பல உயிர்களைக் காவு கொண்ட மலேரியாவை கடும் முயற்சியால் கட்டுப்பாட்டுக்கள் கொண்டு வந்தது போல தற்போது டெங்கு பரவுவதை கட்டுப்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் உரிய இலக்கை அடைய முடியாமல் பல்லாயிரக்கணக்கானவர்கள் நோயால் பீடிக்கப்பட்டு நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

முன்னர் எப்போதையும் விட இந்த வருடம் (2017) இலட்சத்திற்கு மேற்பட்டோர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். காப்பாற்றப்பட்டுள்ளனர். உயிரிழப்பு நூற்றுக்குக் குறைவாக இருப்பது ஆறுதலான விடயமாகும். டெங்கு நோய் பற்றியும் அது பரவுவது பற்றியுமான விழிப்புணர்வே இதற்குக் காரணம் எனலாம்.

**நோய்களைப் பரப்பும் நுளம்பு வகைகள்**

டெங்கு, சிக்குன்குனியா என்பனவற்றை வைரஸ் கிருமிகள் ஏற்படுத்துகின்றன. ஆபோ (ARBO) வகையைச் சேர்ந்த டெங்கு வைரசை ஏடிஸ் (ADES) வகை நுளம்பு பரப்புகின்றது. பிளாஸ்மோடியம் (PLASMODIUM) ஒட்டுண்ணியால் மலேரியா நோய் ஏற்படுகிறது. மலேரியா கிருமிகளை அனோபிலிஸ் (ANOPHELES) என்ற வகை நுளம்பு காவுகின்றது. யானைக்கால் நோயை ஏற்படுத்துகின்ற (MICRO FLARIA) கிருமிகளை கியூலெக்ஸ் (CULEX) நுளம்பு பரப்புகிறது.

இன்று எமக்கு சவாலாக உள்ள நுளம்பு ஏடிஸ் வகை நுளம்பு டெங்கு நோயை நாடெங்கும் பரப்பி வருகின்றது. 1980 களிலிருந்து சிறிய அளவில் பரவத் தொடங்கிய டெங்கு இன்று பெரும் தொல்லை தரும் நோயாக எங்கும் பரவியுள்ளது. தென் மாகாணத்தில் பரவிய டெங்கு இன்று நாடுமுழுவதும் ஏழை பணக்காரன், நகரவாசி கிராமவாசி என்றபேதமின்றி அனைவரையும் தாக்குகின்றது. நீரிழிவு நோயாளர்கள், கர்ப்பிணிகள், சிறுவர்களில் ஆபத்தை ஏற்படுத்துகின்றது.

பொதுவாக பெண் நுளம்புகளே மனிதரைக் கடிக்கின்றன. இனப்பெருக்கத்திற்கு தேவையான இரத்தத்தை மனிதரிடமிருந்து பெறுகின்றன. ஆண் நுளம்புகள் தாவரங்களில் உண்கின்றன.

ஏடிஸ் நுளம்பு ஒப்பீட்டளவில் சிறியன. இவை கறுப்பு நிறமானவை. இவற்றின் நெஞ்சு, வயிறு, கால்களில் வெள்ளை நிறமான வரி போன்ற அடையாளங்கள் இருக்கும். ஓய்வுக்கு வரும் போது சுவர்களில் தங்குவதில்லை. தளத்திற்குச் சமாந்தரமாகவே அமரும். இவை வதிவிடத்திலிருந்து 300-400 மீற்றர் வரை பயணிக்கக்கூடியவை. இவை இருட்டான, ஈரலிப்பான, அழுத்தமற்ற பிரதேசங்களில் வாழ்ந்து முட்டையிட்டு பெருகும் நுளம்பின் வளர்ச்சிக்கு தெளிவான தேங்கி நிற்கும் நீர் தேவை.

வெற்றுச் சிரட்டை, சாடிகள், தகர பிளாஸ்ரிக் பேணிகள், பழைய டயர்கள், சிறிய நீர்க்குட்டைகள், கூரைக் குழாய்கள், திறந்த கான்கள் நீருடன் கூடிய பூச்சாடிகள் என வீட்டுச் சூழலில் வாழக்கூடியன. இந்த நுளம்புகளின் நடமாட்டம் இருள் குறைந்த அதிகாலை, மாலை வேளைகளில் அதிகம் இருக்கும்.

**டெங்கை ஒழித்தல்**

டெங்கு நோய்க்கிருமிக்கு எதிரான மருந்துகளோ திறனான தடுப்பு மருந்துகளோ இல்லை. நோயைக் கட்டுப்படுத்த நோய்காவிகளை துரிதமாக இனம் கண்டு சிகிச்சையளிப்பதனால் நோய் பரவலையும் கட்டுப்படுத்த முடியும். இந்நோய் பலரில் கட்டுப்பாட்டுக்குள் வரக் கூடியது. எனினும் சிலரில் துரிதமாக உயிராபத்தையும் ஏற்படுத்தக்கூடியது. டெங்குநோயை கட்டுப்படுத்த நுளம்பு வலைகள், நுளம்புத் திரிகளே பிரயோசனமற்றவை. இவை பொதுவாக இரவு படுக்கையில் கடிப்பதில்லை. முழு நீள உடைகள் ஓரளவு பலனளிக்கும். நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே சிறந்த வழி. எமது சூழலை துப்புரவாக வைத்திருத்தல் வேண்டும். சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. துப்புரவாக வைத்திருக்காதவர்களுக்கு தண்டமும் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் மக்களின் ஒத்துழைப்பே காலத்தின் தேவை. வெற்றுச் சிரட்டைகள், கோம்பைகள், தகர பிளாஸ்ரிக் பேணிகள் பூச்சாடிகள் என்பவற்றுள் உள்ள நீரை அகற்றி அவற்றை இயன்றவரை அப்புறப்படுத்தலாம். அல்லது புதைக்கலாம். பூச்சாடி, மீன்தொட்டி முதலானவற்றின் நீரை அடிக்கடி மாற்றலாம். கூரைப் பீலிகளை அடிக்கடி சுத்தம் செய்யலாம். கழிவுநீரைத் தேங்காது பார்த்துக்கொள்ளலாம். டெங்கை ஒழிக்க எம் கைகளே எமக்கு உதவி.!

Dr. ச. முருகானந்தன்




# முதலமைச்சர் பதவியை மு.காவிடம் தாரைவார்த்த தமிழ்க் கூட்டமைப்பு

## கருணா கடும் விசனம்

(ஏறாவூர்)

தமிழ் மக்களுக்கு பாரிய அபிவிருத்தியை செய்து விட்டுத்தான் நாங்கள் தமிழ் மக்கள் முன்னிலையில் வாக்கு கேட்டு வருகின்றோம்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வேறு இனத்தவருக்கு தாரைவார்த்து கொடுத்துவிட்டு வாக்கு கேட்டு வரவில்லை என தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக நேற்றுமுன் தினம் ஊடகங்களுக்கு கருத்து தெருவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் தமிழர் ஐக்கிய முன்னணி எனும் கட்சியில் தையல் இயந்திரச் சின்னத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், போட்டியிடுகின்றோம். இந்த தேர்தலில் எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் முதலமைச்சர் ஒருவரை உருவாக்கு வதற்கான அடி அத்திவாரமாகக் கொண்டு போட்டியிடுகின்றோம்.

இந்த விடயத்தை கிழக்கு மாகாண மக்கள் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். காரணம் கிழக்கு மாகாணத்திலே தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு மக்கள் 11 ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்தும் தமிழ் முதலமைச்சரைக் கொண்டு வருவதற்கு இயலாமல் போய் 7 ஆசனங்களைக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியினை தாரை வார்த்து கொடுத்திருந்தனர்.


இதனால் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய பலாபலன்கள் 4 வருடங்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அக்கால கட்டத்தில் 4000 பேருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டு முஸ்லிம் பிரதேசங்கள் பாரிய அபிவிருத்தியை கண்டுள்ளன.

தமிழ் மக்களுக்கு எதுவுமே நடக்கவில்லை 11 உறுப்பினர்களும் மாகாண சபையில் நித்திரை கொண்டுவிட்டு வந்துள்ளனர். இந்தகைய நிலையை மீண்டும் உருவாக்க இடமளிக்க கூடாது. மீண்டும் கிழக்கு மாகாணத்தை குழப்பபவதற்கு இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

நாங்கள் வடக்கு-கிழக்கு ரீதியாக பரந்துபட்டளவில் கிழக்கு தலைமையை உள்ளடக்கியதாக போட்டியிட்டு வருகின்றோம். எனவே எமது கொள்கையும் வடக்கு -கிழக்கு இணைப்புத்தான். ஆனால் அதனுடன் கூடிய அபிவிருத்தியும் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதில் எமது கட்சி குறியாக இருக்கின்றது.

நாங்கள் கிழக்கு மாகாண மக்களுக்கு செய்து காட்டி விட்டுத்தான் தேர்தலுக்கு வந்துள்ளோம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போன்று எதனையும் செய்யாமல் மக்கள் முன்வரவில்லை.

மட்டக்களப்பினை பொறுத்தளவில் சுகாதாரம், கல்வி, நீர்ப்பாசனம், குடிநீர், மின்சாரம் போன்றவற்றில் நிறையத் தேவைகளை நான் நிறை



வேற்றியுள்ளேன். களுவாஞ்சிகுடியில் பாரிய வைத்திய சாலையை அமைத்துள்ளேன்.

அதே போன்று மட்டக்களப்பில் புற்றுநோய் வைத்தியசாலையை அமைத்துள்ளேன், பலதரப்பட்ட குளங்களை புனரமைத்துள்ளேன், இருளில் மூள்கியிருந்த படுவான்கரை பிரதேசத்திற்கு மூலைமுடுக்கெல்லாம் மின்சாரம் வழங்கியுள்ளேன்.

இதனை நீங்கள் வெளிப்படையாக ஊடகங்களுக்குக் கொண்டுவரவேண்டும், இதுவே இன்றைய மட்டக்களப்பின் நிலைப்பாடாகும் எனவே எமது கட்சியானது. இவற்றிக்கு அப்பால் செயற்படும் நாங்கள் மக்களின் நலனினை கருத்திலெடுத்து நிச்சயமாக செயற்படுவோம்.

இவற்றினை உணர்ந்து வாக்களித்தால் இந்த நிலையை நாங்கள் மாற்றியமைக்க முடியும் இல்லா விட்டால் மேற்கூறிய நிலையே எமக்கு உருவாகும். எனவே வருகின்ற இத்தேர்தலில் எமது கட்சியை நீங்கள் பலப்படுத்த வேண்டும் இதுவே காலத்தின் தேவையாகும் எனத் தெரிவித்தார். (இ-7)

# அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் ரூ.1,670 மில்லியன் வருமானம்

(கொழும்பு)

மீன் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் முன்னணியில் உள்ளது.

இந்நிலையில், 2017 ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 18 ஆயிரத்து 260 மெற்றிக் தொன் மீன் மற்றும் மீனைக்கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், இந்த ஆண்டின், ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் 1,670 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையினை அரசு வருமானமாகப் பெற்றுக் கொண்டுள்ளது.

அலங்கார மீன் ஏற்றுமதியின் மூலம் கடந்த 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் 2400 மில்லியன் ரூபா அரசுக்கு வருமானம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு 500 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

(கொழும்பு)

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை போற்றும் கிறிஸ்மஸ் தினமான நேற்று திங்கட்கிழமை 500இற்கும் அதிகமான கைதிகள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறிய குற்றங்கள் மற்றும் பிணை கட்டணத்தை செலுத்த முடியாது நீண்டகாலம் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நேற்று 510 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், அரசியல் கைதிகள் எவரும் விடுதலை செய்யப்பட வில்லை என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட் தந்தை சக்திவேல் ஊடகங் களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# தமிழர்களின் இழந்துபோன உரிமைகள் ஐ.தே.க.விடமாம்

(ஏறாவூர்)



இழந்துபோன எமக்குரிய அபிவிருத்திகளையும், தேவைகளையும், வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ள பட்டிருப்பு தொகுதி மக்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என போரதீவுப்பற்று பிரதேச சபைக்கான ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமை வேட்பாளர் தம்பிராசா கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

ஐ.தே.க. சார்பில் பழுகாமம் வட்டாரத்தில் போட்டியிடும் இவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தத்தினால் மிகவும் நலிவடைந்த பிரதேசமாக பட்டிருப்பு தொகுதி விளங்குகிறது. இங்குள்ள மக்களின் அடிப்படைவசதிகள், வீதிப் புனரமைப்பு, வடிகாலமைப்பு வசதிகள், இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு பங்கீடுகள், பாடசாலைகளுக்கு கான பௌதீக தேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள், இது வரை செய்துக் கொடுக்கப்படமல் காணப்படுகின்றன.

வறுமைப்பட்ட மக்களின் வாழ்வாதாரத் தேவைகள் குறைவாகத்தான் காணப்படுகின்றன. பெரும்பாலான குடும்பங்களுக்கு சமூர்த்தி வாழ்வாதாரம் குறைவாகத் தான் பங்கிடப்பட்டுள்ளது.

இவற்றை இப்பிரதேச மக்களின் தேவைகளை அறிந்து பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்து வறுமைப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டிய தேவை எனக்கிருக்கின்றது. போரதீவுப்பற்று பிரதேச சபைக்குரிய வாக்காளர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களித்து, ஆட்சியை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றுவதுதான் நியாயமாகும் மாற்றும் ஒன்றை இன்றைய இளைஞர்கள், யுவதிகள் ஒன்றிணைந்து ஏற்படுத்துவதுதான் இன்றைய தமிழர்களின் அரசியல் தேவைப்பாடாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் நத்தார் திருப்பலிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளன. பிரதான நிகழ்வுகளாக மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மடு தேவாலயத்திலும் புனித மரியன்னை தேவாலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுகள் அனைத்தும் ஆடம்பரங்கள் இன்றி எளிமையான முறையில் நடைபெற்றுள்ளன. (படங்கள்:-உ.சாளின்)

# கிறிஸ்மஸ் பிரார்த்தனைக்கு சென்ற இருபது பேர் பேருந்து விபத்தில் பலி



பிலிப்பைன்ஸ் நாட்டின் ஆகோ நகரில் கிறிஸ்மஸ் பிரார்த்தனைக்குச் சென்றவர்கள் பயணித்த பேருந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கு பகுதியிலுள்ள ஆகோ நகரைச் சேர்ந்தவர்கள் மனோவோக் நகரில் உள்ள தேவாலயத்தில் நடைபெறும் கிறிஸ்மஸ் சிறப்பு பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காக நேற்று அதிகாலை சிறிய பேருந்தில் புறப்பட்டுச் சென்றனர். செல்லும் வழியில் எதிரே வந்த மற்றொரு பேருந்து மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் 20 பேர் பலியானதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பலர் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகரில் உள்ள வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 39 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-8)

# டிலானின் கருத்தை கட்சியின் கருத்தாக கருத முடியாது எஸ்.பி.திஸாநாயக்க



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேராவின் கருத்தை கட்சியின் நிலைப்பாடாக கருத முடியாது என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தெஹியத்தகண்டிய மற்றும் பதியதலாவ ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட குறித்த இரண்டு பிரதேச சபைகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சிக்கு ஆதரளிக்கும் என டிலான் பெரேரா அண்மையில் பதுளையில்வைத்து கூறியிருந்தார்.

எனினும், இந்தக் கருத்தினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாகக் கொள்ள முடியாது என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போது தெரிவித்துள்ளார். (இ-7)

# கசிப்புடன் கைதான பெண் தொடர்ந்தும் மறியலில்

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண்ணை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கு மாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

கசிப்புடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பெண்ணை மீண்டும் கடந்த 21 ஆம் திகதி வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போது சத்தியப்பிரமாண கடதாசியை நெல்லியடிப் பொலிஸார் சமர்ப்பித்தனர்.

இதனையடுத்து அவரை மீண்டும் 04.01.2018 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-60)

# கொஸ்கொட சுஜீயை கைது செய்ய சர்வதேச சிவப்பு அறிவித்தல் விடுப்பு

(கொழும்பு)

திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பில் இலங்கை பொலிஸாரால் தேடப்பட்டு வரும் தற்போது டுபாயில் இருப்பதாக நம்பப்படும், பிரபல பாதாள உலக தலைவர்களான கொஸ்கொட சுஜீ மற்றும் மாகந்துரே மதூஷ் ஆகியோருக்கு எதிராக சிவப்பு மற்றும் நீல அறிவித்தல்களை சர்வதேச பொலிஸார் பிறப்பித்துள்ளனர். மனிதப் படுகொலைகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் ஆகிய திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பிலேயே இந்த சிவப்பு, நீல அறிவித்தல்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தெற்கின் பிரபல பாதாள உலக தலைவனாக கருதப்படும் கொஸ்கொட சுஜீ எனப்படும் கஜமுனி சுஜீவ டி சில்வாவுக்கு மனிதப் படுகொலைகள் தொடர்பிலும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பிலும் சர்வதேச பொலிஸாரால் சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் மாகந்துரே மதூஷ் எனப்படும் சமரசிங்க ஆரச்சிகே மதூஷ் லக் ஷித்தவுக்கு எதிராக இலங்கை பொலிஸாரினால் சர்வதேச பொலிஸாருக்கு சாட்சிகள் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்படும் செயன்முறை பூர்த்தியடையும் வரையில், அவருக்கு எதிராக நீல அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளைத் தளபதியும், திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான எம்.ஆர். லதீபின் கீழ் இயங்கும் பாதாள உலகத்தை ஒழிக்கும் பிரிவான திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவின் ஊடாக திரட்டப்பட்ட 25 பாதாள உலக குழுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடையோரின் சாட்சியங்கள் சர்வதேச பொலிஸாருக்கு இந்த சிவப்பு அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் ஆவணப் பிரிவின் ஊடாக குற்றப் புலனாய்வுப்பிரிவின் சர்வதேச பொலிஸ் பிரிவுக்கு அந்த தகவல்கள் வழங்கப்பட்டு, அவர்கள் ஊடாக அவை சர்வதேச பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.


இந் நிலையிலேயே தற்போது சிவப்பு மற்றும் நீல அறிவித்தல்கள் இவ்விரு பாதாள உலக தலைவர்களுக்கும் எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் கொஸ்கொட சுஜீயையும், மாகந்துரே மதூஷையும் எப்படியேனும் கைதுசெய்ய திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவு பல்முனை திட்டங்களை வகுத்துள்ள நிலையிலேயே இந் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

# சாய்ந்தமருதில் பதற்றம் மு.கா. வேட்பாளர்களின் வீடுகளுக்கு தாக்குதல்



(ஏறாவூர்)



சாய்ந்தமருதில் நேற்று முன்தினம் மாலை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அங்கு வருகைத்தரவிருப்பதாகக் கூறி பலர் கறுப்புக்கொடி ஏந்தி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதில் அங்கு பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது. நிலைமையைக் கட்டுப்படுத்த அந்தப் பிரதேசத்தில் பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, சாய்ந்தமருதிலிருந்து மு.கா.அடங்கிய ஐ.தே.க.வில் கல்முனை மாகரசபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலரின் வீடுகள் சேதத்திற்குள்ளானதாக கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இதன்போது முன்னாள் பிரதி மேயர் பிர்தௌஸின் வீட்டுக்கும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# நாட்டில் 1,80,988 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் தற்போது வரையான காலப் பகுதியில் 180,988 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக இலங்கை தொற்று நோய் தடுப்பு பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இவ்வறிக்கையின்படி சுமார் நூற்றுக்கு 41.57 வீதமான டெங்கு நோய் தாக்கம் மேல் மாகாணத்திலேயே பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இம் மாவட்டத்தில் சுமார் 33,660 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதே வேளை கம்பஹா மாவட்டத்தில் 31,095 நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 10,497 நோயாளர்களும், கண்டி மாவட்டத்தில் 14,099 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். ஏனைய மாவட்டங்களில் சராசரியாக 500 தொடக்கம் 3000 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் அவதானிக்கப்பட்டுள்ள இந்நிலைமையானது நுளம்புகள் பரவும் வகையிலான சூழலை ஏற்படுத்தாதிருத்தல் வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு இந்நோய் நிலைமையில் இருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றது.

மேலும் டெங்கு நோய்க்கான அறிகுறிகள் பற்றிய தெளிவினை மக்கள் பெற்றிருப்பதோடு நோய் நிலைமை வராமல் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும். அதேவேளை நோய் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனை குணப்படுத்துவதற்காக உரிய முறையில் சிகிச்சைகளை பெற வேண்டியதும் அவசியமாகும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# பதின்மூன்று வருடங்
# ஆறாத ரணமாய் சுனா

சுனாமி ஏற்பட்டு 13 வருடங்கள் கடந்திருக்கின்றன. ஆனால் அதன் வடுக்களிலிருந்து இன்னும் மீளாத நிலையில் உள்ளது.

இயற்கையின் சீற்றம் ஏற்படும்போது மக்களே விழிப்பாகவும் சிறப்பாகவும் தங்களை தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை கடந்த சுனாமி பேரழிவு எமக்கு பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

சுமத்ரா தீவுப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் 8.9 ரிக்டர் அளவு பதிவாகியுள்ளது. கடற்பரப்பில் ஏற்பட்ட இதே வேகமுள்ள நிலநடுக்கம் தரைப் பகுதியில் ஏற்பட்டிருந்தால் ஆசியாவின் பல நாடுகள் தரை மட்டமாகியிருக்கும். இதன் பாதிப்பு பல ஆயிரம் அணுகுண்டுகள் வெடித்ததற்குச் சமமாக இருக்கும் என்று புவியமைப்பியல் வல்லுநர்கள் அப்போது தெரிவித்திருந்தனர்.

சுனாமி போன்ற தாக்கங்களை நாம் எதிர்கொண்ட போது உலகத்தின் மீதுள்ள பற்று காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக ஆயுள் முழுவதையும் செலவு செய்து சேகரித்துக் கொண்ட பொருட்கள் சில நொடிகளில் அழிந்து போகின. அதேபோன்று மரணத்திலிருந்தும் எம்மால் தப்ப முடியாது போனது என்பது எமக்கு முன்னுள்ள படிப்பினையாகும்.

உலகில் சுனாமி, பூகம்பம், புயல், மழை வெள்ளம், எரிமலை வெடிப்புக்கள் என பல நடந்து கொண்டேயிருக்கின்றன. கடந்த 100 வருடங்களில் மிகவும் மனித இனத்தை பாதித்த சம்பவங்களாக 1923ஆம் ஆண்டு ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேர் இறந்தனர், 1935 இல் இந்தியாவின் குவெட்டாவில் 50,000 பேரும், 1939இல் சிலியில் 28,000 பேரும், அதே ஆண்டு துருக்கியில் 33,000 பேரும், 1960இல் மொரோக்காவில் 12,000 பேரும், 1976 இல் சீனாவில் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் பேரும், அதே ஆண்டு கவுதமாலாவில் 23,000 பேரும், 1978 இல் ஈரானில் 25,000 பேரும், 1985 இல் மெக்ஸிகோவில் 9,500 பேரும், 1988இல் ஆர்மீனியாவில் 25,000 பேரும், 1990இல் ஈரானில் 50,000 பேரும், 1993 இல் இந்தியாவின் லட்டூரில் 10,000 பேரும், 1995 இல் ஜப்பானில் 6,000 பேரும், 1998இல் ஆப்கானிஸ் தான் மற்றும் தஜிகிஸ்தானில் 5,000 பேரும், 1999 இல் துருக்கியில் 17,000 பேரும், 2001 இல் குஜராத்தில் 13,000 பேரும், 2003 இல் ஈரானில் 41,000 பேரும் பூகம்பத்தால் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை பேரழிவு ஏற்படுத்திய பூகம்பங்களின் பட்டியல்.

இவை தவிர சில ஆயிரக்கணக்கில் பலி கொண்ட பூகம்பங்களும் உண்டு. இவை மனித இனத்தை பெரிதும் பாதித்தாலும் மிருக இனங்கள் பெரிதும் தப்பிக் கொள்வதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இவை அனைத்தும் மனிதனை தூய்மைப்படுத்தவும், சிந்திக்கவும் வைத்தது.

அனர்த்தங்கள் சம்பவிக்கும் வேளைகளில் அவற்றிற்கு ஆயத்தமாகும் முகமாக அனர்த்த முன்னாயத்த திட்டங்கள், அறிவூட்டல், அனர்த்த அறிவிப்பு ஒலியெழுப்பல், சகல மட்டங்களிலும் விருத்தியாக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம் மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை ஆகியவற்றிலும் இந்த விடயங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.மு. 426 கிரேக்க வரலாற்றாசிரியர் தியுசிடைட்ஸ், சுனாமி ஏற்படுவதற்கான காரணங்களை 'பிலோப் போனேசியப் போர் வரலாறு' என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவர் தான் முதன் முதலில் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும், எந்த இடத்தில் நிலநடுக்கம் கடலில் உண்டானதோ அங்கு கடல் உள்வாங்கும். பின்பு திடீர் பின்வாங் குதலும், மறு இரட்டை சக்தியும் கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நிலநடுக்கம் ஏற்படாமல் இப்படி ஒரு விபத்து ஏற்பட வாய்ப்பே இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 365 இல் அலெக்சாண்டிரியாவில் மிகப் பெரிய அழிவுக்குப்பின் ரோமன் வரலாற்றாசிரியர் அம்மியனஸ் மாசில்லினுஸ் சுனாமி என்பது, நில நடுக்கத்தில் தொடங்கி கடல் நீர் பின்னடைவு. அதைத் தொடர்ந்து இராட்சத அலை என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது என்றார். அதாவது, நிலநடுக்கம் என்பது நிலப்பகுதியில்,கடல் பகுதியில், மலைப்பகுதியில் ஏற்படும். நிலப்பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழமான பகுதியிலுள்ள நிலத்தட்டுக்களின் அசைவு பெரிய அலைகளை உருவாக்குகின்றது. மலையில் எரிமலையாக உருவெடுக்கிறது. பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலத்தட்டுத்தான் இருந்தது. அதன் மீது தான் பூமி இருந்தது. ஆனால் கண்டங்களாகப் பிரியப் பிரிய அதன் தட்டு வெப்ப இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு நிலத்தட்டுக்கள் உருவாகின. இந்தத் தட்டுக்களின் மீதுதான் ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த நிலத்தட்டுக்கள் தான். இதைத் தான் 'டெக்டானிக் பிளேட்கள்' என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆராய்ச்சியாளர்கள் கூற்றுப்படி, கி.மு. 365 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி கிழக்கு மத்திய தரைக்கடலில் இவ்வாறு தோன்றி, எகிப்தில் அலெக்சாண்டிரியாவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடல் படுகையில் திடீரென ஏற்படும் மாற்றத்தால் மேலிருக்கும் தண்ணீர் செங்குத்தாக இடமாற்றம் அடைவதால் சுனாமி உருவாகும். டெக்டானிக் நிலநடுக்கங்கள், பூமியின் புவி ஓடு உருக்குலைவதால் உண்டாகும். இது கடலுக்கு அடியில் ஏற்படும் போது சிதைக்கப்பட்ட பகுதியிலுள்ள தண்ணீர், சமநிலையில் இருந்து இடம் பெயர்கிறது. டெக்டான் தட்டுகளின் தவறான சுழற்சி காரணமாக, செங்குத்தாக நீர் இடப் பெயர்ச்சி செய்யப்படுகிறது. இயக்கத்தில் ஏற்படும் சாதாரண தவறுகளாலும் கடல் படுகையில் இடப் பெயர்ச்சிஏற்படும். ஆனாலும் இவை பெரிய சுனாமியை உண்டாக்குவது இல்லை. சுனாமிகள் ஒரு சிறிய அலை வீச்சும், மிக நீண்ட அலை நீளமும் உடையவை. சாதாரண கடல் அலை 30 அல்லது 40 மீற்றர் அலை நீளம் உள்ளவை. ஆனால் சுனாமி அலைகள் சில நூறு கிலோ மீற்றர் நீளம் உடையவை. இவை கடல் பரப்பைவிட 300 மில்லி மீற்றர் மேலே சிறிய வீக்கம் போன்று உருவாகும். அவை தாழ்வான நிலை அடையும் போது மிக அதிக உயரமாக மேலெழுகிறது. சுனாமியின் சிறிய அலைகூட கடலோரப்பகுதியை மூழ்கடித்து விட முடியும்.

ஏப்ரல் 1946, அலாஸ்காவில் அலேடன் தீவுகளுக்கு அருகில் 7.8 ரிக்டர் அளவுகள் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் 14 மீற்றர் உயரத்திற்கு அலை மேலே எழுந்து ஹவாய் தீவில் உள்ள ஹிலோ என்ற இடத்தையே அழித்து விட்டது. பசுபிக் பெருங்கடல் தரையில் அலாஸ்கா கீழ் நோக்கித் தள்ளப்பட்டதால், உண்டான பூகம்பமே இதற்குக் காரணம். குறுகும் எல்லைகளில் இருந்தும் ஸ்டாரிக்கா என்ற இடத்தில் 8,000 வருடங்களுக்கு முன் சுனாமி தோன்றியது. கிராண்ட் பேங்க் 1929, பப்புவா நியூகினியா 1998 (டப்பின் 2001) சுனாமிகள் ஏற்படக் காரணம் பூகம்பத்தின் மூலம் உண்டான வண்டல் கடலில் சென்று கலந்ததால் உண்டானது. ஸ்டாரிக்கா வண்டல் தோல்விக்குச் சரியான காரணம் தெரியவில்லை. அதிகப்படியான வண்டல்கள், ஒரு நிலநடுக்கம் அல்லது எரிவாயு ஹைட்ரேட் வெளியானது (மீத்தேன் போன்ற வாயுக்கள்) காரணமாகவும் ஏற்பட்டிருக்கலாம். 1960 வால்டிவியா பூகம்பம் (9.5 ஆறு), 1964 அலாஸ்கா பூகம்பம் (9.2 ஆறு), 2004இல் இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கம் மற்றும் 2011ல் தோஹு பூகம்பம் (9.0 ஆறு) போன்றவை சமீபத்தில் நிகழ்ந்த சக்தி வாய்ந்த நீள் ஊடுருவு பூகம்பங்கள். ஜப்பானில் சிறிய (4.2 ஆறு) பூகம்பம் ஏற்பட்டு அருகிலுள்ள கரையோரப் பகுதிகளை ஒரு சில நிமிடங்களில் பாழ்படுத்தியது.


1950களில் பெரும் நிலச்சரிவுகள் மூலம் தான் பெரிய சுனாமிகள் உண்டானது என்று நம்பப்பட்டது. நீருக்கடியில் ஏற்படும் நிலச்சரிவுகளால் ஏற்படும் சுனாமியை 'சியோருக்கஸ்' என்று அழைத்தனர். இதனால் அதிக அளவு நீர் இடப்பெயர்ச்சி செய்யப்படுகிறது. ஏனெனில் நிலச்சரிவினால் உண்டாகும் கழிவுகள் அல்லது விரிவாக்கத்தால் உண்டாகும் சக்தி திரும்பவும் நீருக்குள்ளேயே செலுத்தப்படுகிறது. 1958இல் மிகப்பெரிய நிலச்சரிவு, அலாஸ்காவின் லிடுயா விரிகுடா பகுதியில் ஏற்பட்டபோது 524 மீற்றர் உயரத்திற்கு (1700 அடிக்கு மேல்) அலை ஏற்பட்டது.

சுனாமிகள் இரு வழிகளில் சேதத்தை ஏற்படுத்துகிறது. பெருமளவு சக்தியுள்ள பெரிய அலை (நீரலை) அதிக வேகத்தில் செல்வதாலும், அலைகள் பெரிய அளவு இல்லாவிட்டாலும் நிலப்பகுதியை மொத்தமாக அழித்து, எல்லாப் பொருட்களையும் தன்னுடன் எடுத்துச்











# ...ங்கள் ஆனதோ!
# ...னாமி நினைவுகள்







இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் டிசெம்பர் 26 ஆம் திகதி என்பது நாட்டின் கரையோரத்தில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களைக் கதறியழ வைத்து கிலி கொள்ளச் செய்த ஒரு நாளாகும்.

"சுனாமி" - இது கரையோர மக்களைக் கதிகலக்கி, கண்ணீர் மல்க வைத்த ஒரு சொல். இந்த ஜப்பானியச் சொல்லின் அர்த்தம் இப்போது இலங்கையர்களுக்கு அதிலும் குறிப்பாக கரையோரப் பகுதி மக்களுக்கு நன்கு பரிச்சயமான ஒன்றாகி விட்டிருக்கிறது.

கடந்த 2004 டிசெம்பரில் ஏற்பட்ட உயிரிழப்புக்களும் பொருளாதார அழிவுகளும் அந்தப் பாதிப்புக்களிலிருந்து இன்று வரை முழுமையாக மீள முடியாமலே ஒரு சில குடும்பங்கள் காலங்கழிக்கின்றன.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி இந்தோனேசியாவில் ஏற்பட்ட 8.9 ரிக்டர் அளவிலான பூகம்பத்தினால் இந்தோனேசியாவின் ஆச்சேயில் மாத்திரம் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் பேரும் இலங்கை, இந்தியா உட்பட 11 பிற அண்டை நாடுகளில் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேரும் வெறும் மூன்றே நிமிட நேர சுனாமிப் பேரலையால் கொல்லப்பட்டிருந்தார்கள்.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி காலை 8.20 மணியளவில் கடலை விட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் அதிவேகமாக மேலெழுந்த பேரலைகள் ஒரு சில நிமிடங்களில் கரையைக் கடந்து ஊருக்குள் ஊடுருவியிருந்தது.

இதனால், உழைப்பிடங்களாகவும் உறைவிடங்களாகவும் உல்லாச புரிகளாகவும் ஓய்விடங்களாகவும் எழில் கொஞ்சும் தங்கக் கடற்கரைகளாகவும் திகழ்ந்த இடங்களெல்லாம் ஒருசில நிமிட நேரத்தில் நிசப்த மயானங்களாக மாறிவிட்டிருந்தன.

சுமார் ஐந்து நிமிட நேரத்திற்கும் குறைவான சுனாமித் தாக்கம் நம் நாட்டில் அரை இலட்சத்துக்கும் சற்றுக் குறைவானோரின் வாழ்வை அழித்து விட்டுப் போனது.

அநேகரை அநாதைகளாகவும் ஆயிரமாயிரம் பேரை தங்களது இருப்பிடங்களிலிருந்து வெருண்டோடச் செய்து அகதிகளாகவும் ஆக்கிவிட்டிருந்தது.

எப்படியோ இன்றோடு 13 வருடங்கள் கழிந்துவிட்ட தற்போதைய நிலையில் சுனாமி ஏற்படுத்திய பேரழிவுத் தாக்கங்களிலிருந்தும் மனப்பாதிப்புகளிலிருந்தும் மக்கள் மீட்சி பெற முடிந்திருக்கிறது என்று பொதுவாகத் திருப்திப்பட்டாலும், சிலருக்கு இன்னமும் சுனாமி விட்டுச் சென்ற மாறாத தடங்கள் ஆறாத ரணங்களாகவே உள்ளன.

சுனாமி இன, மத, பேதம் பார்த்துத் தாக்கவில்லை. வற்றாத அருட்கடலை தமது வாழ்வாதாரத்திற்காக நம்பிக் கரையில் வாழ்ந்த அனைத்து இன மீனவர் சமுதாயத்தையும் சுனாமி அழித்து விட்டுப் போனது.

கடல் அலை என்பது தாலாட்டு இசை என்றே நம்மில் பெரும்பாலானோர் நினைத்தும் அதை அனுபவித்து மகிழ்ந்துமிருந்தனர்.

ஆனால், முழு உலகையும் உலுக்கி அசைத்துப் பார்க்கும் துன்பியல் ஒலியாக பூகம்பமும் அதனால் உண்டாகும் பேரலைகளும் மாறாமல் வரலாற்று மனத்திரையில் பதிந்து விட்டிருக்கின்றன.

எவ்வாறாயினும் வாழ்வதற்குத் தோதாகவுள்ள இந்த ஒரேயொரு பூமிப்பந்தில் இயற்கையின் நியதிகளுக்கு இணங்கித்தான் வாழ வேண்டும் என்ற யதார்த்தத்தையும் உணர வேண்டிய தேவைப்பாடும் உள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டோரைப்போல சுனாமியால் பாதிக்கப்பட்டோரும் 13 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இன்னமும் அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது நமது நாட்டின் "ஒருநாடு பல நீதி" என்ற வெறுப்புக் கலந்த கொள்கைகளையிட்டு மனம் வருந்த வேண்டியுள்ளது.

இப்படியாக கசப்பும் கவலையும் நிறைந்ததாக கடற்பேரலைத் தாக்கத்திற்குள்ளான கரையோர சமுதாய மக்களின் வாழ்வு கரைந்து கொண்டிருக்கின்றது.

குறிப்பாக திஸ்ஸ மஹாராம கிரிந்த என்ற இடத்தில் 2004 இல் சுனாமி கரையொதுக்கிய "வெலிகொவுவா கொழும்ப" என்ற கப்பல் கடலிலிருந்து சுமார் 500 மீற்றர்களுக்கப்பால் தரையில் சுமார் 30 அடி உயரத்தில் இந்தக் கப்பல் சுனாமி அலையால் லாவகமாக அள்ளிச் செல்லப்பட்டு தரையில் போடப்பட்டிருந்தது.

சுமார் ஆறு மாதங்களாக எடுத்த பெரு முயற்சியின் பயனாக பாரிய அகழி ஒன்றை வெட்டி கரைக்குள் கடலை உள்ளெடுத்து கப்பலை மீண்டும் கடலுக்குள் அனுப்ப முடிந்தது. இயற்கை என்றால் என்ன அவ்வளவு இலேசான காரியமா என்பதற்கு இதுவும் ஒரு சாட்சி.

**ஏ.எச்.ஏ.ஹுஸைன் அப்துல்**

சென்று விடுவதாலும் பெரும் சேதம் ஏற்படுகிறது.

மிகப்பெரிய சுனாமியைத் தவிர நொருங்கிய அலைகளை உடைக்க முடியாது. மாறாக ஒரு வேகமாக நகரும் அலைகளின் துவாரம் போன்று தெரியும். விரிகுடாக்கள் மற்றும் மிகவும் ஆழமான நீர் அருகில் சுனாமிகள் உண்டானால் அலை சுனாமியை ஒரு படிக்கட்டு போன்றும், ஒரு செங்குத்தான அலையாகவும் மாற்றுகிறது. இதன் காரணமாகத் தான் ஜப்பானிய மொழியில் இதனை 'துறைமுக அலை' என்று கூறுவர். சில நேரங்களில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், மீன்பிடிக்கும் போது எந்த அசாதாரண அலையையும் உணராமல், கரைக்குத் திரும்பி வந்த பின் கிராமமே பெரிய கடலலையால் அழிவுற்றதைக் கண்டுள்ளனர். இது நாம் கண்ட சுனாமி பேரலையிலும் நடந்ததை சுட்டிக் காட்ட முடியும் சுனாமியின் உச்ச அலை கரையை அடையும் போது, கடல் மட்டம் தற்காலிகமாக உயரும். இதை 'ரன் அப்' என்று குறிப்பிடப்படுகிறது. இவை கடல் மட்டத்திற்கு மேலிருந்து அளக்கப்படுகிறது. அலை உச்சிகளுக்கு இடையில் பலமடங்கு அலைகள் பலமணி நேரங்கள் தொடர்ந்து வந்தால், அதைப்பெரிய சுனாமி என்கிறோம்.

சுனாமி பேரலை தாக்கி 13 வருடங்கள் கழியும் நிலையில் சுனாமி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்வதே மனிதர்கள் அதிலிருந்து ஓரளவு தம்மை தற்காத்துக் கொள்ள சிறந்த வழியொன்றாகும். வெறுமனே நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தி ஒவ்வொரு வருடமும் இழந்த உயிர்கள், உடைமைகளை நினைத்து அழுது புலம்பி கட்டிப் புரள்வதில் எவ்வித பயனும் மக்களுக்கு ஏற்பட்டு விடப்போவதில்லை.

கடல்தாயே நினைவிருக்கிறதா?

எம் உறவுகளை உன்னுடன் அள்ளிச்சென்று இன்றுடன் 13 வருடங்கள் கடந்துவிட்டன. எப்படி நீ அதை மறப்பாய். ஏனென்றால், நீ அள்ளிச் சென்ற அத்தனை உறவுகளும் உன் மடியில் விளையாடியவர்கள் தானே?

வெயிலோ, மழையோ, குளிரோ, புயலோ உன்னை நம்பி நாடிவந்த உறவுகளை ஊருடனேயே அள்ளி விழுங்கி ஏப்பம்விடும் அளவுக்கு நாம் என்ன பிழை செய்துவிட்டோம்.

"சிறுநண்டு மணல் மீது படமொன்று கீறும்.

சிலவேளை அதைவந்து கடல் கொண்டு போகும்..."

என்று சின்னச்சிட்டுக்கள் அத்தனையும் உன்னருகில் உன்னுரை அள்ளி ஆளுக்காள் அப்பி விளையாடிய போதெல்லாம் சிறிதேனும் கோபப்படாமல் சிரித்துக் கொண்டிருப்பாயே அலையால் தாலாட்டியபடி.

வானிலை அறிக்கை வாசிக்கப்படும் மீனவர் கடலில் இறங்க வேண்டாமென. இருப்பினும் நாம் புறப்படுவோம்.

கட்டு மரந்தனை தள்ளி பாயை விரித்து உன்னில் பயணிக்க தாயாய் எமைக்கரைசேர்ப்பாயே மறந்துவிட்டாயா?

கருமேகம் சூழ்ந்து கடலே ஊரை விழுங்குவதுபோல உருமறைப்பாய்.

அப்போதெல்லாம் எம் பிள்ளைகள் உன் அழகை ரசித்துக்கொண்டே கரையில் நண்டு பிடித்து களிப்புறுவர்.

நீ அவர்களை அழைத்ததில்லையே?

பாடசாலை முடிந்தவுடன் பிள்ளைகள் வீடு வருவார்களோ, இல்லையோ முதலில் வந்து உன்னில் நீச்சலடித்து பழகிய போதெல்லாம் மெல்லிய அலையால் அவர்களை மிதத்தி நீச்சல் கற்பிக்கும் ஆசிரியராயிருந்தாயே? எப்படி உன்னால் இப்படி விஸ்வரூபம் எடுக்க முடிந்தது?

நாம் செய்யாத குற்றத்தை செய்துவிட்டதாய் யார் சொன்னாலும் உன் மீதுதானே சத்தியம் செய்வோம். உன் மீது யாரும் பொய்ச்சத்தியம் செய்தால் எம் இதயம் நொறுங்கிவிடும். ஏனென்றால், உன்னையும் எங்களையும் பிரித்துவிட முடியாதபடி எம் உணர்வுகளில் பின்னிப் பிணைந்திருந்தாய். ஆனால் அந்த உறவுப் பின்னல்களையெல்லாம் உடைத்தெறிந்து, எம் உறவுகளையும் உடைத்தெறிந்து விட்டு மீண்டும் நீ அமைதியானதை எம்மால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லையம்மா!

கடலம்மா! கடலம்மா! என்று

உப்புக்காற்றைக் கிழிக்குமளவிற்கு கத்திக்கத்தி உன்னை அழைப்போமே. அப்போதெல்லாம் எம்முடன் எம்மில் ஒருவராய் இருக்கிறாய் என்றல்லவா நினைத்திருந்தோம்.

எம் உறவுகள் அத்தனையையும் நீ விழுங்கிவிட்டு மௌனமாய் இருந்தபோதும்கூட உன்னிடம் வந்து தஞ்சமடைந்தோமே. தாயை விட்டு எப்படி சேய்கள் வாழும். நீதானே எங்கள் அத்தனைக்கும் சொந்தக்காரி. நீ எங்களை எட்டி உதைத்தாலும் உன்னை விட்டு எம்மால் எப்படி இருந்திட முடியும். ஏனென்றால் நீ எம் அம்மா. அல்லது அன்பு என்பதால் எம் வாழ்வில் இருந்து வாழ்வாதாரம் அத்தனையிலும் நீ என்று உன்னை எம் உயிரினில் வைத்திருக்க நீயோ எம் ஊரில் ஒரு பூவைக்கூட விட்டுவைக்காமல் பிடுங்கி எடுத்துவிட்டாய்.

இருந்தும் என் செய்ய? உன்னை விட்டால் எமக்கு யாரம்மா என அத்தனையும் மறந்து மீண்டும் உன்னிடத்தே அடைக்கலமாகி விட்டோம். ஆனாலும் எம் அத்தனை உறவுகளின் நினைவுகள் நீங்கா வடுக்களாய் எம் நெஞ்சில் நிலைத்து விட்டன.

எது எப்படியோ எம் உறவுகள் அத்தனையும் உன்னில் வாழ்கிறார் எனும் நினைவு எம்மில் இருந்து வரும் பெருமூச்சின் வெப்பத்தை ஓரளவு தணித்துக் கொள்கிறது.

அம்மா! உன்னிடம் உன் பிள்ளைகள் மீண்டும் மீண்டும் இரந்து கேட்கிறோம். இன்னொரு முறை நீ இப்படி கோரத் தாண்டவமாடிவிடாதே. ஏனென்றால், இத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் எம்மில் இருந்து இழக்கக் கூடாத அனைத்தையும் இழந்து புழுவாய்த்துடித்து இப்போதே அந்த ரணங்களில் இருந்து மீண்டெழுந்து கொண்டிருக்கின்றோம்.

பட்டமரங்களின் நிழலிலே விதைக்கப்பட்ட விதைகளை முளைக்க விடு. அவை விருட்சமாகி விழுது விட்டும். இது உன்னை தாயாக நினைக்கும் ஒரு தனயனின் ஆத்மார்த்த குரல்.



**மாவை.நா.கஜேந்திரன்**

# விமான சேவை ஊழல், மோசடிகளைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு ஜனவரி முதல் வாரத்தில்



(கொழும்பு)

மக்களின் உடைமைகளுக்கும் அரச சொத்துக்களுக்கும் இழப்பினை ஏற்படுத்திய ஸ்ரீலங்கன் ,விமான சேவை, மிஹின் எயார் விமான சேவை என்பவற்றில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் நியமிக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் கடுவெல நகர வாராந்த சந்தைக் கட்டட வளாகத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் சந்திப்பின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசாரத்திற்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் சந்திப்புகளுள் ஒன்றாக "வெற்றிபெறும் கடுவெல - போராட்டத்தை ஆரம்பிப்போம்" எனும் தொனிப் பொருளில் இந்த மக்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த மக்கள் சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதி ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளுக்கெதிராக எந்தவொரு அரசாங்கமும் இதுவரை மேற்கொண்டிராத தீர்மானங்களை மேற்கொண்டதுடன், எதிர்காலத்தில் ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒழுக்கமான அரசியல் தலைமுறையையும் தூய்மையான தேசிய அரசியல் இயக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கான பொறுப்பினை தாம் நிறைவேற்றுவதாகவும் தெரிவித்தார்.

சிறந்த நாட்டினைக் கட்டியெழுப்பும் பாதையில் சிறந்த உள்ளூராட்சி நிறுவனக் கட்டமைப்பினுள் ஒழுக்கமும் நற்பண்புகளும் உடைய உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளை உருவாக்குவதற்கான தேவை குறித்து சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சிறந்த மக்கள் சேவையை வழங்கக் கூடிய உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊழல், மோசடிகளற்ற நிறுவனங்களாகத் தாபிக்கப்படும் போதே எல்லையற்ற நன்மைகளை மக்களுக்கு வழங்கக்கூடியதாக அமையும் என்றும் தெரிவித்தார்.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது, சிறந்த புத்திசாலித்தனமான, நேர்மையான, நாட்டை நேசிக்கும் அரசியல் தலைமுறையைக் கட்டியெழுப்ப எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி தூய்மையான அரசியல் இயக்கத்தினை உருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அமரர் பண்டாரநாயக்கவின் குருதியினால் தூய்மைப்படுத்தப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நோக்கமாகவும் அது அமைய வேண்டுமெனத் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களில் மோசமான ஊழல் நிலைமைகள் காணப்பட்டதுடன் கொலை, துஷ்பிரயோகங்கள், போதைப் பொருள் கடத்தல் மற்றும் அரச சொத்துக்களின் முறையற்ற பாவனையுடன், தமது கௌரவம் பற்றிக் கருதாது செயற்பட்டதுடன் இன்று அவற்றின் பிரதிபலன்களை அனுபவிக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல் வெற்றியின் பின்னர் உள்ளூராட்சி நிறுவனங்களில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, ஊழல், மோசடி, களவு சம்பவங்கள், வீண் விரயம் என்பவற்றிற்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்களைக்கட்சி என்ற வகையிலும் அரசாங்கம் என்ற வகையிலும் சந் தேகமின்றித்தான் செயற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மக்கள் சந்திப்பில் ஜீ.எச்.புத்ததாச, வீரகுமார திசாநாயக்க, மஞ்சுள புத்ததாச உள்ளிட்ட உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டர். (இ-7)

# இலங்கைக் கடற்படைத் தளபதி இந்தியாவில் 4 நாட்கள் பயணம்

(கொழும்பு)

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க, நான்கு நாட்கள் இந்தியாவில் அதிகாரபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை இலங்கை கடற்படைத் தளபதி இந்தியாவில் பயணம் மேற்கொண்டிருந்தார்.



இதன்போது, இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா, தென்பிராந்திய கட்டளைத் தளபதி வைஸ் அட்மிரல் கார்வே ஆகியோரைச் சந்தித்து கடற்படைத் தளபதி பேச்சு நடத்தியுள்ளார்.

கொச்சியிலுள்ள இந்தியக் கடற்படையின் தென்பிராந்திய கட்டளைத் தலைமையகத்துக்கும் சென்று பல்வேறு நிகழ்வுகள், சந்திப்புகளில் பங்கேற்றிருந்த இலங்கை கடற்படைத் தளபதி நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார். (இ-7)

# தாமரை மொட்டின் தலைவராக மகிந்த

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் தலைமை பொறுப்பை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்ளவுள்ளார்.

ஜனவரி 2 ஆம் திகதி சுகததாச அரங்கில் 20 கட்சிகளை இணைத்த புதிய கட்சியாக ஒன்றிணைந்த பொதுஜன முன்னணியாக இணையும்மாநாட்டில்இதனை தெரிவிக்கவுள்ளதாக பொதுஜன முன்னணி வட்டாரங்களின் மூலமாக தெரிய வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகராக செயற்பட்ட போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எந்தவொரு செயற்பாட்டிலும் அவர் பங்குகொள்ளவில்லை.

அதேபோல் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பிலும் எந்தவொரு பொறுப்பினையும் இதுவரையில் அவர் பெற்றிருக்கவும் இல்லை. அவ்வாறான நிலையில் தற்போது புதிதாக 20 கட்சிகளை இணைத்து ஒன்றிணைந்த பொதுஜன முன்னணியாக உருவாகும் பொதுஜன முன்னணியின் தலைமை பொறுப்பை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றுக்கொள்ளப்போவதாக தெரிய வருகின்றது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஒன்றிணைந்த பொதுஜன முன்னணியாக மாற்றம் பெறவுள்ள நிலையில் அன்றைய தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தலைமை பொறுப்பினை ஏற்றுகொள்ளவுள்ளதாக கூறப்படுகின்றது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது தாமரை மொட்டில் போட்டியிடும் பொதுஜன முன்னணிக்கு சக்தியாக முன்னெடுக்கப் படும் இந்த செயற்பாடுகள் மாபெரும் மாநாடாக 2 ஆம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டரங்களில் இடம்பெறவுள்ளது. இதன்போதே இந்த அறிவிப்பு விடுக்கப்படவுள்ளது. ஆகவே இது குறித்து தம்முடன் இணைந்து செயற்படும் சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதுடன் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பொதுஜன முன்னணியின் பிரதான நபர்களுடன் விசேட சந்திப்பொன்றும் இடம்பெற்றுள்ளது.

இதன்போதே இவ்வாறான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒன்றிணைந்த பொதுஜன முன்னணி நாட்டின் சகல பகுதிகளிலும் மிகப்பெரிய அளவில் மக்கள் சந்திப்புகள் மற்றும் கூட்டங்களை நடத்தவுள்ளதுடன் அனைத்து கூட்டங்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்குவார் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முக்கிய நபர்கள் சிலருடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாகவும் சிலரை பொதுஜன முன்னணியுடன் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொதுஜன முன்னணியின் மூலமாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### உடனே முடிவைச் சொல்லலாமா?

உடனுக்குடன் மின்னல் வேகத்தில் முடிவு எடுப்பவர்களைக்கண்டு நான் வியப்பதுண்டு. 'அடேயப்பா! எவ்வளவு பெரிய முடிவை ஒரு கணம்கூட யோசிக்காமல் சட்டென்று எடுத்து விட்டாரே இந்த மனிதர்!' என்று நான் மலைப்பது உண்டு. இது ஒரு தனி ஆற்றல்தான். இது எல்லோருக்கும் எளிதில் கைவரப் பெறுவதில்லை.

ஆனால் அதேநேரத்தில் இப்படி உடனுக்குடன் முடிவெடுப்பவர்களிடம் நான் கேட்டது உண்டு. ''உங்களுடைய அவசர முடிவுகள் எல்லமே சரியாக இருக்குமா?'' என்று.

இப்படி எவரைக்கெட்டாலும் "பெரும்பாலும் சரியாகத்தான் இருக்கும்'' என்றே சாதிக்கிறார்கள். இவர்கள் இக்கேள்வியைத் தங்கள் மனசாட்சியை வினாவினால்தான் சரியான பதில் கிடைக்கும்.

எந்தவொரு முடிவிலும் சாதகங்களும் உண்டு. பாதகங்களும் உண்டு. இவை எல்லாமே ஒரு நொடியில் நம் மனத்திரையில் தோன்றிடும் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தள்ளிப்போடவே முடியாத முடிவுகளை மட்டும் உடனுக்குடன் எடுத்துவிட்டு மற்ற எல்லா விடயங்களையும் சாதக, பாதகங்களை அலசிய பிறகு முடிவைச் சொல்வது நல்லது.

எந்தவொரு முடிவிற்கும் பல கண்ணோட்டங்கள் உண்டு. உடனுக்குடன் முடிவு எடுத்தாக வேண்டும் என்ற சூழ்நிலைகள் நம்மைக் கட்டாயப்படுத்தும் போது எல்லாக் கண்ணோட்டங்களும் நமக்குத் தோன்றிவிடுவதில்லை. ஆனால் தவறுதலாக தோன்றும் ஒன்றிரண்டை மட்டும் வைத்து முடிவுக்கு வந்துவிடுகிறோம்.

முடிவுக்கு வந்த பிறகுதான் நாம் சிந்திக்கத் தவறிய பல விடயங்கள் நினைவுக்கு வருகின்றன. முடிவு எடுக்கும் நேரத்தில் சில மணி நேரங்களை மிச்சப்படுத்த நினைவுக்கும் சிலருக்கு அதன் பிறகு காலமெல்லாம் வருந்தும்படி ஆகிவிடுவதுண்டு.

நாம் ஒரு நல்ல பதிலைச் சொல்ல வேண்டும் என ஒருவர் விண்ணப்ப மனு ஒன்றை நீட்டுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு நாம் அந்தக் கணமே பதிலைச் சொல்ல வேண்டும் என்று எவ்விதக் கட்டாயமும் இல்லை.

"எனக்கு யோசித்துச் சொல்லக் கொஞ்சம் அவகாசம் தேவை'' என்று சொல்லி வைக்கலாம். இதில் தவறே இல்லை. ரொம்பவும் அவசரப்படுத்தினால் "நாளை சொல்கிறேனே!'' என்று சொல்லலாம். "இதற்குப் போய் இந்த மனிதர் இவ்வளவு யோசிக்கிறாரே!'' என்று நம்மைப் பற்றித் தவறாக எடைபோட்டால் போடட்டும். சர்வ ஜாக்ரதையான மனிதர் என்றும் அவர் எண்ண இடமிருக்கிறது அல்லவா?

நாம் நல்ல மன நிலையுடன் இருந்தால் எதிராளி என்ன கேட்டாலும் சரி என்கிறோம். நாம் மூட்அவுட் ஆகியிருந்தால் எதிராளி என்ன கேட்டாலும் மறுக்கிறோம்.

ஆக இப்படிப்பட்ட சூழ்நிலையில் எடுக்கும் உடனடி முடிவுகள் பெரும்பாலும் தவறாகி விடுகின்றன. நாம் எந்த எண்ணத்தின் ஆதிக்கப் பிடியிலும் இல்லாமல் இருக்கும் போது தான் ஒரு முடிவை எடுக்க வேண்டும். அப்போது தான் அந்த முடிவு சரியாக இருக்க முடியும்.

எதையும் நாளை சொல்கிறேனே என்று சொல்லும் போது "இரண்டுவிதமான பதிலுக்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும்'' என்பதையும் சேர்த்துச் சொல்லிவிட வேண்டும். இப்படிச் செய்யும் போது எதிர்பார்ப்புக் குறையும் ஏமாற்றமும் குறையும்.

"நாளை என்று சொல்வது தவறே அல்ல! நாளை நாளை என்று நாளைத் தள்-ளிப் போட்டுக் கொண்டே செல்வதுதான் தவறு!

**லேனா தமிழ்வாணன்**

# ஜெருசலேம் விவகாரம் குறித்து தீர்மானம்

# ஐ.நாவுக்கு அமெரிக்கா வழங்கும் நிதியைக் குறைக்க ட்ரம்ப் முடிவு

(வோஷிங்டன்)
ஐ.நாவின் எதிர்வரும் 2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில், நிதியுதவியைக் குறைக்க அமெரிக்கா தீர்மானித்து ள்ளதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வருடமொன்றுக்கு 3.3 பில்லியன் அமெரிக்க டொலரூபா 22 சதவீதமான நிதியுதவியை ஐ.நா.வுக்கு அமெரிக்கா இதுவரைகாலமும் வழங்கிவந்தது. இந்நிலையில், ஐ.நாவின் 2018ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில், 285 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியைக் குறைக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளதாகவும், ட்ரம்ப்பின் நிர்வாகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.




இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இம்மாதம் 6ஆம் திகதி அங்கீகரித்திருந்தார். அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் இந்தத் தீர்மானத்தை மீளப்பெற்றுக்கொள்ள வலியுறுத்தி ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானமொன்றை கடந்த வாரம் முன்வைத்தது.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கும் நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவி நிறுத்தப்படுமென்று ஜனாதிபதி ட்ரம்ப் அச்சுறுத்தியிருந்தார். ஐ.நாவின் தீர்மானத்துக்கு ஆதரவாக 128 நாடுகளும் எதிராக 9 நாடுகளும் வாக்களித்தன. இதேவேளை, 35 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மக்கள் பணி தொடரும்

### மாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ்



(கரணவாய்)
நாட்டின் தேசிய கட்சியில் இணைந்து கொண்டோ அல்லது மாகாணசபை உறுப்பினராக இருந்துகொண்டோ செய்யாத பல விடயங்களை சாதாரண மனிதனாக இருந்து செய்து வந்தவன் நான். மக்கள் பணி செய்வதற்கு பதவிகள் தேவையில்லை என்றே நான் கருதுகின்றேன் என வடமாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் காலை கரவெட்டி துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆரம்பகாலங்களில் மிகவும் நெருக்கடியான கட்டங்களில் மக்களோடு மக்களாக சமூகப் பணி ஆற்றியவன். எந்தவித அரசியல் பலமோ அதிகாரங்களோ இல்லாது மக்களின் துன்ப துயரங்களுக்காக குரல்கொடுத்தவன், கரம் கொடுத்தவன். மாகாண சபை உறுப்பினராக வருவதற்கு முன்பதாகவே எனது பணியினை மக்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அவர்களின் ஆசைக்கு கிடைத்த பதவியே மாகாணசபை உறுப்பினர் பதவி. இதன் ஊடாக மேலும் பல குடும்பங்களுக்கு என்னால் உதவி செய்யக்கூடியதாக இருந்தது. பதவி இருந்தாலும் இல்லாது போனாலும் எனது மக்களுக்கான பணியினை நான் தொடர்ந்தும் ஆற்றுவேன்

கடந்த காலங்களில் பல பெற்றோர் பிள்ளைகளை நகர பாடசாலைகளில் சேர்ப்பதில் ஆர்வம் காட்டி வந்தார்கள். இன்று காசிநாதர் பாடசாலையில் பிள்ளைகளை சேர்ப்பதற்கு பெருமளவில் முண்டியடிக்கின்றார்கள். காரணம் இங்குள்ள ஆசிரியர்குழாம் திறம்பட தமது பணிகளை ஆற்றுகின்றது. மாணவர்களை கல்விப்பாதையில் முன்னேற்றம் காண செய்கின்றார்கள். அதனை கண்டு தமது பிள்ளைகளையும் இங்கே கல்வி கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் கோ.புஷ்பாகரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சு.சற்குணராஜா, மாகாண பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி ப.வல்லிபுரம், ஓய்வுநிலை ஆசிரியர் ஆகியோர் உட்பட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். (இ-60)

## மைத்திரியின் திடீர் அறிவிப்பால் மகிந்தவின் மனைவி பதற்றம்

(கொழும்பு)
ஸ்ரீலங்கன் மற்றும் மிஹின் லங்கா நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இதனால் பதற்றமடைந்த முன்னாள் முதல் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ சமாதானத்திற்காக தகவல் ஒன்றை ஜனாதிபதி தரப்பினருக்கு அனுப்பியுள்ளதாக தகவல்வெளியாகியுள்ளது.

மகிந்த ஆட்சியின் போது ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் தலைவராக ஷிராந்தி ராஜபக்ஷவின் சகோதரரான நிஷாந்த விக்கிரமசிங்க



என்பவரே செயற்பட்டார்.

அவர் தலைவராக செயற்பட்ட காலப்பகுதியில் ஸ்ரீலங்கன் நிறுவனத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பில் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டால், அனைத்து தகவல்களும் வெளியே வந்துவிடும் என ஷிராந்தி ராஜபக்ஷ அச்சமடைந்துள்ளார்.

இதனால் எந்தவொரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலாவது ராஜபக்ஷ தரப்பினரை ஜனாதிபதி தரப்பினருடன் சமாதானமாக்குவதற்கு தான் தலையிடுவதாக ஷிராந்தி தகவல் அனுப்பியுள்ளார்.

நிஷாந்த விக்கிரமசிங்க ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் தலைவராக செயற்பட்ட கால கட்டத்தில் உத்தியோகபூர்வ மற்ற தலைவியாக ஷிராந்தி ராஜபக்ஷ செயற்பட்டார். ஷிராந்தியின் அவசியத்திற்கமைய அங்கு பல மில்லியன் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் மத்தள விமான நிலையம் திறப்பு

(கொழும்பு)
அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் மத்தள விமானநிலையத்தை திறந்துவைக்க அரசாங்கம் தீவிர நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. எல்ல உள்ளிட்ட பகுதிகளின் சுற்றுலாத்துறையை மேலும் அபிவிருத்தி செய்ய ஜனவரி முதல் இருவாரத்திற்குள் பிரதமரிடம் அறிக்கை சமர்ப்பிக்கவும் சுற்றுலாத்துறை அமைச்சிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தென்னிலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் தெற்கில் வர்த்தக வலயங்களை ஆரம்பிக்கவும் துறைமுக அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவும் அரசாங்கம் அதிக அக்கறை செலுத்தி வருகின்றது.

சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் அம்பாந்தோட்டை துறைமுக வேலைத்திட்டங்கள் மற்றும் வர்த்தக வலயங்களை ஆரம்பிக்கும் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மத்தள விமான நிலையத்தைஅபிவிருத்தி செய்து அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்குள் திறந்து வைக்க சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் மத்தள விமான நிலைய அபிவிருத்தி குறித்து கடந்த காலங்களில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் உறுதியான தீர்மானம் எதையும் எடுக்க முடியவில்லை என அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும் தற்போது பேச்சுவார்த்தைகள் வெற்றி கண்டுள்ளதாகவும் விமான நிலைய அபிவிருத்தி குறித்து விரைவில் இந்திய அரசாங்கத்துடன் உடன்படிக்கைகளை



இறுதிப்படுத்த முடியும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மத்தள விமான நிலைய அபிவிருத்தியை அடுத்து பதுளை, பண்டாரவளை ஆகிய பகுதிகளின் சுற்றுலாத்துறை வளர்ச்சி அதிகரிக்கும் எனவும் ஆகவே எல்ல சுற்றுலா பிரதேசம், நீர்வீழ்ச்சி மற்றும் ஏனைய பகுதிகளின் சுற்றுலாத்துறையை பலப்படுத்த எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என பிரதமர் சுற்றுலாத்துறை அமைச்சிடம் வினவியுள்ளதுடன் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் இரு வாரங்களில் இது குறித்த அறிக்கை ஒன்றை தமக்கு வழங்குமாறும் பிரதமர் சுற்றுலாத்துறை அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## மாவா பாக்கு விற்பவர்களை உடன் தேடிக்கண்டுபிடியுங்கள்

### பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவு

(கரணவாய்)
பாடசாலைகளுக்கு அருகாமையில் மாவாப் பாக்கு விற்பனையில் ஈடுபடுபவர்களை தேடிக் கண்டுபிடித்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

துன்னாலைப் பகுதியில் மாவாப் பாக்கினை வைத்திருந்ததாக நெல்லியடிப் பொலிஸாரினால் 18 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரை கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மேற்படி சந்தேகநபர் ஞானசாரியார் பாடசாலைக்கு அருகில் இருந்தே மேற்படி பாக்கு பையினை எடுத்ததாக நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனையடுத்து பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து மாவா பாக்கு விற்பனை செய்வோரை தேடிக் கண்டு பிடிக்குமாறு நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (இ-60)





# நீரிலும் நிலத்திலும் தரையிறங்கும் விமானத்தை வெற்றிகரமாக சோதனை செய்து சாதித்தது சீனா

(பீஜிங்)

சீனா முதல் முறையாக நீரிலும் நிலத்திலும் தரையிறங்கும் உலகின் மிகப் பெரிய விமானத்தை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. சீன அரசுக்கு சொந்தமான விமான தயாரிப்பு நிறுவனமான விமான தொழில்துறை கழகம் நீரிலும், நிலத்திலும் தரையிறங்கக் கூடிய இந்த விமானத்தை வடிவமைத்துள்ளது. இந்த விமானத்தை தயாரிக்க எட்டு ஆண்டுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஏஜி600 ரக விமானத்திற்கு 'குன்லாங்' என பெயரிடப்பட்டுள்ளது. இதன் முதல் சோதனை ஓட்டம் நேற்று நடந்தது. குயாங்டங்க் மாகாணத்தின் ஜுகாயில் உள்ள ஜின்வான் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட குன்லாங் விமானம் சுமார் ஒரு மணி நேரம் வானில் பறந்து வெற்றிகரமாக ஓடுதளத்தில் தரையிறங்கியது. அந்த விமானத்தின் சோதனை ஓட்டம் சீனாவின் அரசு தொலைகாட்சியில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளது.





இந்த விமானம் 37 மீற்றர் நீளம் கொண்டது. அதன் சிறகுகள் 38.8 மீற்றர் நீளமானவை. இதில் மொத்தம் 4 இன்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதுவே, நீரிலும், நிலத்திலும் தரையிறங்கக் கூடிய மிகப்பெரிய விமானமாகும். இந்த விமானம் கடலில் மீட்பு பணியிலும், காட்டுத்தீ அணைப்பதற்கும், கடலோர கண்காணிப்புப் பணிக்கும் பயன்படுத்தப்படும்.

சுமார் 50 பேர் பயணம் செய்யக் கூடிய இந்த விமானத்தில் 20 நொடியில் 12 தொன் தண்ணீரைக் கொண்டு காட்டுத்தீயை அணைக்க முடியும். ஒரே நேரத்தில் 370 தொன் தண்ணீரை கொண்டு செல்ல முடியும்.

இந்த விமானத்தை வாங்க ஏற்கனவே 12 நாடுகள் முன்பதிவு செய்துள்ளன. (இ-7)

# இஸ்ரேலுக்கு ஆதரவாக தனது தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்ற கவுதமாலா முடிவு

அமெரிக்காவை தொடர்ந்து இஸ்ரேலுக்கு ஆதரவாக தன் நாட்டு தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு மாற்றப்போவதாக கவுதமாலா ஜனாதிபதி அறிவித்துள்ளார்.



இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த மாதம் அறிவிப்பை வெளியிட்டார். மேலும், தூதரகத்தை ஜெ சலேமு க்கு மாற்றவும் அவர் உத்தரவிட்டார். ட்ரம்ப் முடிவுக்கு உலக நாடுகள் கடும் எதிர்ப்பை பதிவு செய்தன. பாலஸ்தீனத்தில் இது பெரும் கொந்தளிப்பான நிலையை ஏற்படுத்தியது.

இதனை அடுத்து, அமெரிக்காவின் இந்த முடிவை திரும்பப்பெறக்கோரி சில தினங்களுக்கு முன்னர் ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இதனை ஆதரித்து வாக்களிக்கும் நாடுகளுக்கு நிதியுதவிகள் நிறுத்தப்படும் என்று ட்ரம்ப் வெளிப்படையாகவே மிரட்டல் விடுத்தார். இருப்பினும், 128 நாடுகள் இந்த தீர்மானத்தை ஆதரித்தன. 9 நாடுகள் மட்டுமே எதிர்த்து வாக்களித்தது. இதனால், அமெரிக்காவுக்கு நெருக்கடியான சூழல் ஏற்பட்டது. இந்நிலையில், இந்த தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்த நாடுகளில் ஒன்றாக கவுதமாலா, டெல் அவிவ் நகரில் உள்ள தனது தூதரகத்தை ஜெருசேலமுக்கு மாற்றப் போவதாக அறிவித்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகுவிடம் தொலைபேசியில் பேசிய பின்னர் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கவுதமாலா ஜனாதிபதி ஜிம்மி மோரா லெஸ் கூறியுள்ளார். மத்திய அமெரிக்க நாடான கவுதமாலா, அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடு என்பது குறிப் பிடத்தக்கது. (இ-7)

## அமெரிக்காவுக்குள் 11 நாடுகளின் அகதிகள் நுழைவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

அமெரிக்காவுக்குள் எகிப்து, ஈரான், ஈராக், லிபியா உள்ளிட்ட 11 நாடுகளின் அகதிகள் நுழைய விதிக்கப்பட்ட தடையை இரத்து செய்து அமெரிக்கா சீட்டில் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எகிப்து, ஈரான், ஈராக், லிபியா, மாலி, சோமாலியா, வடகொரியா, சூடான், சிரியா, ஏமன், தெற்கு சூடான் உள்ளிட்ட 11 நாடுகளைச் சேர்ந்த அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழைய தடைவிதித்து ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டு இருந்தார்.


இந்த தடை உத்தரவு 120 நாட்கள் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் பிறகும் அந்த தடை உத்தரவு முழுமையாக நீக்கப் படவில்லை. எனவே அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்காவின் சீட்டில் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு நீதிபதி ஜேம்ஸ் ராபர்ட் தலைமையில் நடந்தது.

அப்போது, நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அரசு தரப்பில் கூறப்பட்டது. அதை நீதிபதி ஏற்கவில்லை. எனவே 11 நாடுகளின் அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழைய விதிக்கப்பட்ட தடையை இரத்து செய்து உத்தரவிட்டார். 'அரசின் இத்தகைய முடிவு ஒருதலைபட்சமானது' என நீதிபதி ராபர்ட் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (இ-8)

# ஆப்கானில் உளவுத்துறை தலைமையகம் அருகே தற்கொலைப் படைத்தாக்குதலில் ஆறு பேர் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலிலுள்ள பொலிஸ் உளவுத்துறை தலைமையகம் அருகே தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர்.



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பொலிஸ் உளவுத்துறை தலைமையகம் உள்ளது. நேற்றுக் காலை ஊழியர்கள் அனைவரும் பணிக்கு வந்து கொண்டிருந்தனர்.

அப்போது, காரில் வந்த தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் கூட்டத்தில் புகுந்து உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்க வைத்தனர்.

இந்த தாக்குதலில் 6 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக உள்துறை செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

இருப்பினும், ஆப்கானிஸ்தான் அரசு இதை உறுதிப்படுத்தவில்லை.

கடந்த வாரம், இதே பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 6 பொலிஸார் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-8)

# காட்டலோனியா பிரிவினைவாதக் கட்சிகள் வெற்றி ஒற்றுமையாயிருக்க ஸ்பெயின் மன்னர் கோரிக்கை

(மாட்ரிட்)

காட்டாலோனியா பாராளுமன்றத் தேர்தலில் பிரிவினைவாதிகள் வெற்றி பெற்றுள்ள நிலையில், ஒற்றுமையாக இருப்போம் என ஸ்பெயின் மன்னர் நான்காம் பிலிப் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



ஸ்பெயினின் தன்னாட்சி பெற்ற மாகாணமான காட்டாலோனியா தனிநாடாக பிரிவது குறித்து வாக்கெடுப்பு நடத்தியிருந்தது. அதற்கு 90 சதவிகித மக்கள் ஆதரவாக வாக்களித்திருந்த நிலையில், கடந்த ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி காட்டாலோனியா தனிநாடு பிரகடனம் செய்தது. ஸ்பெயினில் இருந்து பிரிந்து சுதந்திர காட்டாலோனியா பிறந்து விட்டதாக பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

தனிநாடு பிரகடனம் அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே கட்டாலோனியா பாராளுமன்றம் கலைக்கப்படுவதாக ஸ்பெயின் அறிவித்தது. மேலும், காட்டாலோனியா நிர்வாகம் தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதாகவும் ஸ்பெயின் அரசு அறிவித்தது.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு கடந்த 21 ஆம் திகதி மறுதேர்தல் நடந்தது. வாக்கு எண்ணிக்கையில் பிரிவினைவாதக் கட்சிகளே அதிகமான இடங்களை வென்று தனிப் பெரும்பான்மை பெற்றுள்ளது.

அதே வேளையில், ஸ்பெயின் ஜனாதிபதி ரஜோய்யின் கட்சி படுமோசமாக தோல்வியடைந்துள்ளது. வெற்றிக்கு பின்னர் பேசிய காட்டாலோனியா முன்னாள் பிரதமர் பூட்சியமோண்டின், ஹார்லஸ் "ஸ்பெயின் முழுவதுமாக தோற்கடிக்கப்பட்டுள்ளது" என்றார்.

முழுவதும் பிரிவினைவாதிகளே வென்றுள்ள சூழலில் எங்கே மீண்டும் தனிநாடு கோரிக்கை வலுப்பெறுமோ என்று ஸ்பெயின் அரசு அச்சப்பட்டுள்ளது.


இந்நிலையில், ஸ்பெயின் மன்னர் நான்காம் பிலிப் தனது கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் ஒற்றுமையாக இருக்க காட்டாலோனியாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். 'மோதலுக்கு பதிலாக சகவாழ்வு' என்று தனது உரையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையே, கைது நடவடிக்கை பாயும் என்று கருதிய பூட்சியமோண்ட் இன்னும் ஜேர்மனியில் தான் உள்ளார். விரைவில், நாடு திரும்பி ஸ்பெயின் பிரதமரை சந்தித்து பேசுவார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-8)

# பாரதம்

## ஆர்.கே.நகரின் தேர்தல் முடிவு தி.மு.க., தினகரன் கூட்டுச்சதி

### ஓ.பி.எஸ் ,இ.பி.எஸ்.கூட்டறிக்கை



(சென்னை)

ஆர்.கே.நகர் இடைத் தேர்தல் முடிவு தி.மு.க.வும், டி.டி.வி.தினகரனும் செய்த கூட்டு சதியின் வெளிப்பாடு. இந்த வெற்றி அ.தி.மு.கவுக்கு சரிவையோ. பின் னடைவையோ ஏற்படுத்தாது" என்று எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் இதுவரை எந்த ஒரு சட்டமன்ற தொகுதியிலும் சந்தித்திராத படு தோல்வியை ஆர்.கே.நகர் சட்டமன்ற இடைத்தேர்தலில் தி.மு.க. சந்தித்து இருக்கிறது.

ஆர்.கே.நகர் தொகுதியில் தனக்கு இருக்கும் அடிப்படை வாக்குகளை கூட பெற முடியாத நிலை தி.மு.க.வுக்கு எப்படி ஏற்பட்டது என்பதை தமிழக மக்கள் வியப்புடன்நோக்குகிறார்கள். அதே வேளையில், அதற்கு பின்னணியாக தி.மு.க.வும், டி.டி.வி.தினகரனும் சேர்ந்து செய்துள்ள கூட்டுசதியை அறிந்து, பதவி ஆசைக்காக இப்படியும் சதி செய்வார்களா? என்று தி.மு.கவினரை நோக்கி கேள்வி எழுப்புகிறார்கள் தமிழக மக்கள்.

இரட்டை இலை சின்னத்தை தோற்கடிப்பதன் மூலம் ஒன்றுபட்டு அசைக்க முடியாத சக்தியாக நிற்கும் அ.தி.மு.க வின் வெற்றி வாய்ப்பை எப்படியாவது பறித்துவிட வேண்டும். எம்.ஜி. ஆரின் செல்வாக்கிற்கும் ஜெயலலிதாவின் புகழுக்கும் களங்கம் ஏற் படுத்தி விட வேண்டும் என்று தி.மு.க.வும் டி.டி.வி.தினகரனும் திட்டமிட்டு செய்த கூட்டு சதியின் வெளிப்பாடாக இந்த தேர்தல் முடிவு அமைந்து இருக்கிறது.

தி.மு.க.வின் செயல் தலைவர் மு.க.ஸ்டாலினும், ஜெயலலிதா வாழ்ந்த போதும், வாழ்வுக்கு பின்னும், அவருக்கும், அ.தி.மு.க.வுக்கும் துரோகம் செய்து கொண்டிருக்கும் டி.டி.வி. தினகரனும் இணைந்து ஏற்படுத்திக்கொண்ட ரகசிய உடன்பாட்டின்விளைவு தான் ஆர்.கே. நகர் தொகுதி இடைத்தேர்தல் முடிவு.

தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை. எதிரிக்கு இரண்டு கண்களும் போக வேண்டும் என்ற வக்கிர புத்தியுடன், தமிழகத்தில் நடைபெற்று கொண் டிருக்கும் ஜெயலலிதாவின் ஆட்சிக்கும், இரட்டை இலை சின்னத்துக்கும் உள்ள செல்வாக்கை எப்படியாவது குறைத்துவிட வேண்டும் என்பதற்காகவே. டி.டி.வி. தினகரனுடன் ரகசிய ஒப் பந்தம் செய்துகொண்டு, தனது வாக்கு வங்கியை தினகரனுக்கு திருப்பிவிட்டு அதிக வாக்குகள் பெற செய்திருக்கிறது தி.மு.க. எம்.ஜி.ஆர். கண்டெடுத்த வெற்றி சின்னம், ஜெயலலிதா மீட்டெடுத்த மக்கள் சின்னம் இரட்டை இலையை தோற்கடிப்பேன் என்று தினகரன் கூக்குரல் இட்டதும், அ.தி.மு.கவை டெபாசிட் இழக்க செய்வேன் என்று கூப்பாடு போட்டதும், தி.மு.கவுடன் செய்து கொண்ட ரகசிய ஒப்பந்தம் தந்த துணிவின் காரணமாகத்தான் என்பது தற்போது நிரூபணம் ஆகி இருக்கிறது.

ஜெயலலிதா வாழும் போதே அவருக்கு எதிராக சதிச்செயல் புரிந்து, ஜெயலலிதாவால் தன்னுடைய கண்ணிலேயே படக்கூடாது என்று போயஸ் தோட்டத்தைவிட்டு விரட்டப்பட்டதுடன் 10 ஆண்டுகளுக்கு மேலாக குடும்பத்தோடு கட்சியில் இருந்து நீக்கி வைக்கப்பட்ட டி.டி.வி. தினகரன் தனக்கு வாழ்வு தந்த ஜெயலலிதாவின் மறைவுக்கு பின்னும். தொடர்ந்து துரோகம் செய்வதையே தனது வாழ்க்கை முறையாக கொண்ட தி.மு.க.வுடன் கைகோர்த்து இருப்பது துரோகத்தின் உச்சம் ஆகும்.

தி.மு.கவை லஞ்ச ஊழலின் ஒட்டுமொத்த உருவமாக உலகத்தின் முன் நிறுத்திய 2ஜி ஊழலை, வெளிச்சம் போட்டு காட்டியவர் ஜெயலலிதா தான் என்பதை நாடே அறியும். ஆனால் இந்த ஊழல் வழக்கில் இருந்து ஆ.ராசாவும், கனிமொழியும் விடுதலையானது தனக்கு மகிழ்ச்சி தருகிறது என்று வாழ்த்துச்சொல்லி, ஜெயலலிதாவுக்கு செய்யும் துரோகத்தை, தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு வெளிப்படுத்தி காட்டிக் கொண்டார் டி.டி.வி.தினகரன். அந்த துரோக செயலுக்கு பரிசாக தி.மு.க.வின் வாக்குகளை வெட்கமின்றி பெற்றுக் கொண்டிருக்கிறார் என்பதைத்தான் இந்த தேர்தல் முடிவு எடுத்து காட்டுகிறது என அந்த கூட்டறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-8)

## ஜெயலலிதா விட்டுச்சென்ற பணியைத் தொடருவேன் டிடிவி.தினகரன் உறுதி



(சென்னை)

ஆர்.கே.நகர் தொகுதியில் ஜெயலலிதா விட்டுச்சென்ற பணியை எம்.எல்.ஏ. என்ற அடிப்படையில் நான் தொடருவேன் என்று டி.டி.வி. தினகரன் தெரிவித்தார்.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை நேற்று முன் தினம் தேர்தல் நடத்தும் அதிகாரி பிரவீண் நாயரிடம் இருந்து பெற்ற பின்னர் டி.டி. வி. தினகரன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

ஆளும் கட்சி வேட்பாளரான மதுசூதனனுக்கு மத்திய அரசு. தேர்தல் ஆணையம் தான் கூட்டணி. குறிப்பாக பொலிஸார் முகவர் போல செயற்பட்டனர். மதுசூதனனின் ஆதரவாளரான ராஜேஷ் அடித்து நொறுக்கி. ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்த போது பொலிஸ் கைகளை கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்தது. இன்னும் 2 மாதங்கள் கூட இந்த ஆட்சி தாங்குமா? என்று தெரியவில்லை. பின்னர் ஏன் பொலிஸார் இப்படி நடந்து கொள்கிறார்கள்?

திரும்ப. திரும்ப நான் பொலிஸாரிடம் சரியாக நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எடப்பாடி பழனிச்சாமி அரசு தொடரப் போவது இல்லை. இப்போது பார்த்தீர்களா? ஆகவே பொலிசார் தயவு செய்து நடுவுநிலையோடு செயற்படவேண்டும். பொலிஸாரின் தற்போதைய செயற்பாடுகள் மிகவும் கண்டனத்துக்கு உரியது. எங்களுடைய முகவர்களை வாக்கு எண்ணும் மையத்தில் இருந்து வெளியேற்ற பார்த்தார்கள் எனத் தெரிவித்தார்.

இதையடுத்து நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு டி.டி.வி.தினகரன் அளித்த பதில்களும் வருமாறு.

கேள்வி:- உங்களுடைய வெற்றியின் மூலம் என்ன மாற்றம் வரப்போகிறது?

பதில்:- பொறுத்திருந்து பாருங்கள். இப்போதுதானே வெற்றி வந்திருக்கிறது. கடந்த ஒரு மாத காலமாக நான் கொடுத்த பேட்டிகளின் அடிப்படையில் பாருங்கள். நான் சொன்னது அனைத்தும் நடந்திருக்கிறது.

கேள்வி:- சுயேச்சையாகப் போட்டியிட்டு நீங்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். மீண்டும் இரட்டை இலைச்சின்னம் உங்களுக்கு கிடைக்குமா?

பதில்:- இரட்டை இலை எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்ட சின்னம். ஜெயலலிதாவால் கட்டிக் காக்கப்பட்ட சின்னம். அது எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதாவிடம் இருக்கும் போது வெற்றிச் சின்னம். எம்.ஜி.ஆர். படத்தில் வரும் வில்லன்களான எம்.எம். நம்பியாரிடமும், பி.எஸ்.வீரப்பாவிடம் இருந்தால் அதற்கு மக்கள் எப்படி வாக்களிப்பார்கள்? சில வேலைகளை செய்யவில்லை என்றால் டெபாசிட் போயிருக்கும். ஆளும் கட்சி என்பதால் தப்பித்து வந்துவிட்டார்கள்.

கேள்வி:- எம்.எல்.ஏ.க்கள் உங்கள் பக்கம் வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா? தற்போது வரதொடங்கியிருப்பதாக கூறப்படுகிறதே. வேலூர் எம்.பி. செங்குட்டுவன் வந்திருக்கிறாரே..

பதில்:- நான் முன்னரே சொல்லியிருக்கிறேன்... போயிட்டு வந்துவிடுவேன் என்று சொல்லிவிட்டுதான் அவர்கள் சென்றார்கள். பொய்யாகவோ, பந்தாவுக்காகவோ நான் எதையும் சொல்லமாட்டேன். 80 சதவீதம் வாக்குப்பதிவு இருந்தால். 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன் என்று முன்பு கூறினேன். ஆகையால் டெபாசிட் போய் விடும் என்று நம்ம அண்ணாச்சிகள் 33 அமைச்சர்கள். முதலமைச்சர். துணை முதலமைச்சர் எல்லோரும் சேர்ந்து ஏதோ செய்தார்கள். நான் அவர்கள் செய்யட்டும் என்று விட்டுவிட்டேன். ஏழை-எளிய மக்களுக்கு அவர்கள் பணம் வந்து சேர்ந்திருக்கிறது. அதை வாங்கிக்கொள்ளட்டும் என்று கூறினேன். அது மட்டும் இல்லை என்றால் என்னுடைய வெற்றி மாபெரும் வெற்றியாக அமைந்திருக்கும்.

கேள்வி:- ஆர்.கே.நகர் மக்களுக்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதிகள் அடிப்படையில், உங்களுடைய பணி சட்டமன்றத்தில் எந்த வகையில் இருக்கும்?

பதில்:- ஜெயலலிதாவின் தொகுதி இது. ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் அவர் வழியில் நடக்கும் என்னை. தொகுதி மக்கள் அங்கீகரித்திருக்கிறார்கள். ஜெயலலிதா விட்டுச்சென்ற பணியை தொடர்ந்து செய்வதற்காக, எம்.எல். ஏ. என்ற அடிப்படையில் என்னுடைய பணிகளை தொடருவேன்.

கேள்வி:- ஆட்சி மாற்றம் வருமா?

பதில்:- நான் ஏற்கனவே கூறிய அனைத்தும் நடக்கும். அரசாங்கமே ஆர்.கே.நகர் தொகுதிக்கு வந்து பொலிஸார் உதவியுடன் அதிகார துஷ்பிரயோகம் செய்தார்கள். நாங்கள் யாரையும் சும்மா விடப் போவது இல்லை. பண குதிரைகளை நம்பி பொலிஸார் ஆற்றில் இறங்க வேண்டாம். நாங்கள் தீவிரமாக கொண்டு சென்றால் நீதிமன்றில் மாட்டிக்கொள்வீர்கள். காவல் துறை ஏவல் துறை போன்று ஏன் செயற்படுகிறீர்கள்? ஆர்.கே.நகர் தொகுதியில் படித்தவர்களை விடவும், சாமானிய மக்கள் தான் அதிகம். அவர்கள் ஒவ்வொன்றையும் பார்த்து எனக்கான வாக்கு எண்ணிக்கையை அதிகரித்து தந்திருக்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

## ஆர்.கே.நகர் தேர்தலில் தோல்வியடைந்தது தி.மு.க. அல்ல,தேர்தல் ஆணையம்தான்

### மு.க.ஸ்டாலின் நிராகரிப்பு



சென்னை ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் தோல்வி அடைந்தது தி.மு.க. அல்ல. தேர்தல் ஆணையம் தான்", என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக சட்டசபை எதிர்க்கட்சி தலைவரும், தி.மு.க. செயல் தலைவருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அண்ணாவின் தலைமையில் தி.மு.க மாபெரும் வெற்றி பெற்றிருந்தது. அதற்குமுன், தமிழகத்தில், இந்தி எதிர்ப்பு போராட்டம் நடந்து முடிந்த உடன் தர்மபுரியில் நடந்த இடைத்தேர்தலில், வெற்றியைப் பறி கொடுக்க நேர்ந்தது. பாளையங்கோட்டை சிறையில் இருந்து வெளிவந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியிடம், பத்திரிகையாளர்கள் 'தர்மபுரி இடைத்தேர்தல் வெற்றி குறித்து என்ன கருதுகிறீர்கள்?', என்று கேட்டனர். உடனே, 'தர்மபுரியில் வாக்காளர்களுக்கு கொடுத்த தர்மம் வென்றது', என குறிப்பிட்டார்.

அதேபோல இன்று ஆர்.கே.நகர் தொகுதியிலும் வாக்காளர்களுக்கு கொடுக்கப்பட்ட 'தாராளமானதும் ஏராளமானதுமான தர்மம்' வென்றுள்ளது என்றுதான் சொல்லவேண்டும்.

பாதாளம் வரை பாய்ந்த பணத்தையும் தாண்டி. தி.மு.க. வேட்பாளர் மருது கணேசுக்கு 24 ஆயிரத்து 651 வாக்காளர்கள், தங்களின் விலைமதிக்க முடியாத வாக்குகளை அளித் திருப்பது நேர்மையான, உயிரோட்டமுள்ள தேர்தல் ஜனநாயகத்தின் மீது. இன்றைய சூழலிலும் அவர்கள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது.

சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலுக்குத் துணை நின்று, ரூ.6 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை பண மழையிலிருந்து ஜனநாயகத்தை, எப்படிப்பட்ட சவாலாக இருந்தாலும் அதனை சந்தித்துப் போராடிப் பாதுகாத்திட வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில் ஆர். கே.நகர் இடைத்தேர் தலை தி.மு.க. சந்தித்தது.

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பில் தொடங்கி வாக்காளர்களுக்கு பணம் விநியோகம் செய்யப்படுவது வரை பல முறைகளிலும் தேர்தல் ஆணையத்தின் சட்டப்பூர்வமான உதவியையும்.

முறையான கண்காணிப்பையும் நாடினோம். தேர்தல் ஆணையம் அலட்சியம் காட்டியபோது. உயர் நீதிமன்று சென்று போராடினோம்.

ரூபாய் நோட்டுகள் குத்தீட்டிபோல் தேர்தல் ஜனநாயகத்தின் மார்பில் ஊடுருவி உயிருக்கே உலைவைத்துக்கொண்டிருந்த நேரத்தில், தன்னிச்சையான அமைப்பான தேர்தல் ஆணையம் பாராமுகமாக இருந்ததே தவிர, பண விநியோகத்தைத் தடுக்கவில்லை. சுதந்திரமான தேர தலை நடத்திட தேர் தல் ஆணையம், பொலிஸ் மற்றும் அதிகார எந்திரமும் துரும்பைக்கூட எடுத்துப் போட முயற்சிக்கவில்லை. இதற்குமுன் நடைபெற்ற எந்த இடைத்தேர்தலிலும், இப்படியொரு கரும்புள்ளியை தேர்தல் ஆணையம் தனக்குத்தானே ஏற்படுத்திக்கொண்டது இல்லை. நடுநிலையாளர்கள் கருதும் அளவுக்கு தேர்தல் ஆணையம் பரிதாபமாக நின்றதைக் காண முடிந்தது.

தேர்தல் பார்வையாளர்கள் வந்தார்கள், சென்றார்கள்.அவ்வளவுதான். சுதந்திரமாகத் தேர்தலை நடத்துவதற்கு இரும்புக்கரம்கொண்டு தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க. தொடர்ந்த வழக்கில் உயர் நீதிமன்றம் கண்டிப்பான உத்தர விட்டும்கூட, ஹவாலா பாணியில் வாக்குப்பதிவு தினத்தன்று கூட வாக்காளர்களுக்குப் பணம் வாரி வாரி இறைக்கப்பட்டதை தேர்தல் ஆணையமும், பொலிஸாரும் கைகட்டி வாய் பொத்தி வேடிக்கை பார்த்தது.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளருக்குத் தோல்வி என்பதைவிட, இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு கிடைத்துள்ள இமாலய தோல்வி என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். இப்படிப்பட்ட நிலைமை, மக்கள் ஜனநாயகத்தை காப்பாற்ற உதவுமா? என்பதை அனைவரும் எண்ணிப்பார்க்க வேண்டும்என்பதே எனதுவிருப்பம்என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-8)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2017-13.01.2018

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



ஆன்மீகம் முதல் அரசியல் வரை கற்றறிந்த கும்ப இராசி வாசகர்களே!

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. சனிபகவானின் பெயர்ச்சியும் இம்மாதம் நிகழவிருக்கின்றது. இதுவரை உங்கள் இராசிக்கு 10ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான், டிசெம்பர் 19ஆம் திகதி 11ஆம் இடமான லாப ஸ்தானத்திற்கு செல்லவிருக்கிறார். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

சனிபகவான் உங்கள் இராசிக்கு அதிபதியகாவும், விரயாதிபதியாகவும் விளங்குபவர். அவர் 11 ஆம் இடத்தில் வரும் பொழுது, உங்கள் இராசியையும் பார்ப்பார். மேலும் 5,8 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். அதேநேரத்தில் 9 இல் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியிலும், பஞ்சமஸ்தானத்திலும் பதிகின்றது. எனவே உங்களுக்கு தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டே இருக்கும். தெய்வீக காரியங்களில் நாட்டம் செலுத்துவீர்கள். ஆரோக்கியத் தொல்லை அகலும். உள்ளத்திலும், இல்லத்திலும் மகிழ்ச்சி நிலவும்.

சென்ற மாதத்தில் நிறையத் தடைகளையும், தாமதங்களையும் சந்தித்து வந்திருப்பீர்கள். இனி முயற்சித்த காரியங்களில் எல்லாம் முழுமையாக வெற்றி கிடைக்கப் போகின்றது. அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய ஆன்மீகப் பெரியவர்களின் ஆலோசனை கைகொடுக்கும். உத்தியோகத்தில் நிரந்தரமாக பணிபுரிய வாய்ப்புகள் கைகூடி வரும்.


குரு-மங்கள யோகம் மற்றும் புத-சுக்ர யோகம் போன்றவை மாதத் தொடக்கத்திலேயே வருகின்றது. எனவே மங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். தடைகள் தானாக விலகும். உங்களுக்கோ, உங்கள் உடன்பிறப்புகளுக்கோ திருமண வாய்ப்பு கைகூடாமல் இருந்தால் அது கைகூடும். விலகிச் சென்ற வரன்கள் மீண்டும் விரும்பி வந்து சேரும். மனக்குழப்பம் அகலும்.

சனிப்பெயர்ச்சியின் விளைவாக நீங்கள் சந்தோசங்களைச் சந்திக்க வேண்டுமானால், சனிப்பெயர்ச்சி அன்று சனிபகவானை வழிபடுவது நல்லது. குறிப்பாக சனி

வந்து சேரும்.

தனுசு சுக்ரனின் சஞ்சாரம்!

டிசெம்பர் 21 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் லாபஸ்தானத்திற்கு வரும் பொழுது மிகமிக அற்புதமான நேரமாகும். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள்




உங்கள் சிக்கல்கள் தீர உதவிக்கரம் நீட்டுவர். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். நூதனப் பொருள் சேர்க்கை உண்டு.

, ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் பெருகும். வேலை வாய்ப்புகளை முன்னிட்டு நீங்கள் செய்த முயற்சி கைகூடும். பூர்வீகச் சொத்துகளில் இருந்த தகராறுகள் அகலும். புதிய சொத்துக்களை வாங்கும் பொழுது, குடும்ப உறுப்பினர்களின் ஜாதகத்தைப் பார்த்து யாருடைய ஜாதகத்தில் செவ்வாய் பலம் நன்றாக இருக்கின்றதோ அவர்கள் பெயரில் சொத்துகளை வாங்குவது நல்லது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபாடு செய்தோடு, பிரதோஷ நாளில் நந்தி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான சிறப்பு பலன்கள்!

இம்மாதம் உங்களுக்கு ஓர் இனிய மாதமாகும். இதுவரை பொருளாதாரப் பற்றாக்குறையில் சிக்கியிருந்த உங்களுக்கு லாப ஸ்தானத்தில் சனி வரப்போவதால், இனி பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்கபலமாக இருக்கும் உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். சிக்கல்களில் இருந்து விடுபட அனுமன் வழிபாடு சிறப்பானது.

## பொருளாதாரப் பற்றாக்குறை அகலும்

பகவானுக்கு நடைபெறும் அபிஷேக ஆராதனைகளில் கலந்து கொள்ளலாம். வஸ்திர தானம், அன்னதானம் போன்றவற்றை இயன்றவரை செய்து சனியின் அருளுக்குப் பாத்திரமாகலாம். அதேநேரத்தில் பார்க்கும் குருவையும் நீங்கள் பலப்படுத்துவது நல்லது. தென்முகக் கடவுளை இன்முகத்தோடு நீங்கள் வழிபாடு செய்யுங்கள். நன்மைகள் நாளும்

உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். தாய்வழி ஆதரவு திருப்திகரமாக இருக்கும். இடம், பூமி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தை நிறை வேற்றிக் கொள்வீர்கள்.

[illegible]
புதனின் பெயர்ச்சி!

உங்கள் இராசியைக் பொறுத்தவரை 5,8

கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். இல்லத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தாய் மற்றும் சகோதர, சகோதரிகளின் அன்பு கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோசத் தகவல் வந்து சேரும். சர்வேஸ்வரன் வழிபாடு சகல யோகத்தையும் வழங்கும்.



உறவிற்குகையும்... உரிமைக்கு குரலும் கொடுக்கும் மீன இராசி வாசகர்களே!

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் குருவும், செவ்வாயும் இணைந்து சஞ்சரிக்கின்றனர். இது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கிய தொல்லைகள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. மனக் குழப்பங்கள் கூடும். வீண்பழிகளுக்கு ஆளாகாமல் இருக்க முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது.

அதேநேரத்தில் இம்மாதம் சனிப்பெயர்ச்சியும் நிகழவிருக்கின்றது. கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக ஒன்பதாம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான், இப்பொழுது தொழில் ஸ்தானம் மற்றும் கர்ம ஸ்தானம் என்று சொல்லப்படும் 10ஆம் இடத்திற்கு வரப்போகிறார்.

கர்ம ஸ்தானத்திற்கு சனி வரும்பொழுது, பெற்றோர் உடல் நலத்தில் கவனம் தேவை. உறவினர்களின் பகை உருவாகாமல்

பார்த்துக்கொள்ளுங்கள். அதேவேளையில் ஜீவன ஸ்தானத்தில் செல்லும் சனியால், ஆவல்கள் அனைத்தும் நிறைவேறும், அகிலத்தில் புதிய தொழிலும் வாய்க்குமென்று ஜோதிட சாஸ்திரங்கள் சொல்கின்றன. அந்த அடிப்படையில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

பழைய தொழில்களில் இருந்த மந்த நிலை மாறும். மூடிக்கிடந்த தொழிலுக்கு இனி திறப்புவிழா நடத்தப் பார்ப்பீர்கள். மூலதனம் போடப் பணமில்லை என்று ஏங்கியவர்களுக்கு, வங்கிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்போடு நீங்கள் செய்யும் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்கள் ஆற்றல் பளிச்சிடும் நேரம் இது.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவோடு உன்னத நிலையை அடைவார்கள். ஒரு சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் வாய்க்கும். இந்நிலைக்கும் காரணமான சனியை நீங்கள் போற்றிக் கொண்டாட வேண்டும். நவக்கிரகங்களை, 'துதிப் பிரியர்கள்' என்று அழைப்பது வழக்கம். எனவே சனிபகவான் சந்நிதியில் சனிப் பெயர்ச்சி அன்று வழிபாடு செய்வது நல்லது.

டிசெம்பர் 21 ஆம் திகதி தனுசு இராசிக்குச் சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3,8 இற்கு அதிபதியானவர் சுக்ரன். சகோதர ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்ரன் தொழில் ஸ்தானத்திற்கு வரும்பொழுது உடன்பிறப்புகளால் உதவி கிடைக்கும். உடன் பிறந்தவர்களின் மூலம் தொழில் தொடங்கும் வாய்ப்பும் உருவாகலாம். பூர்வீகச் சொத்துகளை விற்றுப் புதிய சொத்துகள் வாங்கு




வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம், ஊர் மாற்றம் உறுதியாகலாம். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தென்படும். பெண்வழிப் பிரச்சினைகள் அக

உருவாக்குகிறார். இதன் விளைவாக நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் அனுகூலம் கிடைக்கும். நிலுவையில் இருந்த சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகம் பார்க்கும் இடத்திலேயே அதற்கான சலுகைகள் கிடைக்கலாம். வரன்கள் வாசல் தேடி வரும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டும் விதத்தில், இம்மாதம் எதிர்பாராத இலாபங்கள் வந்து சேரும்.

இம்மாதம் நடராஜர் வழிபாடு நன்மையை வழங்கும்.

பெண்களுக்கான சிறப்பு பலன்கள்!

விரயங்கள் அதிகரிக்கும் மாதம் இது. வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் விரும்பத்தக்கதாக அமையும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்காது. அஷ்டமத்தில் செவ்வாய், குருவோடு இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படலாம். சுக்ரப் பெயர்ச்சிக்குப் பிறகு பணவரவு திருப்தி தரும். கணவன் - மனைவிக்குள் பிணக்குகள்

## எதிர்பாராத இலாபங்கள் வந்து சேரும்

இயலாதவர்கள் சனிப்பெயர்ச்சியான பிறகு ஒருவாரத்திற்குள் சென்று வழிபட்டுவரலாம். குறிப்பாக எள்தீபம் ஏற்றி, சனி கவசம் பாடி வழிபட்டால் காரியங்கள் எளிதில் வெற்றியாகும். அதேநேரத்தில் அஷ்டமத்து குருவால் ஆதாயக் குறைவு ஏற்படாமல் இருக்க, தென்முகக் கடவுளை வியாழக்கிழமை தோறும் வழிபட்டு வருவது நல்லது.

தனுசு சுக்ரனின் சஞ்சாரம்!

லும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலங்கள் கிடைக்கும்.

தனுசு புதனின் சஞ்சாரம்!

ஜனவரி 4ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 4,7 இற்கு அதிபதியானவர் புதன். அவர் 6இற்கு அதிபதியான சூரியனோடு இணைந்து புத-ஆதித்ய யோகத்தை

ஏற்படாமல் இருக்க, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஒரு சிலருக்கு பிள்ளைகளால் விரயம் ஏற்படலாம். உத்தியோகத்தில் வரும் மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமையும். சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு, அறுபத்துமூவர் வழிபாட்டையும் செய்து வந்தால் அனைத்து யோகங்களும் வந்து சேரும்.

(முற்றும்)

# மாலிக்குப் புறப்பட்டது இலங்கை இராணுவத்தின் முதலாவது அணி

(கொழும்பு)

மாலியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றுவதற்காக, 150 படையினரைக் கொண்ட இலங்கை இராணுவத்தின் முதலாவது அணி நேற்று முன்தினம் காலை புறப்பட்டுச் சென்றது.



ஆபிரிக்க நாடான மாலியில் நிலைகொண்டுள்ள ஐ.நா. அமைதிப்படையினருக்கான வழித்துணைப் பாதுகாப்பு வழங்குவதற்காக இலங்கை இராணுவத்தின் 200 பேர் கொண்ட அணியொன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.


இந்த அணியில் இடம்பெற்றுள்ள 150 இலங்கை இராணுவத்தினர் நேற்று முன்தினம் ஐ.நாவின் சிறப்பு விமானம் மூலம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றனர்.

மிகுதி 50 படையினர் மாலியிலுள்ள ஐ.நா. அமைதிகாப்பு பணியகத்தின் வழிகாட்டலின் படி விரைவில் அங்கு பயணமாவர்.

இலங்கை இராணுவத்தின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர மற்றும் மேஜர் ஜெனரல் தனஞ்ஜித் கருணாரத்ன, பிரிகேடியர் அருண முகாந்திரம், பிரிகேடியர் கீத் சிறி உள்ளிட்ட அதிகாரிகள் மாலி செல்லும் இலங்கை படையினரை விமான நிலையத்தில் வழியனுப்பினர். (இ-7)

# தேர்தலின் பின்னர் பாரிய மாற்றங்கள்

## ஐ.தே.க. பிரதியமைச்சர் அஜித் கூறுகிறார்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளதாகவும் அது குறித்து பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தலின் பின்னர் பாரிய மாற்றங்களை மக்கள் உணர முடியும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதியமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்தார்.

ஊழல் குற்றவாளிகள் இல்லாத நபர்களை தயங்காது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையுமாறும் அவர் தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனை குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமக்கு மிகப்பெரிய வெற்றி கிடைக்கும். இப்போதே நாம் பாரிய வெற்றியை பெற்றுள்ளோம். குறிப்பாக வேட்பு மனுத் தாக்கலின் போதே எமக்கு வெற்றி கிடைத்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் தாக்கல் செய்த எந்தவொரு வேட்பு மனுவும் இலங்கையின் எந்த பகுதியிலும் நிராகரிக்கப்படவில்லை. ஏனைய அனைத்து கட்சிகளின் வேட்புமனுக்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் நாங்கள் பொறுப்புடன் எமது கடமைகளை சரியாக செய்து வருகின்றோம். அதுவே எமக்கு வெற்றியாக மாறி வருகின்றது.

மேலும் ஒருபுறம் ஐக்கிய தேசியக் கட்சி பலமடைந்து வரும் நிலையில் ஏனைய பிரதான கட்சிகள் துண்டுகளாக சிதறி வருகின்றன.

பொதுஜன முன்னணி தனித்து களமிறங்கும் என அறிவிக்கப்பட்ட பின்னர் அவர்களின் உறுப்பினர்கள் படிப்படியாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை நாடிச் செல்கின்றனர். அதேபோல் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மேலும் சிலர் எம்முடன் இணைந்துகொள்ளவும் தீர்மானம் எடுத்து வருகின்றனர். எனினும் சரியான நேரம் பார்த்து எம்முடன் இணைந்து கொள்ளவே நாம் அவர்களுக்கு தெரிவித்துள்ளோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் எந்த நேரத்திலும் இணைந்துகொள்ள முடியும். எனினும் எம்முடன் இணையும் போது. சரியான நேரம் பார்த்து வரவேண்டும். அதேபோல் பொதுஜன முன்னணியில் உள்ள ஊழல், மோசடிகள் இல்லாத நபர்களை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக உள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைக்கு ஏற்ற நபர்களை நாம் ஏற்றுக் கொள்வோம். அவ்வாறான முக்கியமான சிலர் எம்முடன் இணைய தயாராக உள்ளனர்.

முக்கியமான சில நபர்களுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அவர்கள் நிச்சயமாக எம்முடன் இணைந்து கொள்வார்கள். அதேபோல் மேலும் சிலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையின் கீழ் இணைந்து கொள்ளப்போவதாகவும் தெரிவித்தனர். ஆகவே விரைவில் தாமரை மொட்டு கருகி அழிந்து போகப் போகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்ப அரசியல் வாதிகளும் என்ன செய்யப் போகின்றனர் என்பதை நாம் வேடிக்கை பார்க்கத்தான் போகின்றோம். கடந்த கால ஊழல் அரசில் தலைமை வகித்த அனைவரையும் மக்கள் நிராகரித்த நிலையில் இவர்கள் முழுமையாக அரசியலில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# காணிகளை விடுவிக்குமாறு உத்தரவிட அமைச்சர் றிசாத்திற்கு அதிகாரமில்லை



## விலாத்திக்குளம் அறிக்கை

(கொழும்பு)

மீள்குடியேற்றம் தொடர்பில் வில்பத்து விலாத்திக்குளம் வனப் பகுதியில் காணிகளை விடுவிக்குமாறு தெரிவித்து வனப்பாதுகாப்பு திணைக்கள ஜெனரலுக்கு உத்தரவு பிறப்பிக்க கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீனுக்கு எந்தவித அதிகாரமிடும் உரிமையும் கிடையாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலாத்திக்குளம் வனப் பாதுகாப்பு துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து வெளியாகியுள்ள விசேட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வனம் என விலாத்திக்குள காட்டுப் பகுதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் 650 ஏக்கர் நிலப்பரப்பை பொது மக்களின் குடியிருப்புக்காக விடுவிப்பதற்கு வனப்பாதுகாப்பு ஜெனாலுக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ரஷ்ய-இலங்கை 60 வருட இராஜதந்திர உறவு அஞ்சல் தலை வெளியீடு இடைநிறுத்தம்

(கொழும்பு)

ரஷ்ய- இலங்கை இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அரசாங்கத்தினால் வெளியிடப்படவிருந்த சிறப்பு அஞ்சல் தலை வெளியீட்டு நிகழ்வு திடீரென இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டிருந்த இந்த அஞ்சல் தலையை இடைநிறுத்தி வைக்குமாறு வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியிருப்பதாக தெரியவருகின்றது.

இலங்கை தேயிலைக்கு ரஷ்யா தற்காலிக தடையை விதித்துள்ள நிலையில், இரு தரப்பு இராஜதந்திர உறவுகளில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ள சூழலிலேயே, சிறப்பு அஞ்சல் தலை வெளியீடு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையுடனான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்ட 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இரண்டு அஞ்சல் தலைகளை ரஷ்யா கடந்த வாரம் வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சட்டவிரோத கேபிள் சேவைகள் தொடர்பில் நடவடிக்கை பாயும்

(கொழும்பு)

சட்டவிரோத கேபிள் சேவைகள் தொடர்பில் நடவடிக்கை பாயுமென இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பி.ஆர்.எஸ். பி.ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

அனுமதிப் பத்திரம் இன்றி கேபிள் மற்றும் செய்மதி தொலைக்காட்சிச் சேவையை நடத்துதல் இலங்கைத் தொலைத் தொடர்புகள் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம்.

அவ்வாறு அனுமதியின்றி சேவைகளை நடத்திச் செல்பவர்களை ஆய்வு செய்து, கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வடக்கு, கிழக்கில் 'ஆஸ் கேபிள் விஷன் (பிறைவேற்) லிமிட்டெட்' நிறுவனம் மட்டுமே அனுமதிப் பத்திரம் பெற்ற சேவையாளர்கள் என்றும் அந்த நிறுவனம் தவிர்ந்த வேறு சட்ட விரோத கேபிள் சேவை நிறுவனங்கள் செயற்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை பாயும் என அவர் மேலும் தெரியப்படுத்தியுள்ளார். (இ-9)



டாக்டர் ச.முருகானந்தனின் தலையாய நோய்களும் தவிர்க்கும் முறைகளும் நூல் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அண்மையில் இடம்பெற்றது.

# தொல்பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்தினால் 20 இலட்சம் அபராதம்

(கொழும்பு)

தொல்பொருட்களை சேதப்படுத்தும் நபர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை 50 ஆயிரம் ரூபாவிலிருந்து 20 இலட்சம் ரூபா வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பி.பீ. மண்டாவல தெரிவித்துள்ளார்.

தொல்பொருட்களை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராக 20 இலட்சம் ரூபா அபராதம் மற்றும் இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தை மறுசீரமைக்குமாறு தமது திணைக்களத்திற்கு அமைச்சர் யோசனை வழங்கியுள்ளதாகவும் மண்டாவல கூறியுள்ளார்.

இந்த திருத்தச் சட்ட மூலம் தற்பொழுது அமைச்சரவை மட்ட பேச்சுவார்த்தையில் உள்ளதாகவும் விரைவில் இந்த சீர்திருத்தம் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சிறுவர் அரங்கம்



## ஐயோ பாம்பு!



(19.12.2017 தொடர்ச்சி)

சில வாரங்களுக்குப்பிறகு...

பக்கத்து வீட்டுக்காரர்கள் இவர்களது தோட்டத்திற்குள் சொல்லாமல் கொள்ளாமல் நுழைந்து தேவையான காய்கறிகளை எடுத்துச் சென்றனர். வாழைக்குலை காணாமல் போனது. தேங்காய்களும், இளநீர் குலைகளும் மாயமாய் மறைந்தன. வேலைக்காரர்கள் தங்களை கண்காணிக்க முதலாளி இல்லாததால் ஏமாற்ற ஆரம்பித்தனர்.

இந்த அக்கிரமங்களைத் தட்டிக் கேட்க முடியாமல் இரண்டு சகோதரர்களும் மனதிற்குள் கொதித்துக் கொண்டிருந்தனர். சின்னவர்களான இருவருக்கும் இவர்களை சமாளிக்கும் அனுபவம் போதவில்லை.

அன்று இரவு தன் தாயிடம் இளையவன், "பெரிய அண்ணன் மட்டும் முன்ன மாதிரி நல்லா இருந்தால் இந்த அக்கிரமம் எல்லாம் நடக்காது. அக்கம் பக்கத்துல இருக்கிறவங்க அவருக்குப் பயந்து வாலைச் சுருட்டிக்கிட்டு இருந்தாங்க. எங்களை சின்ன பசங்களாக நினைத்து ஏமாத்தறாங்க" என்று சொல்லி வருத்தப்பட்டான்.

அன்று இரவு நடுநிசியில் கிழவி மறுபடியும், "பாம்பு பாம்பு" என்று குரல் கொடுத்தாள். எல்லாரும் விளக்கை ஏற்றிக் கொண்டு ஓடி வந்தனர். பாம்பைக் காணவில்லை. "அம்மா, பாம்பு எங்கே?" என்றனர். "பெரியவன் தூங்கிக்கிட்டு இருந்தான். அவன் வயித்திலே இருந்து அந்த பாம்பு வெளியே வந்து சாக்கடை வழியா வெளியே போயிடுச்சி" என்றாள்.

இதைக் கேட்ட அவர்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். "அண்ணா, நீ சரியாயிடுவே. உனக்கு இத்தனை மாதமாகத் தொல்லை கொடுத்த பாம்பு வெளியே போய்விட்டது" என்று நம்பிக்கை ஊட்டினர். சில நாட்களில் மூத்தவன் பழையபடி சரியாகி விட்டான். வேளா வேளைக்குச் சாப்பிட ஆரம்பித்தான்.

முதல் நாள் அவன் வயலுக்குச் சென்றான். தங்கள் நிலத்தையும் பக்கத்து நிலத்துக்காரன் சேர்த்துக் கொண்டிருப்பதை அறிந்து, அவனைச் சத்தம் போட்டான். அவன் பயத்தோடு தன் தவறை ஒப்புக் கொண்டு, வரப்பை திருத்தி அமைத்தான். சகோதரர்கள் இரண்டு பேரும் சந்தோஷப்பட்டனர். அது முதல் அவர்களது தோட்டத்தில் திருடு போவதும் நின்று விட்டது.

சகோதரர் இருவரும், மூத்தவனைத் தங்களிடம் இருந்து பிரித்து தங்கள் சொத்துக்களை அபகரிப்பதற்காகவே பக்கத்து வீட்டுக்காரன் திட்டம் போட்டதை அறிந்து கொண்டனர். அது முதல் அவர்கள் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து மேலும் மேலும் செல்வம் சேர்த்தனர். கிழவி தன் தந்திரம் பலித்து, பிள்ளைகள் ஒற்றுமையாக வாழ்வதைப் பார்த்து சந்தோசம் அடைந்தாள்.

(முற்றும்)

## 12.2017 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖1776 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானியர் நியூ ஜெர்சியில் இடம்பெற்ற போரில் தோற்றனர்.
- ❖1792- பாரிசில் பதினாறாம் லூயி மன்னனுக்கெதிரான கடைசி விசாரணைகள் ஆரம்பமாயின.
- ❖1811- வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரில் நாடக அரங்கில் இடம்பெற்ற தீவிபத்தில் வேர்ஜீனியாவின் ஆளுநர் ஜோர்ஜ் வில்லியம் ஸ்மித் இறந்தார்.
- ❖1825- முதலாம் நிக்கலாஸ் மன்னனுக்கு எதிராக மூவாயிரத்துக்கும் அதிகமான ரஷ்ய இராணுவத்தினர் செனட் சதுக்கத்தில் திரண்டனர். இவர்களின் கிளர்ச்சி சார் மன்னனால் முறியடிக்கப்பட்டது.
- ❖1870- ஆல்ப்ஸ் மலைத்தொடருடான 12.8-கி.மீ. நீள தொடருந்து சுரங்கப் பாதை அமைக்கப்பட்டது.
- ❖1862- யாழ்ப்பாணம், மன்னார் உட்பட இலங்கையின் பல இடங்களிலும் பலத்த மழையுடன் சூறாவளி பெரும் சேதத்தை உண்டு பண்ணின.
- ❖1898- ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டது.
- ❖1925- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1925- துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.
- ❖1933- பண்பலை வானொலி காப்புரிமம் பெறப்பட்டது.
- ❖1944- ஆங் சான் பர்மாவின் நவீன இராணுவத்தை உருவாக்கினார்.
- ❖1948- கடைசி சோவியத் இராணுவம் வடகொரியாவில் இருந்து விலகியது.
- ❖1973- சோவியத்தின் சோயூஸ் 13 விண்கலம் ஒரு வார பயணத்தின் பின் பூமி திரும்பியது.
- ❖1974- சோவியத்தின் சல்யூட் 4 விண்கலம் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- ❖ 1985- கொரில்லா பற்றி ஆய்வுகள் நடத்திய அமெரிக்கப் பெண் டயான் பொசி கொல்லப்பட்டார்.
- ❖1986- உலக மக்கள்தொகை 5 பில்லியனை எட்டியது (www.ibiblio.org).
- ❖ 1991- சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.
- ❖1998- அயர்லாந்து, வடக்கு இங்கிலாந்து மற்றும் தெற்கு ஸ்கொட்லாந்தில் இடம்பெற்ற புயலால் பலத்த சேதம் ஏற்பட்டது.
- ❖2003- தென்கிழக்கு ஈரானின் பாம் நகரில் ஏற்பட்ட 6.6 ரிக்டர் நிலநடுக்கத்தால் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டனர்.
- ❖ 2004- இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட 9.3 ரிக்டர் அளவு நிலநடுக்கம், சுனாமி ஆழிப் பேரலையை ஏற்படுத்தி இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, மாலை தீவுகள் ஆகிய நாடுகளில் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. 300,000 பேருக்கு மேல் இறந்தனர்.
- ❖2006- சதாம் உசேனின் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டு மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது.

### பிறப்புகள்

- ❖1791- சார்ல்ஸ் பாபேஜ், ஆங்கிலேயக் கணிதவியலாளர், வித்தியாசப் பொறியைக் கண்டுபிடித்தவர் (இ. 1871)
- ❖1880- எல்ரன் மாயோ, அவுஸ்திரேலிய உளவியலாளர் (இ. 1949)
- ❖1893- மா சே துங், சீனப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் (இ. 1976)
- ❖1896- சேனரத் பரணவிதான, இலங்கையின் முன்னோடித் தொல்லியலாளர், கல்வெட்டியலாளர் (இ 1972)
- ❖1901- பீட்டர் வான் தெ கேம்ப், டச்சு வானியலாளர் (இ. 1995)
- ❖1925- இரா. நல்லக்கண்ணு, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி அரசியல்வாதி, விடுதலைப் போராட்ட வீரர்
- ❖1929- முருகு சுந்தரம், தமிழகக் கவிஞர் (இ. 2007)
- ❖1950- ராசா பர்வைசு அசரஃப், பாகிஸ்தானின் 17வது பிரதமர்
- ❖1971- ஜாரெட் லெட்டோ, அமெரிக்க நடிகர்

### இறப்புகள்

- ❖268- தியோனீசியுஸ் (திருத்தந்தை)
- ❖418- சோசிமஸ் (திருத்தந்தை)
- ❖1530- பாபர், மங்கோலியப் பேரரசர் (பி. 1483)
- ❖1931- மெல்வில் தூவி, தூவி தசம வகைப்படுத்தல் முறையைக் கண்டுபிடித்த அமெரிக்கர் (பி. 1851)
- ❖1981- சாவித்திரி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை
- ❖1985- டயான் பாசி, கொரில்லாவைப் பற்றி ஆய்வுகள் நடத்திய அமெரிக்கப் பெண் (பி. 1932)
- ❖2006- ஜெரால்ட் ஃபோர்ட், அமெரிக்காவின் 38வது அரசுத்தலைவர் (பி. 1913)
- ❖2011- சாரெகொப்பா பங்காரப்பா, கர்நாடகத்தின் 15வது முதலமைச்சர் (பி. 1932)

### சிறப்பு நாள்

- ❖பொக்சிங் நாள், (பொதுநலவாய நாடுகள்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நல்லூர் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 250 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 60 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 250 | 400 | 300 |
| தக்காளி | 160 | 200 | 160 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 120 | 150 | 120 | 120 | 140 |
| கரட் | 140 | 220 | 150 | 200 | 160 |
| பூசணி | 80 | 60 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | 100 | 70 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 70 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 500 | 400 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 140 | 160 | 140 |
| பாகற்காய் | 350 | 400 | 240 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 100 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 40 |
| பயற்றங்காய் | 120 | 200 | 220 | 140 | 250 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 | 280 | 240 |
| பீற்றூட் | 200 | 250 | 140 | 200 | 140 |
| கறிமிளகாய் | 250 | 400 | 250 | 300 | 300 |
| முருங்கைக்காய் | - | - | — | - | - |
| போஞ்சி | 200 | 250 | 180 | 200 | 220 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 200 | 160 | 180 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 60 | 50 | 30 |
| தேசிக்காய் | 50 | 100 | 40 | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90-130 | 75 | 75 | 100 |
| இராசவள்ளி | 250 | 400 | 350 | 300 | 500 |
| வெங்காயப்பூ | 350 | - | 300 | - | - |
| முள்ளங்கி | 120 | - | 100 | 120 | - |
| பொன்னாங்காணி | 50 | - | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 30 | 20 | 35 |
| ஈரப்பலா | 80 | 100 | — | 120 | - |

சிரமங்களுடன் பாடுபட்டு அவற்றை வெல்வது மனித நலன்களில் மிகச்சிறந்தது.

*~ சாமுவேல் ஜோன்சன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## திறந்த இதய சத்திரசிகிச்சை ஏழை மக்களுக்கான வரப்பிரசாதம்

சிவனுக்கு வைத்தியநாதன் என்றொரு நாமம் உண்டு. மருத்துவத்துக்கு அவன் தலைவன் என்பதால் அவனுக்குரிய ஓராயிரம் நாமங்களில் இதுவும் ஒன்றாயிற்று.

உயிர்களைக் காக்கவல்லவன் இறைவன். அந்த இறைவன் கடவுள் உருக்கொண்டு நேரே வந்து சிகிச்சை அளிப்பவன் அல்ல.

மாறாக மருத்துவர்களின் வடிவில் கடவுள் உயிர் காக்கும் தன் பணியைச் செய்கின்றான்.

இதனாலேயே மருத்துவர்கள் கடவுளுக்குச் சமமானவர்கள் என்று போற்றப்படுகின்றனர்.

இறைவனுக்கு நிகரான மருத்துவர்கள், என்றும் தங்கள் பணியை இறை பணியாக நினைத்து சேவையாற்ற வேண்டும்.

அதுவே மருத்துவப் பணியைத் தந்தருளிய இறைவனுக்கு ஒவ்வொரு மருத்துவர்களும் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

எனினும் மருத்துவர்கள் சிலர் வைத்தியத் தொழிலை பணம் உழைக்கும் தொழிலாக நினைக்கின்றனர். இது வேதனைக்குரியது.

பணமும் பொருளாதார பலமும் இல்லாமல் வாழ முடியாது என்பது நிறுதிட்டமான உண்மை. அதிலும் மருத்துவர்கள் எனும் போது, அவர்களின் அடிப்படைத் தேவைகளும் நாளாந்தச் செலவுகளும் அதிகம் என்பது மறுப்பதற்குரியதல்ல.

எனவே மனச்சாட்சிக்கு உட்பட்டு, பொருளீட்டம் செய்வதும் அதன் பொருட்டு தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்வதும் தவிர்க்க முடியாதது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும் என்பதற்கப்பால் அவை பற்றி நாம் வேறு எதனையும் கூற விரும்பவில்லை.

இவை ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் இதய சிகிச்சை நிபுணர் குழாத்தினர் இணைந்து கடந்த 20ஆம் திகதி முதற்தடவையாக திறந்த இதய சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர்.

இதன்மூலம் இரண்டு நோயாளர்கள் உரிய சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவர்களின் உயிர் பாதுகாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் முதற்தடவையாக-வெற்றிகரமாக, திறந்த இதய சத்திரசிகிச்சையை மேற்கொண்ட வைத்திய நிபுணர்கள், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் உள்ளிட்ட அத்தனை மருத்துவர்கள், துணை நிலை மருத்துவ ஆளணியினர், ஊழியர்கள் என எல்லோரும் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள்.

பொதுவில் பண பலம் இருந்தால் மட்டுமே உயிரைப் பாதுகாக்க முடியும் என்றொரு சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்தில், நம் போன்ற ஏழை மக்களினதும் உயிர் பாதுகாக்கப்படும் என்ற மிகப் பெரும் நம்பிக்கை, திறந்த இதய சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டதன் மூலம் எங்கள் மருத்துவர்கள் ஏற்படுத்தி உள்ளனர்.

உயிர் என்பது மட்டும்தான் திரும்பக் கிடையாதது. ஆகையால் உயிரைப் பாதுகாக்கும் இத்தகைய பணிகளைச் செய்யும் மருத்துவர்களை கையெடுத்து வணங்குவது கடவுளை வணங்குவதற்கு ஒப்பானது.

# ஆரியகுளம் நாக விகாரைப் பகுதியில் பாதசாரி கடவையில் விபத்து

## பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஆரியகுளம் நாக விகாரைப் பகுதியில் உள்ள பாதசாரிகள் கடவையினை கடந்து கொண்டிருந்த பெண் ஒருவர் மீது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் கீழே வீழ்ந்த பெண்ணின் தலை தரையில் அடிபட்டு படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் வேளை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தென் பகுதியில் உள்ள பாணந்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வந்த சிங்கள சகோதர இன மக்கள் குழுவினர் நல்லூர் முருகனஆலயத்திற்கு சென்று வழிபாடு மேற்கொண்டதன் பின்னர் ஆரியகுளத்திற்கு அருகாமையில் உள்ள நாக விகாரையை சென்றடைந்து பேருந்தினை விட்டு இறங்கி ஆரியகுளம் சந்தியில் உள்ள பாதசாரிகள் கடவை ஊடாக வீதியைக் கடந்து கொண்டிருந்த போது, யாழ் நகரப் பகுதியில் இருந்து திருநெல்வேலி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளின வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் பெண் சுற்றுலா பயணி மீது மோதியுள்ளார்.

இதன்போது, தரையில் விழுந்த பெண் சுற்றுலா பயணியின் தலைப் பகுதியில் அடிபட்டு உடைந்த நிலையில் மீட்கப்பட்டு அங்கிருந்த முச்சக்கர வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளைஞனுடன் பயணித்த சிறுவன் ஒருவனும் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்ததால் கையில் சிறு காயம் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வந்த யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-15)

## லிந்துலையில் உருக்குலைந்த நிலையில் சிசுவின் சடலம் மீட்பு

(நுவரெலியா)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசேனை டிலி குற்றி தோட்டத்தில் நேற்று மாலை 3.00 மணியளவில் உருக்குலைந்த நிலையில் சிசுவின் சடலம் ஒன்று லிந்துலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

டிலிகுற்றி தோட்டத்தில் தேயிலை மலையில் தண்ணீர் பார்ப்பதற்காக சென்ற ஒருவர் அவ்விடத்தில் கிடந்த சிசுவை கண்டுள்ளார்.

இதனையடுத்து லிந்துலை பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவலை யடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளனர்.

சிசு யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

நுவரெலியா மாவட்ட நீதவானின் விசாரணைகளின் பின் பிரேத பரிசோதனைக்காக சிசுவின் சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக லிந்துலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம)

## அம்பாறையில் இளைஞன் சடலமாக மீட்பு

அம்பாறை சதுவெல்ல பிரதேசத்தில் 19 வயது இளைஞன் ஒருவன் தூக்கில் தொங்கி உயிரிழந்த நிலையில் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளான்.

அம்பாறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## இலங்கை தேயிலைக்கு ரஷ்யா விதித்திருந்த தடை தளர்த்தப்பட்டது

(கொழும்பு)

இலங்கை தேயிலைக்கு ரஷ்யா விதித்திருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி முதல நடைமுறைக்கு வரும் வகையில் இந்த தடையுத் தரவை நீக்குவதாக பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜே.ஏ. ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

மொஸ்கோ நகரில் நடைபெற்ற இலங்கை பிரதி நிதிகளுக்கும் ரஷ்ய அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (ம)

## சுனாமி நினைவேந்தல் இன்று முல்லைத்தீவில்

(முல்லைத்தீவு)

கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் பெரும் பாதிப்புக்களை சந்தித்ததோடு பல்லாயிரம் உயிர்களையும் காவு கொடுத்தது.

மறக்கமுடியாத இந்த துயரத்தில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று முல்லைதீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது

அந்தவகையில் முல்லைத்தீவு கடற்கரையில் அமைந்துள்ள சுனாமிநினைவாலயத்தில் இன்று காலை 7 மணிமுதல் 9 மணிவரையும் சர்வமத பிரார்த்தனைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஏற்பாட்டு குழு தெரிவித்துள்ளது

அதேபோன்று குறித்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த உறவுகள் ஒரு தொகுதியினர் புதைக்கப்பட்ட ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியில் அமைந்துள்ள நினைவாலயத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு நடைபெறுமென ஏற்பாட்டு குழு தெரிவித்துள்ளது.

அதேபோன்று குறித்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த உறவுகள் ஒரு தொகுதியினர் புதைக்கப்பட்ட நெடுங்கேணி முல்லைத்தீவு வீதியில் கயட்டை பகுதியில் அமைந்துள்ள நினைவாலயத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு நடைபெறுமென ஏற்பாட்டு குழு தெரிவித்துள்ளது

எனவே குறித்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பாதிக்கப்பட்ட உயிரிழந்த உறவுகளின் உறவினர்கள் சமூக ஆர்வலர்கள் பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டு குழுக்கள் தெரிவித்துள்ளன. (ம-281)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பிறந்தநாளில் செய்யக்கூடாதவை எவை?**

பிறந்த நாளில் மாமிச உணவு, மதுபானங்கள், மருந்துகள், எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, திருமணம், பயணம் போவது, அறுவைச் சிகிச்சை, சாகச வேலைகள், வாகனச் சவாரி, யுத்தம் போன்றவை செய்யக் கூடாத காரியங்களாகும்.

*(தொடரும்)*


## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- எப்போதும் இனிமையோடும், புன்னகையோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டு செல்லும்.
- மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரினையும் வழிபடுங்கள். இறைவனை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழி.
- இறைவனின் படைப்பான அனைத்து உயிர்களுக்கும் இரக்கத்துடன் பணி செய்தல் மிக நன்று.
- பூமிதேவியைப் போன்று அனைத்தையும் பொறுப்பவர் ஆக இருக்க வேண்டும். பொறுமையோடு இருந்தால், உலகமே உங்கள் காலடியில் அமரும்.
- கீழ்ப்படிதலை அறிபவனே கட்டளையிடவும் அறிவான்.
- ஒன்றாகக் கூடி வாழ்தலே நமக்கு வேண்டிய ஒன்றாகும். சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை.
- ரகசியமாகப் பிறரைக் குறை கூறுவது பாவம். முதலில் நீ அதை முழுவதும் நீக்க வேண்டும். மன்னித்து, மறந்தால் மகிழ்ச்சி நிலவும்.
- அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றுமே நமக்குத் தேவையில்லை.

## ஐம்பது ஓவர் கிரிக்கெட் போட்டி


# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம் யாழ். பல்கலைக்கழக அணி முதலிடம்




ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில், 50 ஓவர் போட்டிகளில் 1.1.2017 தொடக்கம் 31.12.2017 வரையான 63 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக அணி 11 போட்டிகளில் பங்குபற்றி 11 இலும் வெற்றி பெற்று 88.10 புள்ளிகளை பெற்று முதல் இடத்திலும், சென்றலைட்ஸ் அணி 9 போட்டிகளில் பங்கு பற்றி 7 போட்டிகளில் வெற்றி பெற்று 63.89 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும் , திருநெல்வேலி சி.சி.அணி 7 போட்டிகளில் பங்கு பற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 46.84 புள்ளிகளை பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளன.

ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு- யாழ். ஜொனியன்ஸ் 44.77, கே.சி.சி.சி 42.24 ,ஜொலிஸ்ரார் 34.97 , அரியாலை சென்றல் 32.28, ஓல்ட்கோல்ஸ் 30.93, ஸ்ரான்லி 30.67, ஹாட்லியைற்ஸ் 28.57, யாழ். சென்றல் 28.10, கிறாஸ் கொப்பர்ஸ் 26.71, பற்றீசியன்ஸ் 23.05, யூனியன்ஸ் 22.11, மானிப்பாய் பரீஸ் 20.12, டிறிபேக்ஸ்ரார் 19.31, விங்ஸ் 16.52, திருநெல்வேலி YMHA 16.51 , நியூ ஸ்ரார் 13.32, ஸ்கந்தாஸ்ரார் 12.76, மூளாய் விக்டோறி 8.92. சிறி காமாட்சி 7.96, றெயின்போ 7.06 புள்ளிகளை பெற்றுள்ளன. (க)

# அதிக சிக்சர்கள் அடித்து ரோகித் புதிய சாதனை



இந்திய கிரிக்கெட் வீரர் ரோகித் சர்மா துடுப்பாட்டத்தில் பல்வேறு சாதனைகள் படைத்துள்ளார். குறிப்பாக சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மூன்று முறை இரட்டை சதம் அடித்து சாதனை படைத்துள்ளார். ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் அடித்த வீரர்கள் பட்டியலிலும் ரோகித் 264 ஓட்டங்களுடன் முதல் இடத்தில் உள்ளார். ஒருநாள் போட்டிகளில் ஒரே போட்டியில் அதிக சிக்ஸர் அடித்த வீரர் என்ற பெருமையும் அவரையே சேரும். அவர் 2013 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் 16 சிக்ஸர்கள் அடித்துள்ளார். இவரைத்தவிர டி வில்லியர்ஸ் மற்றும் கிறிஸ்கெய்ல் ஆகியோரும் ஒரே இன்னிங்சில் 16 சிக்ஸர்கள் அடித்துள்ளனர்.

இத்தனை சாதனைகளுக்கு சொந்தக்காரரான ரோகித் தற்போது ஒரு புதிய சாதனையை படைத்துள்ளார். இலங்கைக்கு எதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில் அதிரடியாக விளையாடிய ரோகித் 10 கிக்ஸர்களுடன் சதம் அடித்தார். அவர் 35 பந்துகளில் சதமடித்து இருபது-20 போட்டிகளில் குறைந்த பந்துகளில் சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் முதல் இடத்தை டேவிட் மில்லருடன் பகிர்ந்து கொண்டார். தென்னாபிரிக்காவின் டேவிட் மில்லர் 35 பந்துகளில் சதம் அடித்துள்ளார்.

இந்த போட்டியில் 10 சிக்ஸர்கள் அடித்ததன் மூலம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஒரே ஆண்டில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர்கள் பட்டியலிலும் முதல் இடத்திற்கு முன்னேறினார். இந்நிலையில், இலங்கைக்கு எதிரான மூன்றாவது இருபது-20 போட்டியில் ரோகித் 27 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அதில் 4 பவுண்டரி மற்றும் ஒரு சிக்ஸரும் அடங்கும். இதன் மூலம் 65 சிக்ஸர்களுடன் முதல் இடத்தை தக்க வைத்து கொண்டுள்ளார்.

ரோகித் சர்மாவை தொடர்ந்து டி வில்லியர்ஸ் 63 சிக்ஸர்களுடன் இரண்டாவது இடத்திலும், கிறிஸ் கெயில் 59 சிக்ஸர்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். (க)

# பங்களாதேஷுடனான தொடர் விலகினார் தனஞ்சய டி சில்வா



இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் தனஞ்சய டி சில்வா காயம் காரணமாக பங்களாதேஷுடனான தொடரில் இருந்து விலகியுள்ளார்.

பங்களாதேஷில் நடைபெற உள்ள முத்தரப்பு ஒரு நாள் தொடரில் இலங்கை அணி பங்கேற்க உள்ளது.

இதற்கான வீரர்கள் பட்டியலில் காயம் காரணமாக அஞ்சலோ மத்யூஸ் விலகியுள்ள நிலையில் மற்றொரு துடுப்பாட்ட வீரரான தனஞ்சய டி சில்வாவும் விலகியுள்ளார்.

கோட்லாவில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது, தனஞ்சய 119 ஓட்டங்களில் ஆடிக்கொண்டிருந்தார், அப்போது ஏற்பட்ட காயம் காரணமாக பாதியிலேயே வெளியேறினார்.

மேலும் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் அவர் தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

எனினும் காயம் குணமாகாததால் அந்த தொடரிலும் அவர் விளையாடவில்லை.

இந்நிலையில் பங்களாதேஷ் தொடரிலிருந்தும் விலகியுள்ள தனஞ்சய, சுற்றுப்பயணத்தின் இடையே உடல் நலம் தேறிவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# விராட்டை எதிர்கொள்ளத்தயார் அதிரடிவீரர் டிவில்லியர்ஸ் தெரிவிப்பு

ஒருநாள் மற்றும் 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் மட்டும் கவனம் செலுத்தி வந்த தென்னாபிரிக்க அணியின் அதிரடி வீரர் டிவில்லியர்ஸ் மீண்டும் டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளார்.




தென்னாபிரிக்கா-சிம்பாவே இடையிலான 4 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டி (பகல்-இரவு) போர்ட் எலிசபெத்தில் இன்று தொடங்குகிறது.

இதில் களம் இறங்க உள்ள டிவில்லியர்ஸ் கூறுகையில்,

'இங்குள்ள சூழலுக்கும், பகல்-இரவு டெஸ்ட் போட்டிக்கும் ஏற்ப என்னை மாற்றிக் கொள்ள முடியும்.

கடந்த 6 மாதங்களாக பழைய நிலைக்கு திரும்ப கடினமாக உழைத்தேன். ஜூலை மாதம் பிரிட்டோரியா பல்கலைக்கழகத்தில் சிவப்பு நிற பந்துகளை எதிர் கொண்டு ஆடினேன்.

அப்போது சில தொழில் நுட்ப குறைபாடுகளை சரி செய்து கொண்டேன்.

இப்போது டெஸ்ட் போட்டிக்கு தயாராக இருப்பதாக உணர்கிறேன்' என்றார்.

மேலும் டிவில்லியர்ஸ் கூறுகையில்,


'தற்போது சிறந்த வீரர்களில் ஒருவராக இந்தியாவின் விராட் கோலி திகழ்கிறார்.

முதல்முறையாக அவரை தலைவராக பார்த்ததில் இருந்து இப்போது நிறைய முன்னேற்றம் கண்டிருக கிறார். விராட் கோலி மன உறுதி மிக்க ஒருவர்.

அவர் தென்னாபிரிக்க மண்ணில் வெற்றி பெற்று வரலாறு படைக்க முயற்சிப்பார்.

இந்தியா-தென்னாபிரிக்கா தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும். அதை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன்' என்றார். (க)

# போகிற போக்கைப் பார்த்தால் அனைத்து சாதனைகளையும் முறியடித்து விடுவார் கோலி



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனிஸ் அளித்த ஒரு பேட்டியில், 'இந்திய தலைவர் விராட் கோலி சிறப்பாக விளையாடி ஓட்டங்கள் குவித்து வருகிறார்.

அவர் இதேபோன்று தொடர்ந்து விளையாடி, உடல்தகுதியைதக்கவைத்து, தனது ஆட்டத் திறனை மேம்படுத்துவத ற்கும் முக்கியத்துவம் அளித்து செயற்படுவாரே என்றால், வருங்காலங்களில் துடுப்பாட்டத்தில் உள்ள எல்லா சாதனைகளையும் உடைத்து விடுவார்' என்றார்.

சச்சின் டெண்டுல்கர், பிரையன் லாரா ஆகியோரை ஒப்பிட்டு பேசிய வக்கார் யூனிஸ், 'டெண்டுல்கரை போன்று அர்ப்பணிப்புடன் விளையாடிய வீரரை பார்த்ததில்லை. எனது பந்து வீச்சை எதிர்கொண்டவர்களில் டெண்டுல்கரே சிறந்த வீரர் என்றார். (க)

# இலங்கை அணியின் செயற்பாடுகள் திருப்தி தருவதாக இல்லை

2017ஆம் ஆண்டில் இலங்கை கிரிக்கெட் அணி அடைந்துள்ள மொத்த வெற்றிகள் மற்றும் தோல்விகளின் எண்ணிக்கை வெளியாகியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி இந்தாண்டு தொடக்கம் முதலே மிக மோசமாக செயற்பட்டு வருகிறது.

ஒருநாள் போட்டிகள், டெஸ்ட் போட்டிகள், இருபது-20 போட்டிகள் என அனைத்து வடிவங்களிலும் இலங்கை அணியின் செயற்பாடு திருப்திகரமாக இல்லை.

இந்நிலையில், Island Cricket என்ற இலங்கை கிரிக்கெட் குறித்து தகவல் தரும் இணைய பக்கத்தின் நிர்வாகி அலெக்சாண்டர் இலங்கை அணி 2017 ஆல் பெற்ற மொத்த வெற்றிகள் மற்றும் தோல்வி கள் குறித்து பதிவிட்டுள்ளார்.

அதன்படி இலங்கை அணி இந்தாண்டு மொத்தம் 57 போட்டிகளில் விளையாடியுள்ளது.இதில் 14 போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.40 போட்டிகளில் தோல்வியை தழுவியுள்ளது. 2 போட்டிகள் சமநிலையான நிலையில், ஒரு போட்டியின் முடிவு வெளியாகவில்லை என அவர் பதிவிட்டுள்ளார். (க)

## உள்ளூராட்சித் தேர்தல்...

தேர்தல் முடிவடைந்த பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூடி இது சம்பந்தமான தீர்மானத்தை எடுக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதா இல்லையா என்பது குறித்து இந்த மாதம் 31 ஆம் திகதி தீர்மானிக்கப்படவிருந்த போதிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கட்சி முழுமையாக கவனம் செலுத்தியுள்ளதால், தீர்மானம் எடுப்பதை ஒத்திவைத்துள்ள தாகவும் அமைச்சர் செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார். (ம)

## தீர்வின்றி இன்றுவரை...

அமரவீர தெரிவித்துள்ளார்.

வடபகுதி கடற்பரப்புக்களுக்கு அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் ஆண்டு தோறும் பெருமளவில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்படுகின்றனர்.

இவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருந்த படகுகளில் அநேகமானவை கடற்றொழில் அமைச்சின் தலையீட்டினை அடுத்து விடுவிக்கப்பட்டன.

ஏற்கெனவே பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடக்கு கடற்பரப்பில் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

இந்த வருடத்திலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்திய மீனவர்கள் வடக்கு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த போது கைது செய்யப்பட்டிருந்தனர்.

08.08.2017 அன்று இலங்கையின் வடபகுதி கடற்பரப்பினுள் அத்துமீறி பிரவேசித்த சுமார் 40 இற்கும் அதிகமான இந்திய மீனவர்கள் கைது.

22.08.2017அன்று நாட்டின் கடல் எல்லையை மீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 52 இந்திய மீனவர்கள் கைது.

31.08.2017 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைக்கு அமைய நாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 76 இந்திய மீனவர்கள் விடுதலை.

02.12.2017 அன்று இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் 20 மீனவர்கள் கைது.

இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் இழுவை படகுகள் காரணமாக நாட்டின் மீன் வளம் அழிவடையும் அபாயம் உள்ளதாக மீனவர்கள் கூறுகின்றனர். (ம)

## அரசாங்க ஊழியர்...

பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு ஐந்து கட்டங்களாக வருடத்திற்கு வருடம் அரச ஊழியர்களுக்கு உரித்தாகிறது. 2020ஆம் ஆண்டுடன் பத்தாயிரம் ரூபா அதிகரிப்பு பூர்த்தியாகிறது.

அது தொடர்பான சகல அறிவித்தல்களும், சம்பள அதிகரிப்பு முறைமைகளும், கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சின் நிறுவனங்களுக்கான பணிப்பாளர் நாயகம் டபிள்யு.டி.சோமதாச தெரிவித்துள்ளார்.

பத்தாயிரம் ரூபாய் கொடுப்பனவுக்கு மேலதிகமாக 20 சதவீத கொடுப்பனவு ஒன்றும் ஊழியர்களின் சம்பளத்தில் சேர்க்கப்படும். ஒவ்வொரு சம்பள அளவுக்கு ஏற்ற வகையில் ஊழியர்களின் அடுத்த மாத சம்பளத்தில் உயர்வு வழங்கப்படும் என்றும் திரு.சோமதாச தெரிவித்தார்.

தற்போது பணியில் உள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கையை நிச்சயமாக குறிப்பிட முடியாதென தெரிவித்த அவர், கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் சுமார் 12 இலட்சம் ஊழியர்கள் பணிபுரிவதாக தெரிவித்தார். (ம)

## தமிழ் மக்களுக்கு...

ஈழத்தமிழர்களுக்கு தமிழக மக்களின் ஆதரவும் அரவணைப்பும் தொடர்ந்தும் இருக்கும் என டி.டி.வி தினகரன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் இடம்பெற்ற கிறிஸ்மஸ் தின நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடன் இணைந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருந்த தினகரன், அங்கு உரையாற்றும் போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் இலங்கையின் தற்போதைய நிலவரங்கள், அரசியல் தீர்வு முயற்சிகள் தொடர்பாக தினகரன் ஆழமான கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டுள்ளார்.

அதன்போது, தமிழ் மக்களின் எதிர்கால அபிலாஷைகளுக்காக இணைந்து செயற்பட தயாராக இருப்பதாக தினகரன் குறிப்பிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

குறித்த கிறிஸ்மஸ் தின விழாவிற்கு பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அழைக்கப்பட்டிருந்த நிலையில், திடீரென அவர் சுகவீனமுற்றமையால் குறித்த பயணம் ரத்து செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மோட்டார் சைக்கிள்...

பகுதியில் மோட்டார் சைக்கிளும் பேருந்தும் விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இராமலிங்கம் சுமன் (வயது 29) என்ற இளைஞ்னே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# தரம்-ஒன்று மாணவர்களை சேர்ப்பதற்கான பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டு தரம்-ஒன்றுக்காக பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்குரிய இறுதி பெயர் பட்டியல் தற்போது பாடசாலைகளில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பான தேசிய வைபவம் கொழும்பு இசிப்பத்தான கல்லூரியில் அடுத்த மாதம் 15-ம் திகதி இடம்பெறும் எனறும், இதில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பிரதம அதிதியாக கலந்து கொள்வார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின், தேசிய பாடசாலைகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஜயந்த விக்கிரமநாயக்க இது தொடர்பாக தெரிவிக்கையில், அடுத்த மாதம் 15-ம் திகதி தரம் ஒன்றுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இதற்கு தேவையான ஆலோசனைகள் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

தாம் விண்ணப்பித்த பாடசாலைகள் கிடைக்காத பட்சத்தில் அந்த மாணவர்களுக்கு ஒரு பாடசாலையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு வலய மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம)

# மூவாயிரம் முகநூல் கணக்குகள் இலங்கையில் இவ்வாண்டு முடக்கம்

(கொழும்பு)

இலங்கையின் 3000 முகநூல் கணக்குகளை முகநூல் நிறுவனம் இந்த ஆண்டில் முடக்கியுள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பம் முதல் இது வரையில் இவ்வாறு சுமார் 3000 முகநூல் கணக்குகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது.

போலி கணக்குகளை நடத்திச் செல்லல், முகநூலைப் பயன்படுத்தி பணம் மோசடி செய்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களின் அடிப்படையில் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

முகநூல் தொடர்பில் இந்த ஆண்டில் சுமார் 3400 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் இலங்கையின் கணனி அவசர பதிலளிக்கும் பிரிவினருக்கு அறிவுறுத்தியதனைத் தொடர்ந்து, முகநூல் நிறுவனம் கணக்குகளை முடக்கியுள்ளதாக இந்தப் பிரிவின் பிரதம தகவல் பாதுகாவலர் பொறியியலாளர் ரொசான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார். (ம)

# இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் கலப்படம் செய்யப்படுவதாகக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை இலக்கு வைத்து உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகள் கலப்படம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மரந்தகஹாமுல அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பி.கே.ரஞ்சித் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் கொழும்பு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

தரமற்ற கலப்பட அரிசி வகைகளை விற்பனை செய்வதன் மூலம் கிலோ ஒன்றுக்கு சில வர்த்தகர்கள் 20 ரூபாய் லாபம் ஈட்டிக் கொள்கின்றனர்.

உள்நாட்டு சம்பா அரிசி ஒரு கிலோ 105 ரூபாயிற்கும், உள்நாட்டு நாட்டு அரிசி ஒரு கிலோ 96 ரூபாயிற்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

எனினும் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ சம்பா அரிசியின் விலை 80 ரூபாயிற்கும், நாடு ஒரு கிலோ 70 ரூபாயிற்கே விற்பனை செய்யப்படுகின்றது.

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் உள்நாட்டு அரிசி வகைகளுடன் இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளை 60 முதல் 70 வீதம் வரையில் கலப்படம் செய்து விற்பனை செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ம)

# அதிவேக நெடுஞ்சாலைகள் ஊடாக ஒரு நாளில் 30 மில்லியன் வருமானம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அதிவேக நெடுஞ்சாலைகள் ஊடாக 24 மணித்தியாலத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வாகனங்கள் பயணித்துள்ளன.

இது கடந்த சனிக்கிழமை இரவு 12 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியால காலப்பகுதியில் கணக்கிடப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு இயக்குநர் ஒபநாயக்க தெரிவித்துள்ளார்.

24 மணித்தியாலத்தில் 30 மில்லியன் ரூபாயுக்கும் அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. பொதுவாக நாள் ஒன்றுக்கு 60 - 65 ஆயிரம் வாகனங்கள் பயணிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

சாதாரண நாட்களின் வருமானம் கிட்டத்தட்ட 20 மில்லியன் ரூபாயாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 12 மணித்தியாலத்துடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் வாகனங்கள் பயணித்துள்ளதாக ஒபநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிற்கு வெளியே பயணித்த அனைத்து வாகனங்களும் ஒரே நேரத்தில் கொழும்பிற்குள் நுழைய சந்தர்ப்பம் உள்ளமையினால் மேலதிக கொடுப்பனவு கவுண்டர்களை திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (ம)

# கட்சிகளினதும் மாவட்டங்களினதும் செயலாளர்களை சந்திக்க தீர்மானம்

## தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கட்சி செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுடன் விசேட கலந்துரையாடல்களை மேற்கொள்ள தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இந்த தகவலினை அரசாங்க ஊடகப் பிரிவு விடுத்துள்ளது.

இதன்படி கட்சி செயலாளர்களுடனான சந்திப்பும் மாவட்டச் செயலாளர்களுடனான சந்திப்பும் இருவேறுபட்ட நாட்களில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி கட்சிகளின் செயலாளர்களுடனும் எதிர்வரும் 28-ம் திகதி மாவட்ட செயலாளர்களுடனும் இடம்பெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த சந்திப்பு ஒவ்வொரு மாவட்ட மட்டத்திலும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறித்த சந்திப்பின்போது தேர்தல் பரப்புரைகள் மற்றும் வாக்காளர்களுக்கும் கட்சிகளுக்குமிடையிலான ஜனநாயக விதிமுறைகள் என்பன கட்டாயமானதாக வலியுறுத்தப்படும் எனவும் நம்பப்படுகிறது. (ம)

# இலங்கையில் வசிக்கும் மாலைதீவைச் சேர்ந்தவர்களை சந்திக்க முன்னாள் ஜனாதிபதி மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் வசிக்கும் மாலைதீவைச் சேர்ந்தவர்களுடனான சந்திப்பை, அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நசீட் இரத்து செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவின் ஊடகமான ராஜே இதனைத் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் இந்த சந்திப்பு நடை பெறவிருந்தது.

ஆனால் தனிப்பட்ட காரணங்களால் அவர் இந்த சந்திப்பை இரத்து செய்திருப்பதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் மாலைதீவில் நிலவும் அரசியல் குழப்பத்துக்கான தீர்வை காணும் பொருட்டு, அந்த நாட்டின் சகல கட்சிகளும் இணைந்த குழு ஒன்று இலங்கையில் வைத்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கூறப்படுகிறது. அடுத்த வருட முற்பகுதியில் இந்த சந்திப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு மக்கள் கருத்து கணிப்பாக கருதி வாக்களிக்க வேண்டும்-மகிந்த

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலை ஒரு மக்கள் கருத்து கணிப்பாக கருதி, மக்கள் வாக்களிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹோமாக பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் அவர் இதனை தெரிவித்தார்.

ஆளும் அரசாங்கத்திடம் நாட்டை கையளித்த போது காணப்பட்ட நிலைமை தற்போது இல்லை.

கல்வித்துறை பாதிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டின் வளங்கள் விற்பனை செய்யப்படுகிறது.

இவற்றை கருத்தில் கொண்டு அடுத்த தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

## தமிழ் - முஸ்லிம்...

மாமனிதரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கத்தின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று மாலை யாழில் நடைபெற்றது. இதன்போது நினைவுரையாற்றும் போதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

செஞ்சோலை படுகொலை விசாரணை நடைபெற்ற போது அந்த குற்றத்தை புரிந்தவர்கள் தப்பிக்கும் நிலை காணப்பட்டிருந்தது. அப்போது அவர் தமிழர் விடுதலை கூட்டணியில் இருந்தாலும், என்னுடைய தந்தையை அணுகி இந்த படுகொலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வாதாடுமாறு கோரியிருந்தார். அவரது கோரிக்கையை ஏற்று எனது தந்தையும் பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பில் ஆஜராகி இருந்தார். இந்த விசாரணைகள் நடைபெற்ற காலப்பகுதியில் எனது தந்தையை பாதுகாக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தார்.

அந்தளவுக்கு செஞ்சோலை படுகொலைக்கு நீதி வேண்டும் என்ற உறுதியுடன் மாமனிதர் செயற்பட்டிருந்தார். எவ்வாறு மாற்று கட்சி உறுப்பினர்களுடன் எனது தந்தை நெருக்கமாக பழகுகின்றார் என நான் சிந்தித்தது உண்டு. எனினும் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் எமது போராட்டத்திற்கு மாறாக செயற்பட்டிருந்தாலும், தமிழர் விடுதலை கூட்டணியின் பாராளுமன்ற குழு என்ற பதவியை வைத்து கொண்டு எமக்காக கடுமையாக பாடுபட்டவர்.

என்னை பொறுத்தவரை இவரை கட்சி ரீதியாக பார்ப்பதனை காட்டிலும் ஒரு தனி மனிதனாக பார்க்க வேண்டும் என்று தான் கூறுவேன். 2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாகிய போது, அதன் தேர்தல் வெற்றியும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த காலப்பகுதியில் தான் என்னுடைய தாயுடன் பேசி என்னை அரசியலுக்குள் கொண்டு வந்தவர் தான் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம். இந்தளவு தூரத்திற்கு எனது குடும்பம் அவர் மீது மதிப்பு வைத்திருந்தது.

குமார் உயிரோடு இருந்திருந்தால் எந்தளவுக்கு கஜனை அரசியலுக்குள் வளர்த்து விட்டிருப்பாரோ அந்தளவுக்கு நான் கஜனை அரசியலில் வளர்த்து விடுவேன் என்று அன்று கூறியிருந்தார். என்னுடைய தந்தையார் உட்பட எம்மோடு பழகிய பலர் மாமனிதர்களாக இருந்துள்ளனர். எனினும் அனைத்து மாமனிதர்களோடு ஒப்பிட்டு பார்க்கையில் ஒரு விசேட முக்கியத்துவம் இருக்கின்றது. ஏனைய மாமனிதர்கள் தமிழீழ விடுதலை புலிகளை பகிரங்கமாக ஆதரித்ததன் காரணத்தாலும்,

அல்லது அரசியல் ரீதியாக புலிகளை பலப்படுத்த முயன்றதன் காரணமாகவும் சுட்டு கொல்லப்பட்டனர். ஆனால் மாமனிதர்களான ஜோசேப் பரராசசிங்கம் மற்றும் விக்னேஸ்வரன் ஆகிய இருவரும், புலிகள் இரண்டாக பிளவடைந்த நிலையிலும் வல்லரசுகள் புலிகளை அழிப்பதற்கு முன்னின்று செயற்பட்டு கொண்டிருந்த நிலையிலும், எமது விடுதலை போராட்டம் கேள்விக்குறியாக்கிய நிலையில், மட்டக்களப்பில் இருந்து கொண்டு செயற்பட்டவர்.

இன்று மாமனிதர் விக்னேஸ்வரன் அல்லது ஜோசப் பரராஜசிங்கம் உயிரோடு இருந்திருந்தால், தற்போது இருக்கும் தலைமைத்துவம் ஓரங்கட்டப்பட்டிருக்கும். தற்போது கிழக்கு மாகாணத்தை தமிழர்கள் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் இருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. தமிழ்- முஸ்லிம் மக்களுடைய உறவு கட்டியெழுப்பட்டிருக்கும். பிழையான முஸ்லிம் தலைமைத்துவங்களை மீறியும் முஸ்லிம்கள் சிவில் சமூகங்கள் ஊடாக தமிழ்- முஸ்லிம் உறவினை கட்டியெழுப்பியவர்.

தமிழ்-முஸ்லிம் உறவை கட்டியெழுப்ப மாமனிதர் செயற்பட்டமையால் தான் அவர் விசேடமாக குறிவைக்கப்பட்டார். இந்த உண்மைகள் எமது மக்களுக்கு போய் சேர வேண்டும். இந்த பணி மேலும் தொடர வேண்டும். அவருடைய ஆழமான பங்களிப்பை எமது மக்களுக்கு கொண்டு சென்று எங்கள் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்கள் சரியான பாதையில் முன்செல்ல நாங்கள் பாலமாக அமைய வேண்டும்.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் இன்று உயிருடன் இருந்திருந்தால் தமிழ்த் தேசிய முன்னணிக்கு அவர் தலைமை தாங்கியிருப்பார் என அவர் மேலும் தெரிவித்தார்.(ம-4)

## ஜோசப் பரராஜசிங்...

தியிருந்தது. பிற்பகல் 5.30 மணியளவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தலைமையில் யாழில் உள்ள அலுவலகத்தில் அக வணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் திருவுருவப் படத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மலர் மாலை அணிவித்தார்.

நினைவுச் சுடரினை நல்லூர்த் தொகுதி வேட்பாளர் வாசுகி சுதாகர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மலரஞ்சலியும் நினைவுரைகளும் இடம்பெற்றன. இதே போன்று கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு தாமரைக் கேணியில் கட்சியின் மாவட்ட இணைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இவ்நினைவேந்தல்நிகழ்வில்கட்சியின் ஆதரவாளர்கள் உணர்வாளர்கள் என பலர் கலந்துகொண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கத்தின் உருவப்படத்திற்கு கட்சி இணைப்பாளர், சுரேஷ் மட்டுநகரப் பொறுப்பாளர் உமாகாந்தன், வவுணதீவு பொறுப்பாளர் வினோதன், வெல்லாவெளி பொறுப்பாளர் குமாரசிங்கம், வாழைச்சேனை இளைஞர் அணித்தலைவர் குணசேகரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு ஈகச் சுடர் ஏற்றி மலர் தூவி ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். (ம-4-9)

## இலங்கைக்கு 66...

தப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் இந்த சுட்டெண் அடிப்படையில் தெற்காசியாவில் இலங்கை முன்னிலையில் இருக்கிறது.

இந்தியா மொத்த பட்டியலில் 74-ம் இடத்திலும், பாகிஸ்தான் 77-ம் இடத்திலும் உள்ளன. நேபாளம் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகள் 80 மற்றும் 81-ம் இடங்களில் இருக்கின்றன. பங்களாதேஷ 89-ம் இடத்தில் உள்ளது. (ம)

## உள்ளூர் பேருந்து...

வவுனியாவில் 195 மில்லியன் ரூபாய் பெறுமதியில் புதிய பேருந்து நிலையமானது கடந்த ஜனவரி மாதம் திறக்கப்பட்டு செயற்படாத நிலையில் காணப்பட்டிருந்தது.

இந் நிலையில் போக்குவரத்து அமைச்சராக வட மாகாண முதலமைச்சர் பொறுப்பேற்றதன் பின்னர் புதிய பேருந்து நிலையத்தினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததன் பிரகாரம் 25 ஆம் திகதியில் இருந்து தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் சேவையில் ஈடுபடவேண்டும் என உத்தரவிட்டிருந்தார்.

அத்துடன் பழைய பேருந்து நிலையத்தினை மூடுவதற்கான ஏற்பாடுகள் 24 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியில் இருந்து எடுக்குமாறும் வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமது நிலைப்பாட்டை தெரிவித்த நிலையிலும் வர்த்தகர் சங்கத்தின் கருத்தை ஏற்று உள்ளூர் சேவையினை பழைய பேருந்து நிலையமான இ.போ.ச.பேருந்துகள் சேவையில் ஈடுபடும் இடத்தில் இருந்து முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகளை செய்து தருமாறு இணைந்து கேட்டுக்கொண்டனர்.

இதற்கான கால அவகாசமாக இன்று காலை 10 மணி வரை வழங்கப்பட்ட நிலையில் செயலாளர் உள்ளடங்கிய குழு உடனடியாக முதலமைச்சருடன் கலந்துரையாடி பழைய பேருந்து நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபட தனியாருக்கு இடம் ஒதுக்கி கொடுக்கப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை வவுனியா நகரசபையின் செயலாளர் முன்னெடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (ம-250)

## வடக்கு மாகாண...

சினைகளை எதிர்நோக்குவதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இந்தநிலையில் இதுதொடர்பில் வட மாகாண ஆளுநரின் அனுமதியுடன் தேவையான நடவடிக்கையை முன்னெடுக்குமாறு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கல்வி அமைச்சரிடம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பாடசாலை ஆரம்பிக்கும் முன்பதாக தீர்வினை வழங்குமாறு யோசனையை முன்வைத்துள்ள வடமாகாண சபை உறுப்பினர்கள் வட மாகாண கல்வி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பேரு...

பயணிகளை ஏற்றிவந்த தனியார் பேருந்து மற்றும் ஹயஸ் வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் எவருக்கும் பாதிப்பில்லை எனினும் ஹயஸ் வாகனத்தின் முன்பக்கம் சேதமடைந்ததுடன் பஸ்ஸின் முன்பக்க ஒரு பகுதியும் சேதமடைந்துள்ளன. (ம-17)

## மரண அறிவித்தல்

ஜனனம் 19 . 10 . 1922



மரணம் 24 . 12 . 2017

### திருமதி முருகேசு செல்லம்மா

வற்றாப்பளையைச் சேர்ந்த திருமதி முருகேசு செல்லம்மா அவர்கள் நேற்று முன்தினம் (24.12.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி முருகேசு அவர்களின் அன்பு மனைவியும், குகதாசன் (ஓய்வுநிலை அதிபர், தலைவர் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலனசபை), தனபாலசிங்கம் (தண்ணீரூற்று), நடராசா (நாகராசா - குருமன்காடு, வவுனியா), சுப்பிரமணியம் (கனடா), யோகராணி நவரத்தினம் (கனடா), தனவதி சிவயோகநாதன் (கனடா), விவேகானந்தன் (நிறைவேற்று பொறியியலாளர் கட்டிடங்கள் திணைக்களம், முல்லைத்தீவு), ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வற்றாப்பளையிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (27.12.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் வற்றாப்பளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

வற்றாப்பளை,
முள்ளியவளை.

மு.குகதாசன் (மகன் - 0770891776),
மு.விவேகானந்தன் (மகன் - 0718457306)

(சி-940)


விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-788)

UK-550*/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



Study Engineering in INDIA



Gnanamani College of Technology (GCT)
Affiliated to Anna University

* B.E- Civil Engineering
* B.E- Computer Science and Engineering
* B.E- Electrical and Electronics Engineering
* B.E- Electronics and Communication Engineering
* B.E- Mechanical Engineering

Duration: 4 Years | Medium- English

ICS Study Overseas

Admission Help line
076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road, Colombo - 06


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.